விலை ரூபா 20 பக்கங்கள் 32

# உதயன்

சுடர் 31 கதிர் 055 வள்ளுவர் ஆண்டு 2047 தை 06, புதன்கிழமை 20.01.2016

மீண்டும் யாழ் நகரில்
ரூபி ஜூவெல்லறி
இன்று (20.01.2016) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ் மாநகரசபை பிரதி ஆணையாளர் அருளானந்தம் அவர்களால் திறந்து வைக்கப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்

உரிமையாளர்கள்:
ரூபி ஜூவெல்லறி
இல.227,229, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 6919

## பல்கலை. அனுமதியில் யாழ்ப்பாணம் முதலிடம்

கொழும்பு, ஜன. 20
பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ள பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை விகிதாசாரத்தில் யாழ்.மாவட்டம் முதலிடம் பிடித்துள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
2015 ஆம் ஆண்டு ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்து பல்கலைக் பக். 29

## ஐ.நா. தீர்மானத்தை செயற்படுத்தாமல் ஒருபோதுமே விலகிவிட முடியாது அரசு

### தென்னாபிரிக்கத் தூதுவரிடம் சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 20
ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதிலிருந்து இலங்கை அரசானது ஒருபோதும் விலக முடியாது. அந்தப் பிரேரணையில் சொல்லப்பட்ட விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தியாக வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் ஜெப் டொஜ்ஜை பக். 26



## டக்ளஸ் மீதான வழக்கின் விசாரணைகள் ஆரம்பம்

### சூளைமேடு கொலை தொடர்பில்

கொழும்பு, ஜன. 20
ஈ.பி.டி.பி.யின் பொதுச் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிரான, சூளைமேடு கொலை வழக்கில் சாட்சி விசாரணை சென்னை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நேற்று முன்



தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது.
சென்னை சூளைமேட்டில் 1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சட்டவாளர் திரு நாவுக்கரசு இறந்தார். இது தொடர்பாக பக். 29

# ராணுவம் வசமுள்ள காணிகளின் விவரம் கோருகிறார் மைத்திரி

### ஒரு மாத காலத்துக்குள் வடக்குக்கு நேரில் சென்று அறிக்கை சமர்ப்பிக்க பாதுகாப்புச் செயலருக்குப் பணிப்பு

கொழும்பு, ஜனவரி 20
வடக்கு மாகாணக் காணிகள் விடுவிப்புத் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒரு மாதத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என நேற்று ஜனாதிபதி உத்தரவிட்டார்.
வடக்கு மாகாணத்தில் படை யினர் வசம் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் நேற்றுக் கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குக் குறித்த உத்தரவை ஜனாதிபதி பிறப்பித்துள்ளார்.
ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநர், மீள்குடியேற்ற அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர், 5 மாவட்டச் செயலாளர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவத் தளபதி ஆகியோர் பங்கு கொண் பக். 26

## உறுப்பினர்களின் கோரிக்கைக்கு வடக்கு முதல்வர் பதில் இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 20
வடக்கு மாகாண ஆளும் கட்சி உறுப்பினர்கள் - அமைச்சர்களுடனான சந்திப்புக்கு இன்று மாலை 5 மணிக்குள் நேரம் ஒதுக்கித் தரவேண்டும் என்று, உறுப்பினர்கள் - அமைச்சர்கள் இணைந்து கூட்டாக விடுத்த கோரிக்கைக்கு நேற்று இரவுவரை பக். 29

## போர்க்குற்ற விசாரணைக்கு 4 விதமான நீதிக் கட்டமைப்பு

### ஆராய்கின்றது இலங்கை அரசு

கொழும்பு, ஜன. 20
போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான 4 விதமான நீதித்துறைக் கட்டமைப்புக்கள் தொடர்பில் அரசு ஆராய்ந்து வருகின்றது. இவை அனைத்தும் கலப்பு நீதிமன்றப் பக். 28

முச்சந்தி முரளி



அப்ப ஏதாவது உருப்படியா செய்யப் போறாரோ....

## மன்னார் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்கு வரவில்லை விக்கி

### உள்ளூராட்சி சார்ந்த அபிவிருத்தி குறித்து ஆராய்வதில் இழுபறிநிலை

மன்னார், ஜன.20
மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவரான வடக்கு மாகாண முதலமைச்சரும் உள்ளூராட்சி அமைச்சருமான க.வி. விக்னேஸ்வரன் வருகைதராத நிலையில், மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் உள்ளூராட்சி சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களை ஆராயும்போது இழுபறி நிலை காணப்பட்டது.
மன்னார் பக். 26

## 30 ஆண்டுகளின் பின் கொழும்புக்கு விமானம் தாங்கிப் போர்க் கப்பல்



கொழும்பு, ஜன. 20
முப்பது ஆண்டுகளின் பின்னர் விமானம் தாங்கிப் போர்க் கப்பல் ஒன்று கொழும்புத் துறை முகத்துக்கு நாளை வியாழக்கிழமை பக். 26

## மேலும் 14 தமிழக மீனவர்கள் நேற்று விடுதலை

மன்னார், ஜன. 20
இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறிக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மேலும் 14 தமிழக மீனவர்கள் நேற்று மன்னார் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி மற்றும் ஜன பக். 26

## இலங்கையில் நீதியான தீர்வு காண்பதில் கனடா அக்கறை

### சம்பந்தனுக்கு ‘வாழும் வீரர்’ விருது வழங்கும் நிகழ்வில் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் உரை

கொழும்பு, ஜன. 20
இலங்கையில் நீடித்து நிலைத்து வரும் இனப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான - நீதியான தீர்வு காண்பதில் கனடா அக்கறையோடு இருப்பதாகக் கனேடிய வெளியுறவு அமைச்சர் ஸ்ரபேன் டியோன் தெரிவித்துள்ளார். பக். 29





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தப்படாத துறைமுகத்தால் தொழில் செய்ய முடியாத நிலை

## *வளலாய்ப் பகுதி மீனவர்கள் விசனம் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜன.20

கடந்த வருடம் பெய்த பருவ மழை காரணமாக முற்றாக சேதமடைந்த வான் (மீன்பிடித் துறை முகம்) இரண்டு மாதங்கள் கடந்தும் புனரமைக்கப்படாதுள்ளது. அதனால் தாம் பொருளாதார ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக வளலாய்ப் பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட இந்தப் பகுதியில் தற்போது 297 குடும்பங்கள் மீள்குடியமர விருப்பம் தெரிவித்துப் பதிவுகளை மேற்கொண்டுள்ளன. 64 குடும்பங்கள் தற்போது நிரந்தரமாகக் குடியமர்ந்துள்ளனர். மீள்குடியமர்ந்த ஜே-284 கிராம சேவையாளர் பிரிவில் மீனவக் குடும்பங்களே அதிகம் மீள்குடியேறியுள்ளனர்.

இவர்களின் வாழ்வாதாரமாக மீன்பிடி காணப்படுகிறது. இந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் பெய்த மழையும், கடல் அலையின் சீற்றமும் காரணமாக அமைக்கப்பட்ட இரண்டு வான்களும் முற்றாகச் சேதமடைந்துள்ளன. தற்போது இரண்டு மாதங்கள் கடந்தும் சேதமடைந்த வான்கள் புனரமைப்பின்றி படகுகள் உள்ளே செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. இதனால் தாம் படகுகளைக் கடற்கரையில் ஏற்றி வைத்துள்ளோம் என்று மீனவர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக அந்தப் பகுதி மீனவரான சதானந்தம் உதயசூரியன் தெரிவித்ததாவது-

கடந்த இரண்டு மாதங்களாக கடல் சீற்றமாகக் காணப்பட்டு மீன்பிடிக்க முடியாத நிலை காணப்பட்டது. தற்போது கடல் சீற்றம் குறைந்து மீன்பிடிக்கச் செல்லலாம் என நினைத்தால் வான் சேதமடைந்துள்ளது. உரிய அதிகாரிகளிடம் இது தொடர்பில் தெரிவித்தும் இன்று செய்து தருகிறோம், நாளை செய்து தருகிறோம் என இழுத்தடிக்கிறார்கள். இதனால் படகுகள் கடலுக்குச் செல்ல முடியாமல் இங்குள்ள மீனவர்கள் மாற்றுத் தொழிலை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதனால் பாதிக்கப்படுவது இங்குள்ள மக்களே தவிர அதிகாரிகள் அல்ல. சேவா லங்கா தன்னார்வ தொண்டு நிறுவனம் ஊடாகத் தான் இந்த வான்கள் செய்து தரப்பட்டன. எனினும் அமைக்கப்பட்ட வான்கள், உரிய முறையில் அமைக்கப்படவில்லை. கடற் சேறும், கற்களையும் கொண்டே இந்தத் துறைமுகம் அமைக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் பல லட்சம் ரூபா பெறுமதியான படகைக் கொண்டு எவ்வாறு தொழில் செய்ய முடியும்.- என்றார்.

இது தொடர்பில் கோப்பாய் பிரதேச செயலர் உரிய நடவடிக்கை எடுத்து, தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துவதற்கு, சேதமடைந்த வானை திருத்தித் தருமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஜ-107)

# சகோதரியின் கணவரால் சிறுமி துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம், ஜன.20

சகோதரியின் கணவரால் 14 வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார். துஷ்பிரயோகம் செய்த நபர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய குடும்பஸ்தரே கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மனைவியை வெளியில் அழைத்துச் சென்றுவிட்டு வீட்டுக்குத் தனியாக வந்தவர், வீட்டிலிருந்த தனது மைத்துனியான சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். சகோதரி வீட்டுக்கு வந்த பின்னர் சிறுமி சகோதரியிடம் நடந்தவற்றைத் தெரிவித்துள்ளார். அதையடுத்து சகோதரி மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்ததுடன், இளைய சகோதரியை யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்துள்ளார்.

சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தவரை மானிப்பாய் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்துள்ளனர். குறித்த நபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-106)



*கிளிநொச்சி நெல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் விதை நடுகைப்பொருள் அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பொங்கல் மற்றும் அறுவடை விழா நேற்று காலை 9மணியளவில் நடைபெற்றது. பொங்கல் நிகழ்வைத் தொடர்ந்து நெல் அறுவடை நிகழ்வு இடம் பெற்றது. விருந்தினர்களாகக் கலந்து கொண்டவர்கள் அரிவாளால் அறுவடை செய்த பின் இயந்திரம் மூலம் அறுவடை செய்யப்பட்டது. இதனைப் பொதுமக்கள் நிலையத்துக்கு வந்து பார்வையிட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பத்தலகொட நெல் ஆராய்ச்சி நிலையப் பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர், மாவட்ட பணிப்பாளர்கள் துறை சார் உத்தியோகத்தர்கள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர். (ற)*

# கஞ்சா வைத்திருந்தவருக்கு ரூபா 80 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜன. 20

20 கிலோகிராம் கஞ்சாவை உடைமையில்வைத்திருந்ததோடு அவற்றை விற்பனை செய்தும் வந்தவருக்கு யாழ்.மேல்நீதிமன்று 80 ஆயிரம் ரூபா அபராதம்விதித்துத்தீர்ப்பளித்துள்ளது. கிளிநொச்சி உதய நகரைச் சேர்ந்த ஒருவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது.

குறித்த நபர் 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். அவர் மீதான வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்.மேல்நீதிமன்றுக்குக் கடந்த ஏப்ரலில் பாரப்படுத்தப்பட்டு வழக்கு நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இந்த வழக்குத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது குறித்த நபர்கஞ்சாபோதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்த குற்றத்துக்காக அவருக்கு 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதனைச் செலுத்தத் தவறின் 2 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் மேல்நீதிமன்று நேற்று முன்தினம் உத்தரவிட்டது. (ஜ-4)

# வீடுடைத்து 12 பவுண் நகைகள் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன.20

நள்ளிரவில் ஆயுதங்களுடன் வீடுடைத்து உள்நுழைந்த கொள்ளைக் கும்பல் ஒன்று 12 பவுண் நகைகள் மற்றும் 25 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 2 மணியளவில் உடுவில் மகளிர் கல்லூரியை அண்மித்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் வயோதிபப் பெண் ஒருவரே இருந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. முகத்தை மறைத்தவாறு சென்றவர்களே கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-4)

# யாழ்.பல்கலையின் 31 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 31 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நேற்று ஆரம்பமாகியது.






யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சி.பத்மநாதன் பட்டதாரிகளுக்கான பட்டங்களை வழங்கிக் கௌரவித்தார். நேற்று இடம்பெற்ற நான்கு அமர்வு களிலும் கலந்துகொண்டு 760 பட்டதாரி மாணவர்கள் தங்களது பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இன்று இறுதி நாளாக இடம்பெறவுள்ள பட்டமளிப்பு வைபவ நிகழ்வின் போது நான்கு அமர்வுகள் இடம்பெறவுள்ளன. காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது அமர் வின் போது 181 மாணவர்கள் பட்டங்களைப் பெறவுள்ளனர். மு.ப. 10.45 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது அமர்வில் 193 மாணவர்களும் பி.ப. 2 மணிக்கு மூன்றாவது அமர்வின்போது 188 மாணவர்களும் பி.ப. 3.30 மணிக்கு நான்காவது அமர்வில் 199 மாணவர்களும் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

இன்றைய பட்டமளிப்பு வைபவத்தின் போது யாழ். பல்கலைக்கழக மற்றும் யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் தங்களுக்கான பட்டங்களைப் பெறவுள்ளனர். (ற-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன.20

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்புவிழாநிகழ்வுகள் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடை பெறவுள்ளன. நிலையத்தின் தலைவர் த.பேரின்ப நாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், விருந்தினராக யுவ பிரெண்ட் பவுண்டேசன் தலைவர் க.செவ்வேள் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

(த-ஐ-ரி5)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. செ.செல்வச்சந்திரன்

எமது கல்லூரி ஆசிரியர் திரு.செ. செல்வச்சந்திரன் அவர்கள் ஆசிரியர்களுக்கான தேசிய மட்ட விளையாட்டுக்களில் நான்கு பதக்கங்களைப் பெற்றமையினையிட்டு மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

Best Wishes

நலன்புரிக் கழகம்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று (19.01.2016)
யாழ். பல்கலைக்கழகத்தில்
இடம்பெற்ற 31ஆவது பட்டமளிப்பு
விழாவில்
விஞ்ஞானமாணி தாதியியல்
(B.Sc in Nursing)
பட்டத்தைப் பெற்ற எமது
ஏகப் புத்திரனான

செல்வன்

**நடராசா நிதர்சன்**

அவர்களை மேலும் பல
பட்டங்கள் பெற்று
உயர வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:-
அப்பா, அம்மா, அக்கா,
தங்கைகள்.
மல்லாகம், (மயிலிட்டி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.க.நித்தியானந்தன்
(B.A(Hons),PGDE,M.Ed)



திருமதி.சு.மதியானந்தன்
B.Sc(Sp.com.Sc),PGDE,(Merit)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று (19.01.2016) செவ்வாய்க் கிழமை நடைபெற்ற பொதுப்பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணிப் பட்டம் பெறும் ஆசிரியர் திரு. கணபதிப்பிள்ளை நித்தியானந்தன் மற்றும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெறும் ஆசிரியை திருமதி. சுகந்தினி மதியானந்தன் அவர்களையும் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நலன்புரி கழகம்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## உளம்கனிந்த வாழ்த்துக்கள்

எமது கல்வி நிறுவனத்தில்
தமிழ் கற்பிக்கும் ஆசானும்
சிரேஸ்ட தமிழ் ஆசிரியருமான

**A.K. கீர்த்திராயன்**

M.A. (Hons) in Tamil (Second Upper)
அவர்கள் யாழ்ப்பாண பல்கலை
கழகத்தில் 31ஆவது பட்ட
மளிப்பு விழாவில் முது
கலைமாணி பட்டத்தினை
பெறுவதையிட்டு பாராட்டி
வாழ்த்துகின்றோம். இவர்
மென்மேலும் பல பட்டங்கள்
பெற வாழ்த்துகின்றோம்.



இயக்குநர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
NEC கல்வி நிலையம்.
யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**இராசரத்தினம் கீதாருபி**



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில்
இன்று (20.01.2016) நடைபெறவுள்ள
31 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில்
BA (History) சிறப்புக் கலைமாணிப்
பட்டத்தைப் பெறவுள்ள அன்புச் செல்வம்
இ.கீதாரூபியை பாராட்டி
வாழ்த்துவதோடு மென்மேலும்
பல பட்டங்கள் பெற்றுச்
சிறப்புற வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:-
தாய்-சரஸ்வதி
அக்காமார்
அண்ணாமார், தம்பி,
அத்தான்மார், அண்ணி.
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

Best Wishes

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
31ஆவது பட்டமளிப்பு விழாவில்
முதுகலைமாணி பட்டத்தைப் பெறும்
எமது கல்வி நிறுவனத்தின்
தமிழ் ஆசான்

**A.K. கீர்த்திராயன்**

M.A. (Hons) in Tamil Second Upper
அவர்களை
பாராட்டி வாழ்த்துகின்றோம்



வாழ்த்துவோர்:-
A/L 2016, 2017, 2018
கலைப்பிரிவு மாணவர்கள்
மொடேன்/கல்வி நிலையம்-வல்வெட்டி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 31ஆவது பொதுப்
பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (சிறப்பு)
பட்டத்தினைப் பெறுவதோடு



Professor.
**A.Thurairajah**
Gold Medal for All - round performance - University of Jaffna.

* Arts Faculty Gold Medal
* Inter Faculty Gold Medal

Winner

சகலதுறை
சாதனையாளருக்கான
இரண்டு
தங்கப்பதக்கங்களையும்
பெற்றுக்கொள்ளும்
எமது நண்பன்

**தெய்வேந்திரம்
இந்திரகுமார்**
B.A (Hons)

Best Wishes

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : 33ஆவது அணி நண்பர்கள் - கலைப்பீடம்
யாழ் பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரங்கள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறொயிலர் .கல்பேட் மொத்தமாவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது.
புறொயிலர்- 400
கல்பேட்-500

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி.ஆனைக்கோட்டை
T.P: 077 868 9500

**படி லொறி விற்பனைக்கு**

டோயோடா டவுன் ஏஸ்.டீசல். ஜப்பான் எல்மினியம் புல்பொடி.GN2691,1996, 1,275,000/=டிலிவரி.பேக்கரி. பொதிகள் சேவைகளுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

தொடர்பு: 076 867 8609.
077 227 8609

**ஆசிரியர் தேவை**

G.C.E (A/L) (EDEXEL)
Economics,Commerce, Accounts
கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை.
Beefort International School
136,Navalar Road, Jaffna

**தனி/ குழு வகுப்புகள் (A/L)**
தொடர்பு:
077 773 0840

Chemistry/ Biology இரு மொழிகளிலும் பரீட்சை வினாக்களிலிருந்து பாடம் கற்பித்தல்

**மணமகள் தேவை**
தொடர்பு:
076 924 7912

யாழ். இந்து கௌரவ குடும்பம் பொறியியலாளர்(B.sc civil Eng) பிறந்த வருடம் 1988 நட்சத்திரம் கேட்டை 4 ஆம் பாதம் செவ்வாய் 2 இல் கிரகபாவம் 31 மணமகனுக்கு உயர் தொழில் கல்வித் தகைமையுள்ள பொருத்தமான மணமகள் தேவை.

# பாராட்டி வாழ்த்துகிறோம்



Congratulations

யாழ். பல்கலைக்கழகத்தின்
31 ஆவது பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணி (சிறப்பு) (M.Ed (Hons) பட்டம்பெற்ற சங்கானைக் கோட்டக்கல்வி அலுவலர்

**திரு.சூசைப்பிள்ளை நோபர்ட் உதயகுமார்**
(BA,PGDE,M.Ed (Hons) - SLPS - I

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அதிபர்கள்,
சங்கானைக் கல்விக் கோட்டம்

(க.17297)(12.3.6)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



ந.அகிலன்.
Dip.in Teach.,B.A.,P.G.D.E.,
M.Ed., M.A.(Tamil)



து.சர்வேந்திரகுமார்
Dip.in Teach.,B.A.,P.G.D.E.,
M.A.(Tamil)



கு.ஜோதிரட்ணராஜா
Dip.in Teach.,B.A.,P.G.D.E.,
M.Ed., M.A.(Tamil)

Best Wishes

இன்று (20.01.2016) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 31 வது பட்டமளிப்புவிழாவில் எமது கல்லூரி ஆசிரியர்களான ந.அகிலன், து.சர்வேந்திரகுமார் ஆகிய இருவரும் முதுகலைமாணி (தமிழ்) பட்டத்தினையும், கு.ஜோதிரட்ணராஜா கல்வி முதுமாணிப்பட்டத்தினையும் பெற்று எம் கல்லூரிக்குச் சிறப்பைச் சேர்த்த இவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.



# ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில் - நயினாதீவு

## கூறுவிலை கோரல் - (2016 ஆம் ஆண்டுக்கானது)

மேற்படி கோயிலுக்குத் தேவையான பின்வரும் பொருள்களை (கூலிகள் உட்பட) கோயில் வளாகத்திற்குக் கொண்டுவந்து வழங்குவதற்கான கூறுவிலைகள் இத்தால் கோரப்படுகின்றது. கூறுவிலைகள் **2016.02.05 ஆம் திகதி பி.ப. 5.00 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி "செயலாளர்,ஸ்ரீநாகபூசணி அம்மன்கோயில் நயினாதீவு"**எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்படவேண்டும் அல்லது கோயில் நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கூறு விலைப்பெட்டியுள் இடப்பட வேண்டும்.

| பொருள்கள் விவரம் | கொள்வனவு செய்யவுள்ள அளவு |
|---|---|
| 01. 6" - 9" - கருங்கல் - ஒரு ரைக்ரருக்கானது | 32 ரைக்ரர் |
| 02. ¾" - சல்லிக்கல் - ஒரு ரைக்ரருக்கானது | 65 ரைக்ரர் |
| 03. 1" சல்லிக்கல் - ஒரு ரைகரருக்கனாது | 16 ரைக்ரர் |
| 04. ½" சல்லிக்கல் - ஒரு ரைக்கருக்கானது | 8 ரைக்கர் |
| 05. மிற்சுமி சீமெந்து ஒரு பைக்கட்டுக்கானது | 1650 பை |
| 06. 12mm. CN முறுக்குக்கம்பி -ஒருகம்பிக்கானது | 48 |
| 07. 6 mm. ¼" கம்பி ஒரு கிலோவுக்கானது | 90 kg |
| 08. கட்டுக்கம்பி ஒரு கிலோவுக்கானது | 20 kg |
| 09.4"கொங்கிறீற் கட்டி (அரிகல்) - ஒன்றுக்கானது | 25000 கற்கள் |
| 10.5"கொங்கிறீற் கட்டி (அரிகல்) - ஒன்றுக்கானது | 800 கற்கள் |

**குறிப்பு:**

1. குறிகட்டுவான் இறங்கு துறையிலிருந்து நயினாதீவு இறங்கு துறைவரைக்குமான கொண்டு செல் கூலி உட்பட கூறுவிலை அமையவேண்டும்.
2. அரிகல் கொள்வனவுக்கு முன்பாக - கற்கள் பரிசீலிக்கப்படும்
3. அஞ்சல் மூலம் அனுப்புவோர் - உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கூறுவிலை" எனக் குறிப்பிடவேண்டும்.

(சி/28733)
(13.15.17.18)

பொ.அன்பரசன்
செயலாளர்,
அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு.

# இளவாலை யங்ஹென்றீசியன்

## நாயகனுக்கு இன்று பட்டமளிப்பு விழா



Congratulations

இளவாலை யங்ஹென்றீசியன் அணியின் நம்பிக்கை நட்சத்திரமாகத் தன்னை அறிமுகப்படுத்தி அதன் மூலம் இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியில் இடம்பிடித்து பல்வேறு நாடுகளுக்குச் சென்று பல போட்டிகளிலும் பங்குபற்றி யாழ். மண்ணுக்கும் எம் தாய் நாட்டுக்கும் பெருமை தேடித் தந்த

**திரு. செபமாலை நாயகம் ஞானரூபன்**

இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள 31ஆவது பட்டமளிப்பு விழாவில் BA(Hons)Community and Regional Planning பட்டத்தினைப்பெறுவதையிட்டு எமது ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் பாராட்டுவதையிட்டு பெருமையடைகின்றோம்.

**இவர் பங்குபற்றிய சர்வதேசிய போட்டித் தொடர்கள்**

* Dialog Champions League Champion 2014 - 2015 Season
* 2014 International Invitation Match in Bangala desh
* 2015 - Bangabandhu gold Cup
* 2015 - Sheik kamal International club tournament.
* 2015 - Saff Suzuki cup in india.
* 2016 - Banga Bandhu Gold Cup
* 2015 - Worldcup quality round in Bhotan.

வாழ்த்துவோர்:
யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம்,
இளவாலை.

Best Wishes

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
31ஆவது பட்டமளிப்பு விழாவில்
சிறப்புக்கலைமாணி பட்டத்தினை பெறும்

**ரஜீபன்-ரேகா** B.A (Hons)

அவர்களை உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
தந்தை-வேலுப்பிள்ளை
கணவர்-அ.ரஜீபன்
அருமைரத்தினம் குடும்பம்.



## பாராட்டி வாழ்த்துகிறோம்




**திரு.கதிர்காமத்தையன் ரஜனிகாந்தன்**
B.A(Hons), M.A

இன்று (20.01.2016) புதன்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற 31 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் தமிழ் துறையில் முதுகலைமாணி (M.A) பட்டம் பெறுவதையிட்டு மனமார வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:
அம்மா, மனைவி, அண்ணா, அண்ணி,தங்கைமார்,
மைத்துனன்,மகள்,மருமகன்,மருமகள்,
மீசாலை வடக்கு, மீசாலை.

(64191) (13.15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

விக்ரோறியன், பேராசான், கல்விஒளி, கல்வி நிபுணத்துவ ஆலோசகர்
கலாநிதி **பாலசுப்பிரமணியம் தனபாலன்**
(உபபீடாதிபதி - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)




அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின்
**31 ஆவது பட்டமளிப்பு விழாவில்**
**(19.01.2016) IV ஆவது அமர்வில்**
**கல்வியியலில் கலாநிதிப் பட்டத்தைப் (Ph.D)**
பெற்றுள்ளமையைப் பாராட்டுகின்றோம். அவரது கல்விப்பணி மேலும் எம் மண்ணிற்குக் கிடைக்க வாழ்த்துகின்றோம்.

**ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகத்தினர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




இன்று (20.01.2016) புதன்கிழமை
தனது 25 ஆவது பிறந்த தினத்தில் யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகத்தின்
31 ஆவது பட்டமளிப்பு விழாவில் பொருளியல் துறையில்
சிறப்புக் கலைமாணி பட்டத்தைப் பெறும்

**செல்வி சயந்தினி சிதம்பரப்பிள்ளை**
B.A (Hons)

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் உயர்வு பெற்று வாழ மனதார வாழ்த்துகின்றோம்

திக்கரை,
களபூமி, காரைநகர்.

வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் கலாநிதிப்பட்டம் பெறும்
**திரு.சின்னத்தம்பி பத்மராஜா** Ph.D
அவர்களை அகமகிழ்ந்து பாராட்டுகின்றோம்




செங்குந்த இந்துவின் சாதனை நாயகனே! கல்வித்துறையிற் கால்வைத்துக்
குன்றா உழைப்பால் குன்றாய் உயர்ந்தவனே!
BA ஆனாய், PGDE ஆனாய், MED ஆனாய், M.phil ஆனாய்
இன்று கலாநிதிப்பட்டம் (Ph.D) பெறுகின்றாய்
படிப்படியாகப் படிகள் பலதாண்டி பதவியில் உயர்வுகள் பற்பல பெற்றாய்
உளம் பூரித்து உவகைபொங்க உண்மை அன்புடன்
புளகாங்கித்து,பொலிந்து நீ வாழ
வாழ்த்துகிறோம் நாம் - உன் சாதனை மிகமிகப்பெரிது
உறுதியான உழைப்பால் உயர்ந்தாய்
உனது உயர்வு எம்மினச் சிறார்க்கு
முன்மாதிரியாய் அமைந்திடல் வேண்டும்.
நல்லூரான் வீதியிலே முருகனின் படைத்தலைவன்
வீரவாகுவாய் வருடந்தோறும் வலம் வருபவனே!
தமிழ் முருகன் உனக்குத் "தமிழ் விருதளித்தான்"
கல்விப்பணியுடன் சமூகப்பணியிலும்
பலன் ஏதும் பாராமல் பணியாற்றுகின்றாய்
பண்புகள் நிறைந்த முனைவனே! எங்கள்
[illegible]த்திற்குரிய பத்மராஜா உனைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**கலாநிதி - லயன்.வ.பரமசிவம் - J.P**

(64200) (13.15.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கால்கோள் விழா இன்று

யாழ்ப்பாணம், ஜன.20
நீர்வேலி சி.சி.த.கலவன் பாடசாலையின் கால்கோள்விழா இன்று புதன் கிழமை பாடசாலை அதிபர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் முற்பகல் 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ கு.தியா கராஜக்குருக்களும், விருந்தினர்களாக ஓய்வு பெற்ற விலைக்கட்டுப்பாட்டு அதி காரி திருமதி சிவசீலன் மற்றும் முன்னாள் பாடசாலை அதிபர் செ. செல்வநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (து)

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவில்



ஆரோக்கியநாதர் பேரின்பநாதன்

**தோற்றம்**
10.05.1951

**மறைவு**
20.01.2015

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்...


ஆலடி, ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

(67882)(11,15,17,18)

## மரண அறிவித்தல்

### கனகசபை சண்முகவடிவேல்
(மருமோன்)



கொடிகாமம் மடத்தடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி ஐயர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் தற் போது இந்தியாவில் வாழ்ந்து வந்தவரு மாகிய கனகசபை சண்முகவடிவேல் 18.01.2016 ஆம் திகதி இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-செல்லத்தங்கம் தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர் களான கந்தையா- நாகரத்தினம் தம்பதி யரின் அன்பு மருமகனும், சறோஜாவின் அன்புக் கணவரும், சுகந்தினி (சுவிஸ்), சதீஸ்வரன் (ஜேர்மனி), சுதர்சினி (கனடா), கார்த்திகா (கனடா), துர்க்கா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தை யும், சிறீகாந்தன், மரிபெல், ரவிசங்கர், அனுசலிங்கம், றெஜினோல்ட் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான குழந்தை வடிவேல், சோமசுந்தரம் மற்றும் சாரதாதேவி, விமலாதேவி, பாஸ்கரநாதன், பாக்கியகௌரி, சிறீதரன், சிறீலதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுலோசனா, விக்கினேஸ்வரனின் அன்பு மைத்துனரும், கபீசன், காசினி, தாமியா, ரரரகா, காரிகை, கரினி, அக்சயா, அபிலன், கேசிகா, கீர்த்தனன், கவி நயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகன்-சதீஸ்வரன்

தொடர்பு: 072 155 1534

## மரண அறிவித்தல்கள்

தோற்றம்
23
04
1938



மறைவு
16
01
2016

### திருமதி. மனோன்மணி விநாயகமூர்த்தி
( ஓய்வுபெற்ற விடுதி மேற்பார்வையாளர்- பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை நெல்லியடி மத்திய கல்லூரி )

யாழ் கரவெட்டி மத்தி சாமியன் அரசடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட மனோன்மணி விநாயகமூர்த்தி அவர்கள் 16.01.2016 சனிக்கிழமை அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சதாசிவம்-மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சபாநாயகம், பராசக்தி, கணேசநாயகம், மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான செந்திநாயகம், சிவானந்தநாயகம், மற்றும் கமலேஸ்வரி (ஓய்வுபெற்ற அதிபர்-வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிரஞ்சினி (ஆசிரியை-இசிப்பத்தான கல்லூரி, கொழும்பு), உதயசங்கர் (இங்கிலாந்து), உதயகுமார் (கனடா), உதயராஜன் (உதயன் வீடியோ-கொழும்பு, ஸ்டுடியோ உதயன்-நெல்லியடி), வராகினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கணேசலிங்கம், விஜிதா (இங்கிலாந்து), நளாயினி (கனடா), சுனித்தா (கொழும்பு), விமலநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிவகாமி, கந்தசாமி (ஓய்வுபெற்ற அதிபர்-பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), காலஞ்சென்ற சிவானந்தம், மங்களகுமாரி (ஓய்வுபெற்ற அலுவலர்-சிறீலங்கா டெலிகொம்), ரட்னேஸ்வரி (அவுஸ்ரேலியா), காலஞ்சென்ற பொன்னம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சபேசன், மயூரன், பிரித்திகா, தனிஷிகா, ஹரிணி, நிலோஜா, கபினா, அபிநயன், ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 21.01.2016 வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கிரியைகள் 2.00 மணி முதல் நடைபெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை மயானத்திற்கு 4.30 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
( உதயன் வீடியோ )0777355297-0112362829

## பொன்னையா தங்கவேலு
(பண்டிதர்,சைவப்புலவர் , இரத்தினம் வாத்தியார்)



பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தங்கவேலு 17.01.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமக னும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், வசந்தி, ஜெயந்தி, சாந்தி, சுகந்தி, தயாளன், ஜானகி ஆகியோரின் அன்புத் தந்தையும், அருமைநாயகம், பாஸ்கர சோதி, புலேந்திரன், வசிகரன், மாலதி, ஆனந்தராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகம்மா, ராசையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரேகா, கார்த்திகா, கோகுலன், அகலிகா, அபிராமி, சுபராஜ், அனுராஜ், பிரதீபராஜ், விநோத் விதுசன், அஞ்சனா, வருஷ்னா, சௌமியா, ஷனா, நவீன், அர்வின், புஸ்பரூபன், ஜோதீஸ்வரன் ஆகியோரின் அன்புப் பேரனும், தனுஷ்சியா, ஆதனா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2016) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பொலி கண்டி, ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னக்கடை,
பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

(65901)(11,18)

தகவல்:
ந.பாஸ்கரஜோதி
(மருமகன்)

தொடர்பு:- 077 222 9354

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தில் தாதியர் பற்றாக்குறை

## 826 பேர் பணியாற்ற வேண்டிய நிலையில் 692 பேரே தற்போது பணியில்

யாழ்ப்பாணம்,ஜன.20

வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் உள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகளின் சேவைக்கு 826 தாதியர்களுக்கான தேவை உள்ள போதும், 692 பேரே பணியாற்றுகின்றனர் என்று மாகாண சுகாதாரத் திணைக்கள புள்ளி விவரத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்துக்குத் தேவையான 122 தாதியர்களில் தற்போது 90 பேர் பணி புரிகின்றனர். மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிக்கு 90 தாதியர்கள் தேவை. அங்கு தற்போது 85 தாதியர்கள் பணி புரிகின்றனர்.

இதே வேளை கிளிநொச்சி மாவட்டத்தின் பொது வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளின் பணிக்காக 32 தாதியர்கள் தேவையான போதும் தற்போது 5 தாதியர்கள் மட்டும் பணியாற்றுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 112 தாதியர்களுக்கான தேவை உள்ளது. இருப்பினும் இந்த மாவட்டத்தில் 87 பேரே பணியாற்றுகின்றனர். மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிக்கு 66 தாதியர்கள் பணிபுரிய வேண்டும். ஆயினும் 62 தாதியர்கள் உள்ளனர். அதேபோல் முல்லைத்தீவு மாவட்டத்தில் பொது வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளின் தேவைக்கு 46 பேர் தேவையாக உள்ள போதும் 21 பேர் மட்டுமே பணி புரிகின்றனர்.

> போர் நிறைவின் பின்பு வடக்கின் சகல மாவட்டத்திலும் மருத்துவர்கள் மட்டு மன்றி, தாதியர்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவியது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு 218 தாதியர்களுக்கான தேவை உள்ளது. தற்போது 212 தாதியர்கள் பணி புரிகின்றனர். வவுனியா மாவட்டத்தின் பொது வைத்தியசாலையின் பணிக்கு 200 தாதியர்கள் பணிபுரிய வேண்டும் என்ற நிலையில் 199 தாதியர்கள் பணி புரிகின்றனர்.

அதே போல் பொது வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளுக்கு 18 தாதியர்கள் தேவையாக உள்ளனர். அவற்றில் 13 பேர் பணிபுரிகின்றனர்.

மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளின் பணிக்காக 128 தாதியர்கள் தேவை உள்ளது. இவற்றில் தற்போது 109 பேர் பணி புரிகின்றனர். இங்கு மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிக்கு 90 பேர் தேவை உள்ளது. குறித்த தேவை 100 வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

அதே போன்று மன்னார் மாவட்டத்தின் பொது வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளுக்கு 38 தாதிய உத்தியோகத்தர்கள் தேவை உள்ளது. இவர்களில் 19 பேர் பணியில் உள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளின் பணிக்கு மட்டும் 246 தாதியர்கள் தேவையான இடத்தில் 194 தாதியர்கள் பணி புரிகின்றனர்.

போர் நிறைவின் பின்பு வடக்கின் சகல மாவட்டத்திலும் மருத்துவர்கள் மட்டுமன்றி, தாதியர்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவியது. இருப்பினும் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டுமே தாதியர் பற்றாக்குறை அதிகமாகவுள்ளது. அதேபோல் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் கணிசமான வெற்றிடம் நிலவுகின்ற போதிலும், வவுனியா மாவட்டத்தின் மருத்துவர்கள், தாதியர்கள் தேவை குறிப்பிட்ட அளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை யாழ்.மாவட்டத்தின் பிரதான வைத்தியசாலை போதனா வைத்தியசாலை என்பதன் அடிப்படையில் குறித்த வைத்தியசாலை மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளது. (ற-ஜ-101)

# குளங்கள் மூடப்பட்டதால் குடாவுக்கு பெரும் சிக்கல்

## எச்சரிக்கின்றனர் ஓய்வு நிலை அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஜன.20

குடாநாட்டில் மூன்று இராசதானிகளிலும் அமைக்கப்பட்ட பல குளங்கள் இன்று கட்டடங்களால் மூடப்பட்டும், நீர் வடியும் கால்வாய்கள் வீதிகளாகவும் மாற்றப்பட்டுள்ளன. இதனால் பெரும் இடர்களைச் சந்திக்கும் நிலை ஏற்படலாம். - இவ்வாறு உலக வங்கிப் பிரதிநிதியிடம் யாழ். ஓய்வுநிலை அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பொது அமைப்புக்கள் மற்றும் ஓய்வுநிலை உத்தியோகத்தர்களுடன் தந்திரோபாய நகரத் திட்டமிடல் தொடர்பான ஆரம்ப மட்ட கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் உலக வங்கியின் நிதி ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள நகர அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன. இதன்போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ் மாநகரசபையால் கவனிக்கப்படாமல் உள்ள குளங்களையும், அவற்றுக்குமேல் கட்டப்பட்டுள்ள கட்டங்கள் தொடர்பிலும் உரிய திட்டமிடல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவை தொடர்பில் உரிய துறை சார் வல்லுநர்கள், மாணவர்களின் திட்டங்களும் உள்வாங்கப்படுதல் வேண்டும் போன்ற பல கோரிக்கைகள் இந்தக் கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்டன. (ற-ஜ-ரி5)

# நிறுத்தாது சென்றதால் பஸ் மீது கல் தாக்குதல்

## பாசையூர்ப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் மீது நேற்று காலை கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

190 வழித்தட சேவையில் ஈடுபடும் குறித்த பஸ், காலை யாழ்ப்பாணத்தில் இருந்து மு.ப. 8.45 மணிக்குப் புறப்பட்டு கொழும்புத்துறை நோக்கி சென்று கொண்டிருந்தது. அதன்போது பாசையூர் பகுதியில் நின்ற இளைஞர் குழு பஸ்ஸில் பயணிப்பதற்கு மறித்துள்ளனர். அதிக பயணிகள் காரணமாக சாரதி மறித்தவர்களை ஏற்றாமல் சென்றுள்ளனர். அதனால் ஆத்திரம் அடைந்த இளைஞர்கள் பஸ்ஸின் பின் பக்க கண்ணாடி மீது கல்வீச்சு தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் பஸ்ஸின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த இரு பெண்கள் காயங்களுக்கு உள்ளாகி, யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில், பஸ் சாரதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். விரிவான விசாரணைகளை குற்றத்தடுப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஜ-107-135)

# அனுமதியின்றி இறைச்சி விற்றவருக்கு சிறையுடன் அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.20

தெல்லிப்பழை, அளவெட்டிப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மாட்டு இறைச்சி விற்பனையில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் கைதான சந்தேக நபருக்கு 6 மாதங்கள் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதித்த மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

கடந்த வாரம் அளவெட்டிப் பகுதியில் உள்ள கடை ஒன்றினுள் வைத்து, அனுமதிப்பத்திரம் இன்றி மாட்டு இறைச்சி விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபரை குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்திருந்தனர். அத்துடன் அவரிடம் இருந்து 5 கிலோகிராம் நிறையுடைய இறைச்சியையும் பொலிஸார் கைபற்றியிருந்தனர்.

சந்தேக நபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரம் மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து நீதிவான், ஒத்தி வைத்த சிறைத்தண்டனையுடன் 15ஆயிர ரூபா அபராதம் விதித்தார். (ற-ஜ-107)

# டெங்கு பரவக் கூடிய சூழல் 8 பேருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.20

டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய வகையில் சுற்றுச்சூழலை வைத்திருந்த 8 பேருக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் தீர்ப்பளித்தார்.

டெங்கு பரவக்கூடிய சூழலை வைத்திருந்தமை மற்றும் பொலிஸார், பொதுச்சுகாதார பரிசோதகரின் அறுவுறுத்தலை அலட்சியம்செய்தமைஎன்பவற்றுக்காக சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த இருவருக்கு அதிகூடிய அபராதத் தொகையாக தலா 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மற்றும் உடுவில், கட்டுவன் பகுதிகளில் உள்ள வீடுகளில் டெங்கு நுளம்பு பரவ ஏதுவான சூழலை வைத்திருந்த ஐவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சுன்னாகம் சுற்றுச் சூழல் பொலிஸார் தாக்கல் செய்த ஏழு வழக்குகளும் தனித்தனியாக எடுத்துக் கொள்ளப்பட்டது. வீட்டு உரிமையாளர்கள் தங்களது குற்றங்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து இந்த அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ற-ஜ-107)

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தமிழிசைப் போட்டி சனியன்று

யாழ்ப்பாணம், ஜன.20

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தமிழிசை விழாவை முன்னிட்டு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள - மாணவர்களுக்கான - தமிழிசைப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை 23 ஆம் திகதி காலை 9 மணி முதல் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நடைபெறும் என தமிழ்ச் சங்கம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், ஏனைய மாவட்ட மாணவர்கள் கொழும்பு தமிழ்ச் சங்கத்துக்கும் போட்டிக்குத் தயாராக சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மாணவர் தங்களின் வரவை தொலைபேசி இலக்கம் 01123 63759 ஊடாகவும், தொலை நகலில் 0112361381 இலக்கம் ஊடாகவும் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துமாறு சங்கத்தின் பதில்செயலாளர்ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி கேட்டுள்ளார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தமிழிசை விழா இந்த மாத இறுதியில் மூன்று நாள்கள் தொடர்ந்து நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ)

# வடமராட்சி கிழக்கில் இறால் சீசன் ஆரம்பம்

வடமராட்சி, ஜன.20

வடமராட்சி கிழக்குக் கடலில் இறால்பிடிபடும்காலம்ஆரம்பமானதைத் தொடர்ந்து ஆழிய வளை மீனவர்கள்கடந்ததைப்பொங்கல் முதல் இறால் பிடிக்கும் தொழிலில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் உவர் நீரும், நன்னீரும் கலக்கும் சுண்டிக்குளம் கடலில் அதிகளவில் இறால்கள் டிசெம்பர் மாத இறுதி முதல் பெருகுவது வழமையாகும். இந்த நிலை சுமார் இரண்டு மாத காலங்கள் நீடிக்கும்.

சுண்டிக்குளத்தில் உற்பத்தியாகும் இறால்கள் வடமராட்சி கிழக்கிலுள்ள வெற்றிலைக் கேணி, உடுத்துறை, ஆழிய வளை, செம்பியன்பற்று, தாளையடி ஆகிய கடற்பகுதிகளை நோக்கி பெருமளவில் நகரும். இந்தக் காலத்தில் வெற்றிலைக் கேணி, உடுத்துறை, ஆழிய வளை, செம்பியன்பற்று, தாளையடி மீனவர்கள் பெருமளவில் இறால்களைப் பிடிக்கும் தொழிலில் ஈடுபடுவார்கள்.

தைமாதம் பிறந்துள்ள வேளையில்ஆழியவளைதவிர்ந்தஏனைய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் இன்னமும் கடலுக்குள் இறங்கவில்லை.

இந்த மீனவர்கள் ஒரு சில தினங்களில் சுப தினம் பார்த்து கடலுக்குள் இறங்கி இறால் பிடிக்கும் தொழிலில் ஈடுபடுவார்கள். ஆழியவளைப்பகுதி மீனவர்கள் தைப்பொங்கல் தினத்தன்றே, கடலுக்குள் இறங்கி இறால் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டனர்.

பெருமளவு இறால் பிடிக்கப்படுவதால் ஒரு கிலோ இறால் 700 ரூபாவாக விற்கப்படுகின்றது. வடமராட்சி கிழக்கு கடற்றொழில் சமாசமும் தனியார் வர்த்தகர்களும் தினமும் இறால்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர். (ற-ஜ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சந்தை வசதி இன்மையால் வாழைச் செய்கையில் விரக்தி

## செட்டிகுளம் விவசாயத் திணைக்களம் சுட்டிக்காட்டு

வவுனியா, ஜன. 20

வாழைப் பழங்களைச் சந்தைப்படுத்த முடியாமையால் ஏற்பட்ட விரக்தி காரணமாக வாழைப்பழ தோட்டத்தையே அழித்துவிடும் நிலையில் வவுனியா செட்டிகுளம் விவசாயிகள் உள்ளனர் என்று வவுனியா செட்டிகுளம் விவசாய திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன் கிழமை வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற செட்டிகுளம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

வவுனியா செட்டிகுளம் பகுதியில் தோட்டங்களை மேற்கொள்ளும் விவசாயிகள் தங்களுடைய பொருள்களை

> தோட்டங்களை மேற்கொள்ளும் விவசாயிகள் தங்களுடைய பொருள் களை சந்தைப்படுத்து வதற்கு முடியாத நிலை காணப்படுகின்றது.

சந்தைப்படுத்துவதற்கு முடியாத நிலை காணப்படுகின்றது. செட்டிகுளத்தில் இருந்து வவுனியா சந்தைக்கு கொண்டுசெல்வதற்கு பொருள்களை பஸ்ஸிலேயே கொண்டு செல்ல வேண்டியுள்ளது. குறிப்பாக வாழைப் பழத்தை எடுத்துக் கொண்டால் கிலோ 15 ரூபா தொடக்கம் 20 ரூபா வரையிலேயே சந்தைகளில் விற்கப் படுகின்றது. இதை செட்டிகுளத்தில் இருந்து வவுனியா சந்தைக்குகொண்டு செல்ல பஸ்ஸுக்கு கொடுக்கும் பணம் வாழைப்பழத்தின் விலையை விட அதிகமாக உள்ளது. இதனால் வாழைப்பழ பயிர் செய் கையை மேற்கொள்ளும் விவசாயிகள் அந்த தோட்டத்தையை அழித்து விடுகின்றார்கள்.

எனவே, அவர்களுக்கான சந்தைப் படுத்தல் வசதிகளை உடனடியாக மேற்கொள்ளும்போது அவர்களு டைய வருமானத்துக்கு உகந்ததாக அமையும்- என்று தெரிவிக்கப்பட்டது. (ந-2)



சிறந்த கல்வியைப் பெற்றுக்கொள்ள சிரமப்படும் மாணவர்களுக்கு சிறப்பான கல்வியை வழங்கும் நோக்குடன் கல்வி வளர்ச்சி அறக்கட்டளை அமைப்பால் இணையத்தளம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த இணையத்தளம் கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள கல்வி வளர்ச்சி அறக்கட்டளை அமைப்பின் அலுவலகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் 7 கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிலையங்களுக்கு மாணவர்களுடைய கணினி அறிவை மேம்படுத்தும் முகமாக கணினிகளும் வழங்கப்பட்டன. (ந-ஜ-ரி3,21)

# கிணற்றில் தவறி வீழ்ந்த வயோதிபர் சாவு

வவுனியா, ஜன. 20

வவுனியா கந்தன் பகுதியில் வெட்டப்பட்ட கிணற்றில் தவறி வீழ்ந்து முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா கந்தன் குளம் பகுதி மக்களுக்குப் பொதுக்கிணறு ஒன்று அரசால் வெட்டிக் கொடுக்கப்பட்டது. இந்தக் கிணறு கட்டி முடிக்கப்படாத நிலையில், அப்பகுதியைச் சேர்ந்த வயோதிபர் கிணற்றில் தவறி வீழ்ந்துள்ளார். அவரை மீட்டெடுத்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கிடையில் அவர் சாவடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-ஜ-402)



வவுனியா இந்துக் கல்லூரியின் வைரவிழாவும் நடை பவனியும் நேற்று நடைபெற்றது. வவுனியா சிவன்கோயிலுக்கு முன்பாக ஆரம்பமான நடைபவனியில் பாடசாலையின் அதிபர் திருமதி ஜி.நடராசா, கல்வி இராஜாங்க அமைச்சர் வீ. இராதகிருஷ்ணன், வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், திருமதி சாந்தி சிறிஸ் கந்தராசா, வடமாகாண சபை உறுப்பினர்களான ஜி. ரி. லிங்கநாதன், எம்.பி. நடராஜ், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா ஆகியோர் இணைந்திருந்தனர். (ந-ஜ)

# ஒட்டுசுட்டான் - முத்துஐயன்கட்டு பஸ் சேவைகள் இடை நிறுத்தம்

## பொதுமக்கள் பெரும் சிரமம்

முல்லைத்தீவு, ஜன.20

முல்லைத்தீவில் இருந்து ஒட்டுசுட்டான் ஊடாக முத்து ஐயன்கட்டு இடது கரை, வலதுகரை கிராமங் களுக்கிடையில் போக்கு வரத்தில் ஈடுபட்ட தனியார், அரச பஸ்கள் தற்போது நீண்ட நாள்களாக சேவையில் ஈடுபடாததால் தாம் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், மாஞ்சோலை வைத்தியசாலை, மின்சார சபை மற்றும் முல்லைத் தீவில் உள்ள தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக இந்த பஸ் சேவையையே முழுமையாகப்பயன்படுத்தி வந்த நிலையில், தற்போது நீண்ட தூரம் நடந்தும், ஓட்டோவில் ஒட்டுசுட்டான் சந்திக்கு வந்தே தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று அவர்கள் சுட்டிக்காட்டு கின்றனர்.

இது தொடர்பாக முல்லைத் தீவு மாவட்டப் போக்கு வரத்துக்குப் பொறுப்பான அதிகாரியிடம் கேட்ட போது தற்போது வெளி மாவட்டங்களுக் கிடையிலான இணைந்த போக்குவரத்து சேவை அட்டவணை போடப்பட்டுள்ளது. மிகவிரைவில் உள்ளூர் சேவைக் கான நேர அட்டவணை சீர் செய்யப்பட்டு, சகல இடங் களுக்குமான உள்ளூர் சேவையில் அரச, தனியார் பஸ்கள் ஈடுபடும் எனத் தெரிவித்தார். (ந-ஜ-ரி7)

# யாழில் 12 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜன.20

பொது இடத்தில் மதுபானம் அருந்தியமை மற்றும் புகை பிடித்தமை ஆகிய குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் இரவு 12 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர் என்று யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்திய பஸ் நிலையத்தில் நின்று பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத் தும் வண்ணம் புகைபிடித்த 7 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



அத்துடன் பொது இடத்தில் மதுபானம் அருந்தி, அநாகரிகமாக நடந்து கொண்ட 5 பேரை நகரப் பகுதி களில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான 12 பேருக்கும் எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (ந-ஜ-107)

# யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவையில் மாற்றம்



யாழ்ப்பாணம், ஜன.20

இது வரை காலமும் காங்கேசன்துறையிலிருந்து காலை 6.25 மணிக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து காலை 7.10 மணிக்கும் புறப்பட்டு கொழும்பு கோட்டை வரை சென்ற ரயில் சேவை நேர அட்டவணையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று யாழ். புகையிரத பிரதான ரயில் நிலைய அதிபர் ரீ.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதியில் இருந்து காங்கேசன்துறையிலிருந்து காலை 8.25 மணிக்குப் புறப்படும் ரயில் காலை 9.25 மணிக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை வந்தடைந்து, அங்கிருந்து காலை 9.35 மணிக்கு கொழும்பு நோக்கிப் புறப்படும்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை மாலை 6.32 மணிக்கு சென்றடையும் இந்த ரயில், அங்கிருந்து கல்கிசைக்கு மாலை 6:38 மணிக்கு சென்றடையும்.

அதே போன்று இது வரை காலமும் காலை 6.25 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்பட்ட யாழ் தேவி ரயில் எதிர்வரும் பெப்ரவரி 5ஆம் திகதி தொடக்கம் காலை 5.50 மணிக்கு கல்கிசையில் இருந்து பயணத்தை ஆரம்பித்து, கொழும்பு கோட்டையை காலை 6.25 மணிக்கு வந்தடையும். பின்னர் காலை 6:35 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி புறப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ந-ஜ-107)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அங்கத்தவருக்கு உலருணவு

## கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கம் வழங்கியது

கிளிநொச்சி, ஜன.20

கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ள இடரால் பாதிக் கப்பட்ட கிளிநொச்சி பனை தென்னை வள அபி விருத்தி சங்கத்தின் அங் கத்தவர்கள் மற்றும் பணி யாளர்களுக்கான 14 லட் சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உண வுப்பொதிகள் அண்மையில் குறித்த சங்கத்தால் வழங் கப்பட்டுள்ளன.

கிளிநொச்சிபனைதென்னை வள அபிவிருத்தி கூட்டு றவுச் சங்கத்தின் தலைவர் க. மதனரூபன் தலை மையில் சங்கத்தின் தலை மைக் காரியாலயத்திலும், கண்டாவளை வெல்ல உற்பத்தி தொழிற்சாலை யிலும், கோணவில் போத் தல் அடைப்பு தொழிற் சாலையிலும் இந்த நிகழ் வுகள் இடம்பெற்றன.

தலைமைக் காரியாலயத் தில் 171 பயனாளிகளுக்கும், கண்டாவளையில் 156 பய னாளிகளுக்கும், கோண விலில் 163 பயனாளி களுக்கும் என மொத்த மாக 490 பயனாளி களுக்கு 14 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதி யான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப் பட்டுள்ளன. (ந-ஜ-ரி3,21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீனப்படுத்தப்படவுள்ளது காக்கைதீவு இறங்குதுறை


## பல மில்லியன் ரூபா செலவில்

யாழ்ப்பாணம்,ஜன.20
மீனவர்களின் வசதி கருதி காக்கை தீவு இறங்கு துறை பல மில்லியன் ரூபா செலவில் நவீனமான முறையில் அபிவிருத்தி செய்யப் படவுள்ளது.
கடற்றொழில் அமைச்சும், கடற்றொழில் திணைக்களமும் இணைந்து எடுத்துக் கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து, கட்டுமானப் பணிகளை விரைவாக ஆரம்பிப்பதற்கு வசதியாக மொறட்டுவ தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் கடந்த வாரம் இறங்குதுறையை நேரில் பார்வையிட்டுள் ளனர்.
வலி.தென் மேற்கு பிரதேசத்திலுள்ள காக்கை தீவு இறங்கு துறையை சாவல் கட்டு, காக்கை தீவு, ஆனைக்கோட்டை, மானிப்பாய், உயரப்புலம் ஆகிய ஐந்து கிராமங்களைச் சேர்ந்த எண் ணூறுக்கும் அதிகமான மீனவர்

> காக்கை தீவு இறங்கு துறையை சாவல் கட்டு, காக்கை தீவு, ஆனைக் கோட்டை, மானிப்பாய், உயரப் புலம் ஆகிய ஐந்து கிராமங் களைச் சேர்ந்த எண்ணூறுக்கும் அதிகமான மீனவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்

கள்பயன்படுத்திவருகின்றனர். இருநூறுக்கும் அதிகமான வள்ளங்களும் இந்தத் துறையில் கட்டப்படுகின்றன.
இந்த இறங்குதுறையைப் பயன் படுத்தி வரும் மீனவர்களின் நலன்கருதி பல வரு டங்களுக்கு முன், பல மில்லியன் ரூபா செல வில் அமைக்கப்பட்ட இறங்கு துறையில் பல வசதியீனங்கள் காணப்படுவதால் மீனவர்கள் வள்ளங்களைக் கட்டுவதில் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின் றனர்.
இந்தக் குறைபாடுகள் குறித்து சம் பந்தப்பட்டவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்த யாழ்.மாவட்டக் கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மே ளனத் தலைவர் என்.பொன்னம்பலம் இந்த இறங்கு துறையை நங்கூரம் போடும் இறங்கு துறையாக அபிவிருத்தி செய்து தர வேண்டும் என்று கோரியிருந்தார்.
அதனைத் தொடர்ந்து கடற்றொழில் அமைச்சும், கடற் றொழில் திணைக்களமும் இணைந்து எடுத்துக் கொண்ட நடவடிக்கை யின் பயனாக இந்த இறங்குதுறை பல மில் லியன் ரூபா செலவில் நவீன முறையில் பல வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்படவுள் ளது. (ற-ஜ)

### சட்டவிரோத மின்சார பாவனையாளர் கைது



யாழ்ப்பாணம்,ஜன.20
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் சட்ட விரோ தமான முறையில் மின்சாரம் பெற்ற மூவர் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
கடந்த 17 ஆம் திகதி மேற் கொண்ட திடீர் சோதனையின் போது புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இருவர் பிரதான வடத்தில் இருந்து மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அதே போன்று மாசியப்பிட்டி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மின்மானியைச் சேதப்படுத்தி மின்சாரம் பெற்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
கொழும்பில் இருந்து வருகை தந்த மின்சார சபை புலனாய்வு அதிகாரிகளும், சுன்னாகம் பொலி ஸாரும் இணைந்து தேடுதல் நட வடிகை மேற்கொண்டிருந்தனர்.
கைதான மூவருக்கும் எதிராக மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-107)

### அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன.20
ஆனைக்கோட்டை நாலு கால்மடம் ஞானவைரவர் ஆல யத்தின் அலங்கார உற்சவம் கடந்த 10 ஆம் திகதி ஆரம்ப மாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.
இன்று புதன்கிழமை திருவூஞ் சல் நடைபெற்று மகேஸ்வர பூசையும் நடைபெறும் என ஆலய தர்மகர்த்தா திருமதி க. தில்லைரஞ்சினி தெரிவித் துள்ளார். (ற-ஜ)

### வேதாகம பாடசாலை ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.20
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் துர்க்காதேவி வேதாகம பாடசாலை ஆரம்பிக் கப்படவுள்ளது. இந்த நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது என்று ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுரு கன் தெரிவித்துள்ளார். (ற-ஜ)



யாழ்.கொழும்புத்துறை உதயபுரம் கிராமத்தில் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் பாலர் பாட சாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா நேற்றுப் பாசையூர் பங்குத்தந்தை அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் தலைமையில் நடைபெற்றது. அதில் கியூடெக் கரித்தாஸ் இயக்குநர் அருட்பணி ச.யூஜின் பிரான்சிஸ் அடிகளாருடன் முன்னாள் இயக்குநர் அருட்பணி யாவிஸ் அடிகளாரும் இணைந்து அடிக்கல் நட்டனர். (ற-ஜ)

### பெருந்திருவிழா

யாழ்ப்பாணம் ,ஜன. 20
யாழ். வண்ணை மணிக்கூட்டு வீதி ஸ்ரீஅரசடிவிநாயகர்ஆலயத் தின் வருடாந்த பெருந் திருவிழா கடந்த 14 ஆம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி நடை பெற்று வருகின்றது.
எதிர்வரும் 22 ஆம் திகதி வெள் ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என பரிபாலன சபையினர் தெரிவித் துள்ளனர்.
தேர்த்திருவிழாவன்று, தேர்ப் பவனி மணிக்கூட்டு வீதியில் உள்ள ஆலயத்தில் ஆரம்பித்து மணிக்கூட்டு வீதி, கன்னாதிட்டி வீதி, கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி வழியாகச் சென்று மீண்டும் மணிக்கூட்டு வீதியால் ஆல யத்தை வந்தடையும் எனத் தெரி விக்கப்பட்டது. (ற-ஜ)

## வடக்கில் மீள் புனரமைக்கப்பட்ட குளங்களின் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.20
வடக்கில் கடந்த 30 ஆண்டு களாக மீள்புனரமைப்பு இன்றி உள்ள குளங்களின் விவரங் களை வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு திரட்டி வருகிறது.
வடமாகாணத்தில் பிரதேச சபை, நகரசபை, மாநகரசபைக்குட்பட்ட குளங்களின் விவரங்களையே வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு திரட்டி வருகின்றது.
எதிர்காலத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்ட குளங்கள் மீள்புனரமைப்பு செய்யப்பட்டு, அவற்றின் ஊடாக நிலத்தடி நீரைச் சேமிக்க நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகின்றது.
இதேவேளை வடக்கில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக மீள்புனரமைப்பு இன்றி அழி வடைந்து வரும் ஆயிரத்து 56 கேணிகள் 2016, 2017 ஆம் ஆண்டில் இருந்து நவீன வடி வில் மீள்புனரமைப்புச் செய்ய நட வடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக உள்ளூராட்சி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற-ஜ-50)

## கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு மாற்றம்



யாழ்ப்பாணம், ஜன.20
கோப்பாய் பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி பிர தம பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீநிகசஞ்ஜீவஜெயக்கொடி, சிலாபம் பொலிஸ் பிராந்தி யத்துக்கு உட்பட்ட வென்னப் புவ பொலிஸ் நிலையத் துக்கு இடமாற்றப்பட்டுள் ளார் என்று பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
சேவையின்தேவைகருதியே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
கோப்பாய் பொலிஸ் நிலை யத் துக்குப் புதிய பொறுப்பதிகாரி யாக கந்தானை பொலிஸ் நிலை யத்தில் கடமையாற் றிய பொலிஸ் பரி சோதகர் எஸ்.எம். கஹந்த வெல புதிய பொறுப்பதி காரியாக இணைத்துக் கொள் ளப்படவுள்ளார் என்றும் தகவல் கள் தெரிவிக்கின்றன. (ற-ஜ-107)

# வடக்கு சுகாதார அபிவிருத்திக்கு உலக வங்கி ரூபா 365 மில். நிதி

யாழ்ப்பாணம், ஜன.20
உலகவங்கியின் 2016ஆம் ஆண் டுக்கான சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்துக்கு 365 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
உலக வங்கியின் சுகாதாரத் திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாகாண சபை கள் மற்றும் உள்ளூராட்சி சபை கள் அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள் ளது.
இந்தக் கலந்துரையாடலில் உலகவங்கியின் 2016 ஆம் ஆண் டிற்கான சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாகாண சுகாதார திணைக்களங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் போதே வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கும் 365 மில்லியன் ரூபா ஒதுக் கப்பட்டுள்ளது. (ற-ஜ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.20
யாழ். மாநகர சபைக்குட்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங் கங்கள், சந்தை வியாபாரிகள், சகல வர்த்தகர்களினதும் நிறு வைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன என்று மாநகர சபை ஆணை யாளர் பொ. வாகீசன் தெரி வித்துள்ளார்.
நேற்றுதிங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் பணியானது எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.
மாவட்ட அரச அதிபரின் அறிவுறுத் தலுக்கு அமைய காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை யாழ். மாவட்ட செயலகத்தில் உள்ள அளவீட்டு அலகுகள், நியமங்கள் சேவைகள் பிரிவில் பரிசோதித்து முத்திரையிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஜ)

## மஞ்சள் கோட்டைக் கடக்க முற்பட்ட தாயும் மகளும் காருடன் மோதிச் சாவு

கொழும்பு,ஜன.20
இரவு உணவுக்காக உணவுப் பொதியை வாங்கிக் கொண்டு மஞ்சள் கோட்டுக் கடவையைக் கடக்க முற்பட்ட 10 வயதான மகளும் 47 வயதான தாயார் ஒரு வரும் காருடன் மோதுண்டு உயிரிழந்துள்ள சோகச் சம்பவமொன்று கடந்த 17 ஆம் திகதி தெமட்டகொடையில் இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தில் தாயும் மகளும் காரில் நசியுண்ட வேளை, அவர்களின் கையில் இருந்த சோற்றுப் பொதி வீதியில் சிதறியிருந்த விதம் அங்கிருந்தோரின் இதயங்களைக் கலங்க வைத்திருந்தது.

தெமட்டகொடை பேஸ்லைன் வீதியில் நடந்த இந்தச் சம்ப வத்தில் உயிரிழந்தவர்கள் இருவரும் கொழும்பு தேசிய வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டனர்.




இந்தப் பாரதூர மான வாகன விபத்து நடந்த வேளையில் காரைச் செலுத்தி வந்திருந்தவர் 15 வயதுச் சிறுவன் எனவும், பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
(த-ஐ-22)

# எதிரணியைப் பலமாக்க மகிந்த தீவிரமாக முயற்சி

## உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்களுடன் சந்திப்பு

கொழும்பு, ஜன,20
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டின் கீழிருந்த உள்ளூராட்சிச் சபைகளின் முன்னாள் உறுப்பினர்களுடன் மகிந்த ராஜபக்ச பேச்சு நடத்தி வருகிறார்.

இதன் ஆரம்பக்கட்ட நடவடிக்கையாகப் பொதுத் தேர்தலில் தான்போட்டியிட்ட குருநாகல் மாவட்டத்திலுள்ள உள்ளூ ராட் சிச் சபை உறுப்பினர்களுடன் அவர் பேச்சு நடத்தியுள்ளார். இதன் போது சமகால அரசியல் நடவடிக்கைகள் பற்றி பேசப்பட்டுள்ளது.

அத்துடன், மேலும் பல உள்ளூராட்சிச் சபைகளின் முன்னாள் தலைவர்கள் தனித்துக் களமிறங்கு வதற்கு மகிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

> சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து தான் விலகப் போவதில்லை என அறிவித்து வரும் மகிந்த, சு.கவில் இருந்து கொண்டே மறைமுகமாக தனக்குச் சார்பான அணியைப் பலப்படுத்துவதற்குரிய முயற்சியில் இறங்கியுள்ளார்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்துதான் விலகப்போவதில்லை என அறிவித்துவரும் மகிந்த, சு.கவில் இருந்துகொண்டே மறைமுகமாக தனக்குச் சார்பான அணியைப் பலப்படுத்துவதற் குரிய முயற்சியில் இறங்கியுள்ளார் என்று மைத்திரி சார்பான அணியினர் குற்றஞ் சாட்டுகின்றனர்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொது எதிரணியென தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்கள் தனித்துப் போட்டியிடுவதற் குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)




## அரச மருந்துக் கூட்டுத்தாபனத்துக்கு 2015 ஆம் ஆண்டு 44 கோடி இலாபம்

கொழும்பு,ஜன.20
அரசமருந்துக்கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டில் 44 கோடி ரூபா இலாபமாகப் பெற்றிருந்ததாக சுகாதாரப் போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

மருந்துக் கூட்டுத்தாபனத்துக்குக் கிடைத்திருக்கும் இந்த இலாபத்தில் 10 கோடி ரூபா, திறைசேரிக்கு வழங்கப்பட விருப்பதாக மருந்துக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான கலாநிதி எம்.எச்.எம்.ரூமி தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சரினால் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகம் மாற்றியமைக்கப்பட்டு அதன் பௌதிக வளங்களைமேம்படுத்தி விடுவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாகவே இந்த முன்னேற்றத்தை அடைய முடிந்திருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ஐ-22)

## பெரும்போக நெல் கொள்வனவு பெப்ரவரி மாதம் ஆரம்பமாகும்

கொழும்பு,ஜன.20
இந்தப் பெரும் போகத்தில் விவசாயிகளிடமிருந்து ஒரு லட்சத்து 60 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை நெல் சந்தைப் படுத்தல் சபை மேற்கொண்டுள்ளது.

அந்த நடவடிக்கைகளுக்கு அமைய ஒரு கிலோ நாட்டரிசி நெல் 38 ரூபா வீதமும், சம்பா நெல் கிலோ 42 ரூபா வீதமும், கீரிச் சம்பா நெல் கிலோ 50 ரூபா வீதமும் என்ற நிர்ணய விலையிலும் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யவுள்ளதாக நெல் சந் தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதத்தின் முதலாவது வாரத்தில் இருந்து இந்தப் பெரும் போகத்தின் நெல் கொள்வனவை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாகவும், நெல் கொள்வனவு சம்பந்தமாக நெல் சந்தைப் படுத்தல் சபையின் பிரதேச முகாமையாளர்களுக்கு ஏற்கனவே ஆலோசனைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் சபையின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே பெரும் போகத்தின் நெல் தொகைகளைக் களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு, தற்போது 325 களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள 2 லட்சத்து 65 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை விரைவாகவிற்பனை செய்து அந்தக் களஞ்சியங்களை வெறுமைப்படுத்தி விடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (த-ஐ-22)

## வைத்தியசாலையில் அனுமதித்த சிறைக் கைதிகள் தப்பிக்க முயற்சி

கொழும்பு,ஜன.20
வெலிக்கடைச் சிறைச்சாலையின் வைத்தியசாலை விடுதிகளில் சிகிச்சைகளைப் பெற்று வந்த கொலை, கொள்ளை போன்ற கடும் குற்றங்களுடன் தொடர்புடைய நான்கு சிறைக் கைதிகள் கடந்த 16 ஆம் திகதி இரவு தப்பித்துச் செல்ல முயன்றிருந்ததாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்கள் நால்வரும் விடுதியின் அறையின் சுவரில் துளையிட்டு கற்களைப் பெயர்த்து தப்பித்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

தற்செயலாக இதைக் கண்ணுற்ற சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் அது பற்றி தனது சக உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து அவர்களது ஒத்துழைப்புடன் சிறைக் கைதிகளின் அந்த முயற்சியை முறியடித்திருந்தனர். (த-ஐ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

இன்று (20.01.2016) நடைபெறும் திருமண வைபவத்தில்
இல்லற வாழ்வில் இணையும் புதுமணத் தம்பதிகளான

எமது அன்பு மருமகன்
**சிரஞ்சீவி**
**விசாகேச சர்மா** வுக்கும்



எமது அன்புப் புதல்வி
**சௌபாக்கியவதி**
**ஹம்ஸத்வனி** இற்கும்

சகல நலன்களுடனும் இனிதே வாழ எம் இதயங்கனிந்த
நல் வாழ்த்துக்கள்



இன்றைய தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
நடைபெறும் 31ஆவது பட்டமளிப்பு வைபவத்தில்
**நுண்கலைமாணிப் பட்டம்** (B.FA) பெறும்
எமது செல்வப்புதல்வி **ஹம்ஸத்வனிக்கு**
எமது மனப்பூர்வமான பாராட்டுக்களும் நல்வாழ்த்துக்களும்
உரித்தாகுக!

**இறைவன் திருவருளால் மேன்மேலும் பல வெற்றிகள் பெற்று**
**வாழ்வில் சிறக்க எமது நல்லாசிகள்!**

வாழ்க வளமுடன் என வாழ்த்தும்

பெற்றோர்: **பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகரசர்மா**
(முன்னாள் இந்துகுருமார் ஒன்றிய செயலாளர்)
**ஸ்ரீமதி கௌரி மாலதி**

சகோதரன்: **பிரம்மஸ்ரீ சாந்தரூப சிவாச்சாரியார்**
**ஸ்ரீமதி ஸ்ரீகௌரி தம்பதிகள்**

சகோதரி: **செல்வி மயூரத்வனி**
**செல்வி S. பிரஹர்ஷிதா**
**செல்வன் S. ஹரிஹராத்மஜன்**
**மற்றும் உறவினர்கள்.**

*Best Wishes*

**"ஸ்ரீலக்ஷ்மி வாசா"**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மொழி, மதங்களின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டிய சொத்து

### சமாதானத்துக்கு அடித்தளம் இட மதவிரோதத்தை அகற்ற வேண்டும்

நாட்டில் மீண்டும் போர் ஒன்று தோற்றுவிக்கப்படாத வகையில், நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டங்களைப் பலப்படுத்தி, மக்கள் அனைவரும் ஒன்றிணைய வழிவகுக்க வேண்டும். சமாதானத்துக்கான அடித்தளமாக அது அமைவது அவசியம்.

இவ்வாறாகக் கருத்து வெளியிட்டுள்ளார், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தென் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தில், பயாகலையில் அமைந்துள்ள இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, ஜனாதிபதி மேற்சொன்ன கருத்தைத் தெரிவித்தார்.

- இலங்கையில் வாழும் சகல இனங்களையும் சேர்ந்த மக்கள் இடையே நிலவும், சந்தேகம் மற்றும் அச்சத்தை நீக்கி, சமாதா னத்தையும், சகோதரத்துவத்தையும் கட்டி எழுப்ப வேண்டும்.
- அதனை முன்னெடுப்பதற்கும் கட்டி எழுப்புவதற்கும் இன, மத பேதங்கள் தடையாக இருக்கக்கூடாது.
- தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகள் வெற்றி பெறுவதற்கான சூழமைவை உண்டாக்குவதில், அரசியல்வாதிகளை விடவும் சமயங்களின் தலைவர்களுக்கு மிகமுக்கிய பங்கு உண்டு--என்று அழுத்தம் திருத்தமாகச் சுட்டிக்காட்டியுள்ளார் ஜனாதிபதி.

அதேவேளை, தேசிய நல்லிணக்கத்தை எமது நாட்டில் உண்டாக்குவதற்கும், அதனை வெற்றி பெறச் செய்வதிலும், அரசியல்வாதிகளை விடவும், சமயங்களின் தலைவர்களுக்கே முக்கிய பங்கு உண்டு என்றும் ஜனாதிபதி அழுத்தி உரைத்துள்ளார்.

அத்தோடு நாட்டின் பிரதான சமயங்களான, பௌத்த, இந்து, கத்தோலிக்க, இஸ்லாமிய மதங்களின் தலைவர்களிடமும், அரசின் தேசிய நல்லிணக்கத் திட்டங்களையும் அதற்கான அடித்தளங்களையும் ஒன்றிணைந்து செயற்படுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெறும் சட்டங்களால், தேசிய மட்டத்தில் இன, மத நல்லிணக்கத்தை உருவாக்குவது என்பது வெறும் வாய் சப்பும் நிலைக்கே இட்டுச் செல்லும்.

சமயங்கள் மற்றும் நாட்டில் வாழும் இனங்கள் இடையே சமத்துவ உணர்வும், அவை நாடிய பழுதிலாத் திறனும் ஒரு சேர்ந்தால் மட்டுமே, உண்மையான இன, மத நல்லிணக்கத்தை உருவாக்க இயலும்.

தேசிய நல்லிணக்கத்தின் ஆணி வேர்களாக இன, மத சமத்துவம் வேரூன்ற வேண்டும்.

மனித வாழ்வியலுக்கு ஒவ்வாத மத வெறி, சமய விரோதம் போன்ற பாதையில் பயணிப்போரை தட்டிக் கேட்டுத் தடுக்கும் அதிகாரம், அரசின் கையில் இருக்க வேண்டும். எண்ணிக்கையில் பெரும்பான்மையினர், சிறுபான்மையினர்என்றபாரபட்சமானநிலைமேலோங்காமல் பார்த்துக்கொண்டால் மட்டுமே--

ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கள் பயன் விளைக்கும் என்பதனை ஊன்றிக் கருத்தில் கொள்ள வேண்டும். அது குறித்து நல்லாட்சி அரசு கருத்தில், கவனத்தில் கொள்ளட்டும்.....

# அரசமைப்பு உருவாக்கத்தில் சகல கட்சிகளின் பங்களிப்பும் பெற்றுக்கொள்ளப்படும்

## தீர்வுக்கு அடித்தளமாக 13 ஆவது திருத்தமே இருக்கும் முக்கிய அமைச்சர் கிரியெல்லவின் கருத்து

டெய்லிமிரர் பத்திரிகையில் இருந்து ரெங்கன்

தேசியப்பிரச்சினைக்கு ஒருதீர்வைக் காண்பதுதான் புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளில் மிகமுக்கிய காரணிகளில் ஒன்று என்று நெடுஞ்சாலைகள் மற்றும் உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறியுள்ளார்.

முன்னர் அரசமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளின் போது தமிழ்க் கட்சிகள் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. இந்தமுறை சம்பந்தப்பட்ட அனைவருக்குமே இடம் கொடுக்க நாம் தீர்மானித்திருக்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளாத நிலையிலான அரசமைப்பு உருவாக்க முயற்சியானது அர்த்தமற்றதாகும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவ்வாறுதான் கருதுகிறார். த.தே.கூட்டமைப்பு மட்டுமல்ல சகலரும் ஏற்றுக் கொள்வதான ஓர் அரசமைப்பு உருவாக்கத்தில் சகலகட்சிகளும் பங்கெடுத்துக் கொள்வதை நாங்கள் விரும்புகின்றோம் என்று அமைச்சர் கிரியெல்ல கூறியுள்ளார்.

இப்போதைய நல்லாட்சி அரசின் ஐ.தே.கட்சியின் சார்பிலான மிக முக்கிய அமைச்சர்களில் ஒருவரான லக்ஷ்மன் கிரியெல்ல கொழும்பு டெய்லி மிரர் பத்திரிகைக்கு வழங்கியுள்ள நேர்காணலில் முக்கிய சில அம்சங்கள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றது.

### தீர்வுக்கான முக்கிய சந்தர்ப்பம்

இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளங்குகிறார். ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கின்றார். இருதரப்பினரதும் உடன்பாட்டுடன் தீர்வொன்றைக் கண்டுபிடிப்பதற்கு கிடைத்திருக்கும் மிக முக்கிய சந்தர்ப்பம் இதுவாகும் என்று கூறிய அமைச்சர், தேசியப் பிரச்சினை குறித்த ஐ.தே.கவின் நிலைப்பாடு என்ன என்பதை விளக்குகையில், அதிகாரப் பகிர்வுதான் அது என்றார். அவர் மேலும் கூறியது; அரசமைப்பின் 13 ஆவது திருத்தங்கள் தொடர்பாக இரு கட்சியினரும் உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றோம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இதுபற்றிக் கூறியவை பதிவில் உள்ளன. அறிக்கைகள் மூலமும் வெளிநாட்டுத் தலைவர்களுடன் பரிமாறிக் கொண்ட கடிதங்களிலும் 13 ஆம் திருத்தத்துக்கு மேலதிகமாகவும் செல்வதற்கு தாம்

> இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளங்குகிறார். ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கின்றார். இரு தரப்பினரதும் உடன்பாட்டுடன் தீர்வொன்றைக் கண்டுபிடிப்பதற்கு கிடைத்திருக்கும் மிக முக்கிய சந்தர்ப்பம் இதுவாகும்.

தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இதுபற்றி நாம் விவாதிக்க வேண்டியிருக்கின்றது.

கேள்வி:தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அடித்தளம் 13 ஆவது திருத்தம் நடைமுறைப் படுத்துவதில்தான் இருக்கிறது என்பதுதான் இதன் கருத்தாகுமா?

பதில்:நிச்சயமாக அதுதான் அடித்தளம். எல்லாக் கட்சிகளும், த.தே.கூட்டமைப்பாகட்டும், ஜே.வி.பியாகட்டும் 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளில் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கின்றன. இதில் பிரச்சினை என்னவென்றால் 13 ஆவது திருத்தத்தில் குறிக்கப்படும் முழு அதிகாரங்களும் வழங்கப்படவில்லை. அதில் தெளிவில்லாத பகுதிகள் காணப்படுகின்றன.


காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை எடுத்துக்கொள்ளலாம். ஒரு தீர்வு குறித்து நாம் அனைவரும் ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டும். ஐ.தே.க. என்ன நினைக்கின்றது என்பது முக்கியமில்லை. நாம் உடன்பாட்டுக்கு வரவேண்டும். முக்கியமாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் கருத்தொற்றுமை ஏற்பட வேண்டும். அமைச்சர் மேலும் சில கேள்விகளுக்கு அளித்துள்ள பதில்கள் வருமாறு:

தீர்வொன்று உருவாகும் என்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றோம். ஏனென்றால் எங்கள் நோக்கம் நேர்மையானது. முன்னாள் ஜனாதிபதி வாக்குறுதியளித்துவிட்டு செய்யாமல் விட்டதைத்தான் செய்யப்போகிறோம். போர் முடிந்தவுடன் அரசியல் தீர்வு பற்றிய அவருடைய நிலைப்பாட்டை அனைவரும் கேட்டிருந்தார்கள் அதுபற்றி நாடாளுமன்றம் தீர்மானிக்கும் என்று அவர் கூறியிருந்தார். பல தடவைகள் அப்படிக் கூறியிருந்தார். அதைத்தான் நாங்கள் செய்யப்போகிறோம். முன்னாள் ஜனாதிபதியின் கால்தடங்களைக் கூட்டு எதிர்த்தரப்பினர் பின்பற்றுவதாயின் அவர்கள் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும்.

### வெளிப்படையாகவே செயற்பாடு இருக்கும்

இந்தச் செயற்பாடு வெளிப்படையாகவே மேற்கொள்ளப்படும், புதிய அரசமைப்பின் ஒவ்வொரு பிரிவும் உள்நாட்டு வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் முன்னிலையில் முழு நாடாளுமன்றத்தினாலும்

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாதிக்கப்படும். பொதுமக்கள் கண் முன்னாலேயே நாம் அனைத்தையும் செய்யவிருக்கின்றோம்.

வெளிநாடுகள் எம்மீது எதனையும் திணிக்க முடியவில்லை. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எமது சொந்த வழிகளைப் பயன்படுத்தும்படிதான் அவர்கள் கூறுகிறார்கள். எமது பாரம்பரிய கலாசார முறைகளை நாம் பயன்படுத்த வேண்டும். அவர்களின் ஆலோசனை அதுதான். உள்நாட்டு முறையிலான தீர்வொன்றைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பதே அவர்கள் கூறுவது.

போர் முடிந்தவுடன் உள்ளக விசாரணை ஒன்றை நடத்தப்போவதாக அப்போதைய ஜனாதிபதி வாக்களித்தார். அதை அவர் செய்யவில்லை. எனவே சர்வதேச சமூகத்தின் ஒரு பிரிவினர் அதைத் தாமே செய்ய முயன்றனர். இப்போது நாமே அதை செய்வதாகஉள்ளக விசாரணை நடத்துவதாக, வாக்களித்துள்ளோம். எம்மிடம் போதுமான அளவு சட்ட வல்லுநர்கள் இருக்கிறார்கள். எனவே வெளிநாட்டு நிபுணர்கள் எமக்குத் தேவையில்லை.

**இணைப்பு வேண்டின் நீதிமன்றை நாடலாம்**

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உயர் நீதிமன்றத் தீர்ப்பொன்றையடுத்து பிரிக்கப்பட்டு விட்டன. அவைகளை மீண்டும்இணைக்க வேண்டும் என்று கோருபவர்கள் அதனை உயர் நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்று கோரிக்கை விடவேண்டும். அது குறித்து அரசு முடிவு எதுவும் செய்ய முடியாது.

சமஷ்டி அமைப்பு அல்லது ஒற்றையாட்சி பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. இந்த சொற்பிரயோகங்கள் எதனையும் அர்த்தப்படுத்துவதாய் இல்லை. சமஷ்டி அல்லது ஒற்றையாட்சி என்பவை தேவையற்றவை. ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டியவர்கள் நாடாளுமன்றத்திலுள்ள அரசியல் கட்சிகளே. சொற்களைப் பற்றி கவலையில்லை.

இந்திய அரசமைப்பை வரையறை செய்யும்படி எவரையும் கேட்டால் அவர்களால் அதைச் செய்ய முடியாது. அதில் கடுமையான ஒற்றையாட்சித்தன்மைகள் உண்டு. கடுமையான சமஷ்டித் தன்மையும் உண்டு. அடிப்படையில் அரசமைப்பின் கட்டுமானத்தை இலகுவில் மாற்ற முடியாத ஒருமுறையைக் கொண்டுவர விரும்புகின்றோம். 18 ஆவது அரசமைப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டபோது எல்லாவித அதிமுக்கிய நிறுவனங்களும் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. அரசமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பையே அது மாற்றி விட்டது. உயர் நீதிமன்றம் அரசமைப்பின் அடிப்படை கட்டமைப்பையே அது மாற்றிவிட்டது என்று தீர்ப்பளித்திருக்க வேண்டும் என்பது என் கருத்து. நீதிமன்றங்களுக்கு முக்கிய பங்கு இதில் இருக்கின்றது. அரசமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பையே நாடாளுமன்றம் மாற்றி அமைக்க முயலும்போது விழிப்புடனிருந்து அதற்கு மேலாக சென்று நீதிமன்றங்கள் தீர்ப்பளிக்க வேண்டும்.

இந்தியாவில் பிரதம நீதியரசருடன் ஜனாதிபதியானவர் கலந்துரையாட வேண்டும் என்று ஒரு சரத்து இருக்கின்றது. உச்சநீதி மன்றுக்கு நீதியரசர்களை நியமனம் செய்வது தொடர்பானது அது. அவ்வாறான ஒரு சம்பவத்தில் பிரதம நீதியரசரின் சம்மதத்தைப் பெற முடியாமல் போய்விட்டது.

அதனால் உச்ச நீதிமன்றம் பின்வரும் நிலைப்பாட்டை வெளியிட்டது. உச்ச நீதிமன்ற நீதியரசருடன் கலந்தாலோசிப்பது என்பது அவருடைய சம்மதத்தைப் பெறுவது என்பதும் கருத்தாகின்றது. எனவே பிரதம நீதியரசருடன் கலந்தாலோசித்த பின் அவர்கருத்து உதாசீனம் செய்யப்படுவது சட்டத்துக்கு மாறான செயல். இது இந்தியநீதிமன்றத்தின் தீர்ப்பு.

எனவே அரசமைப்புச்செயற்பாட்டில் உயர் நீதிமன்றத்துக்கு முக்கிய பங்குபணி ஒன்றும் இருக்கிறது. இந்தியாவில் போன்று இங்கும் மிகத் துடிப்பாக செயற்படும் உயர் நீதிமன்றம் இருப்பது அவசியம் என்று நாம் கருதுகிறோம்.



> இந்திய அரசமைப்பை வரையறை செய்யும்படி எவரையும் கேட்டால் அவர்களால் அதைச் செய்ய முடியாது. அதில் கடுமையான ஒற்றையாட்சித்தன்மைகள் உண்டு. கடுமையான சமஷ்டித்தன்மையும் உண்டு. அடிப்படையில் அரசமைப்பின் கட்டுமானத்தை இலகுவில் மாற்ற முடியாத ஒரு முறையைக் கொண்டுவர விரும்புகின்றோம்.

# வவுனியா இளைஞனின் சாவில் உண்மையில் நடந்தது என்ன?

கடந்த 11ஆம் திகதி அன்று வவுனியா தனியார் வங்கிக் கிளை உள்வட்ட வீதியில் அமைந்துள்ள 3 மாடிக் கட்டடத்தில் மின்சாரம் தாக்கியதால் சாவடைந்த 32 வயது இளைஞனின் சாவு சம்பந்தமாக ஏற்படும் சந்தேகங்கள் களையப்பட வேண்டும்.

இந்த இளைஞனின் சாவு விபத்தா? கொலையா? என மக்கள் சந்தேகம் கொள்ளுகின்றனர். மின்சாரம் தாக்கியதால் ஏற்பட்ட சாவுக்குரிய எந்தவொரு காயமும் இந்த இளைஞனின் உடலில் காணப்படவில்லை என்பதும் அங்கு நின்று பார்த்த பொதுமக்களின் கண்களில் தென்படவில்லை என்பதும் உண்மையான விடய மாகும்.

இந்த இளைஞன் மாபிள் (ரைல்ஸ்) பதிப்பதில் வவுனியாவில் சிறந்த தொழிலாளியாக முன்னிலைப்படுத்தப்பட்டவர் என்பது தெரிகிறது. இவரது சாவு ஏற்பட்ட இடத்தில் மின்சார ஒழுக்கு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் எதுவும் காணப்படவில்லை என்று அங்கு சென்று பார்த்த மின்சாரம் சம்பந்தமாக தொழில் செய்யும் இளைஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். மேசன் வேலை செய்யும் இளைஞன் மின்சாரம் தாக்கி இறந்ததாகக் கூறப்படுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்பது இவர்களின் கூற்று. மின்சாரம் தாக்கியிருந்தால் இந்த இளைஞனின் உடலில் எரிகாயங்கள் ஏற்பட்டிருக்கும் என்பது இவர்களின் வாதம்.

மூன்றாவது மாடியில் வெல்டிங் வேலை செய்வதற்கு, பிரதான மின்கம்பத்தில் இருந்து மின்சாரம் பெறப்பட்டுள்ளது. இது மின்சார சபையின் அனுமதியின் பேரில் பெறப்பட்டதா? அப்படியாயின் அதற்குரிய பாதுகாப்புக்கள் ஏன் செய்யப்படவில்லை? உதாரணமாக றிப்சுவிச் ஏன் பூட்டப்படவில்லை என்பது இவர்களின் கேள்வி. பாதுகாப்பில்லாத இடத்துக்கு மின்சார சபையால் எவ்வாறு மின்சாரம் வழங்கப்பட்டது? சாதாரண பொதுமக்கள் ஒரு சிறு தவறு செய்தாலும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து தண்டிக்கப்படுகின்றனர்.

அத்துடன் அங்கு வேலை செய்பவர்களும் முன்னுக்குப் பின் முரணான தகவல்களைக் கூறுகின்றனர். இவரிடம் வேலை செய்த சகதொழிலாளி இந்த இளைஞனை மின்சாரம் தாக்கியவுடன் அவர் விடடா என்று கத்தியதாகவும் கூறினார். மின்சார தொழிலாளிகளைக் கேட்டால் மின்சாரம் தாக்கினால் எந்தவித ஒலியும் வாயில் இருந்து வராது எனக் கூறுகின்றனர். இதனால் இந்த விபத்தில் மர்மம் இருப்பதாக இவர்கள் கூறுகின்றனர்.

அதேநேரம் இந்த இளைஞனை மின்சாரம் தாக்கியதாகக் கூறப்படும் இடம் உடனடியாக கூட்டித் துப்புரவு செய்யப்பட்டுள்ளதாகவும் அங்கு சென்று பார்த்த இளைஞர்கள் கூறுகின்றனர். இந்த மரணம் கூட்டுச் சதி வேலையாக இருக்குமோ என்று இவர்கள் சந்தேகிக்கின்றனர்.

இதில் ஒருவரின் கூற்று இந்த இளைஞனை மின்சாரம் தாக்கியதும் தாங்கள் உடனே வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அதிவிசேட சிகிச்சைப் பிரிவில் சேர்த்ததாகவும், அங்கு சிகிச்சை வழங்கப்பட்டதாகவும் கூறினார். ஆனால் வைத்தியசாலைத் தகவ லின்படி தாங்கள் பொறுப்பேற்கவில்லை என்றும், வைத்தியசாலைக்கு வருமுன்னே இறந்துவிட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

சகதொழிலாளி ஒருவர் தலைமறைவாகியதாகவும் தெரிகின்றது. உண்மையான விடயம் பணத்தால் மூடி மறைக்கப்பட்டு விட்டதா? என பொதுமக்கள் நினைக்கிறார்கள்.

இரண்டு பேர் இவரைப் பிடிக்க ஒருவர் இவரை நெஞ்சிலே தாக்கியிருக்கின்றார். அப்போது தான் அவர் விடடா, விடடா எனக் கத்தியிருக்கின்றார். இதை மூடி மறைக்கத்தான் மின்சாரம் தாக்கியதாகக் கதை பரப்புகின்றார்கள் எனத் தெரிகின்றது.

அத்துடன் மரண விசாரணை அதிகாரிக்கும் ஒரு வேண்டுதல், துன்பப்பட்டு வரும் மக்களை மக்களாகப் பாவித்து அவர்களை விசாரணை செய்யுங்கள் என மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

இந்த இளைஞனின் சாவில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களைத் தீர்க்க, உண்மை கண்டறியப்பட வவுனியா, மாவட்ட கௌரவ நீதிபதிக்கும் வவுனியா துப்பறியும் பொலிஸாருக்கும் இது சமர்ப்பணம்.

மக்கள் குரலாக திமிலவன், வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நிலையில் எம் இந்துக் கோயில்கள்



மிருசுவில் தமிழ்தாசன்

(நேற்றைய தொடர்ச்சி...)

ஆனால் பெரிய குடும்பத்தைக் கொண்டவர்கள் தமது குடும்பத்தைப் பராமரிக்க ஏராளமான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி வரும். கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டுதான் குடும்பத்தை நடத்தலாம். அதேபோல ஊரில் வாழ்கின்ற மக்களால்தான் கோயில்கள் பராமரிக்கப்பட வேண்டும். அளவுக்கதிகமாகக் கோயில்களைக் கட்டி கிராமத்தின் அரைப்பங்கு நிலப்பரப்பை அந்தக் கோயில்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதால் ஊருக்கு என்னதான் சிறப்புக் கிடைத்துவிடப் போகின்றது! இப்படி நடக்கும் என்று தெரிந்திருந்தால் ஔவையார் இதைப் பற்றி வாயே திறந்திருக்க மாட்டார். அளவுக்கு மிஞ்சினால் அனைத்துமே அர்த்தமற்றதாகிவிடும்.

எமது இந்துக் கோயில்களை மடாலயம், தேவஸ்தானம் என்னும் பல நாமங்களைச் சூட்டி பெருமையுடன் அழைக்கின்றோம். இவர்களைப் பராமரிப்பதற்கு பரிபாலன சபை, தர்மகர்த்தா சபை என நிர்வாகங்களை அமைத்துக்கொள்கின்றோம். துரதிர்ஷ்டவசமாக நிர்வாக உறுப்பினர்களுக்குள் அபிப்பிராய பேதங்கள், கருத்து முரண்பாடுகள், போட்டிகள், பூசல்கள் உருவாகுவதும் அவைகளைக் காரணமாக்கி அந்த நிர்வாக சபையிலிருந்து தாமாகவே வெளியேறிக் கொள்பவர்களும் உண்டு. வெளியேற்றப்படுபவர்களும் உண்டு. இவர்கள் செல்வதுடன் நிற்காது, பக்கத்திலே நாலு தூண்களை நட்டு தன்னுடைய சொந்தக் காணியில் ஏதோவொரு விக்கிரகத்தை வைத்து ஒரு புதிய கோயிலை ஆரம்பிப்பார்கள். இது போட்டிக்காகவும் பழி தீர்ப்பதற்காகவும் கட்டப்படும் கோயில். ஆனால் இதனுடைய ஆயுள்காலம் ஒரு சில வருடங்களுக்கு மட்டுமே நிலைக்கும். இவ்வாறு ஆளாளுக்கு கோயில் கட்டி கோயில்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்பவர்களும் உண்டு. இன்னும் சிலர் சும்மா இருக்க முடியாது. வீடு வீடாகத் திரிந்தலைந்து ஊர் மக்களிடம் நிதி திரட்டி புதிய கோயில்களைக் கட்டிகௌரவத்தை சம்பாதித்தவர்களையும் நாம் காண்கின்றோம். இதே புதிய கோயிலைக் கட்டி கும்பாபிஷேகம் செய்யும் இந்த வேளையில் மறுபுறத்தில் பல கோயில்கள் விளக்கின்றி பூசையின்றி வௌவால்களின் வாசஸ்தலங்களாக மாறிக்கொண்டிருப்பதை எவருமே உணர்ந்து கொள்வதில்லை. எத்தனை கோயில்கள் கூரையின்றி, கதவுகள், ஜன்னல்கள் இன்றி வெறும் கட்டடங்களாக சோபை இழந்து குருட்டு வௌவால்களுக்கும் நாய்களுக்கும் கட்டாக்காலி மந்தைகளுக்கும் கலாசார சீர்கேடு புரிவோரும் அருமையான களங்களாய் அமைந்து கொண்டிருக்கின்றன. இன்னும் சில கோயில்களின் திறப்புக்கள் நிர்வாகத்தினரின் கைகளில் இருப்பதில்லை. பொலிஸ் நிலையங்களிலும் நீதிமன்றங்களிலும் ஒப்படைக்கப்பட்டிருக்கும். வழக்குகள் பிணக்குகள் காரணமாக நிர்வாகங்கள் இவ்வாறு சின்னாபின்னப்பட்டு அதன் விளைவாக கோயில்களும் செயலிழந்து முழுக்கிராமமே இருள் சூழ்ந்து அழிவுப் பாதையை நோக்கிச் செல்லும் அபாயத்துக்கு ஆளாகி வருகின்றோம் என்பதை எங்களில் எத்தனைபேர் உணர்கின்றார்கள்!

இத்தனை கோயில்களிலிருந்து இத்தனை அசௌகரியப்பட்டுக் கொண்டிருக்கும் அதேசமயம், வீடு வீடாகக் கோயில்களை ஸ்தாபிப்பவர்களையும் காண்கிறோம். குலதெய்வங்கள் என்னும் பெயர்களில் காளி, அண்ணமார், நாச்சிமார், வீரபத்திரர் என்று வலிந்து கோயில்களைக் கட்டிக் கொள்கின்றனர். ஆனால் அவைகளுக்கு ஆண்டுக்கொரு தடவையோ அல்லது இரண்டு தடவைகளோ தான் வெளிச்சம், பூசை மடையென்பன கிடைக்கும். மிகுதி காலமெல்லாம் கோயிலின் அடையாளத்தையே கண்டுபிடிக்க முடியாது. இன்னும் ஒருசிலர் தங்களின் குலதெய்வங்களுக்குப் பெருமை தேடிக்கொள்ளும் பொருட்டுக் கலையாடி கட்டுச்சொல்லிக் கோயில்களையும் தங்களையும் விளம்பரப்படுத்திக் கொள்வர்.

நிலைமை இவ்வாறிருக்க ஊரிலுள்ள மக்கள் எந்தக் கோயிலைக் கும்பிடுவது என்று திண்டாடுவதும் உண்மையே. ஒரே தினத்தில் ஒரு கோயிலில் கும்பாபிஷேகம், மறு கோயிலில் தேர்த்திருவிழா, இன்னொரு கோயிலில் கொடியேற்றம்! ஒரு சிறிய தொகை மக்கள் வாழும் கிராமத்தில் மக்களால் உருப்படியாக ஒரு கோயிலைக் கூட வழிபட முடிவதில்லை. பல காலமாக ஊரிலே அருளாட்சி புரிந்து வரும் பாரம்பரியம்மிக்க கோயில்களில் சுவாமி காவுவதற்கோ, குடைகொடிஆலவட்டம் பிடிப்பதற்கோகூட ஆள்களுக்குப் பஞ்சம் நிலவுவதைக் காணக்கூடியதாயிருக்கின்றது.




## சிங்கம்

வாழ்வில் பலமுறை தோல்வியைச் சந்தித்தாலும் துணிந்துநின்று போராடக்கூடிய ஆற்றல்கொண்ட சிம்ம ராசி நேயர்களே! இந்த 2016-ஆம் ஆண்டில் சனி பகவான் 4இல் சஞ்சரிப்பதால் அஷ்டமத்துச் சனி நடைபெறுகிறது. இது சற்று அலைச்சல், பதற்றம், ஆரோக்கிய பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய அமைப்பாகும். ஆண்டின் தொடக்கத்தில் குரு பகவான் ஜென்ம ராசியில் சஞ்சாரம் செய்வதால் தொழில், பொருளாதார ரீதியாக நெருக்கடிகள் ஏற்படும். 08-01-2016 முதல் ஜென்ம ராசியில் ராகு, 7இல் கேது சஞ்சாரம் செய்வதும் குடும்பத்தில் பிரச்சினைகள், நெருங்கியவர்களிடையே கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தும் அமைப்பாகும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது, முன்கோபத்தைக் குறைப்பது, பிறர் விடயங்களில் தலையீடு செய்யாமலிருப்பது நல்லது. 02-08-2016 முதல் குரு தனஸ்தானமான 2-ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்யவிருப்பது வாழ்வில் ஏற்றத்தை ஏற்படுத்தும் அமைப்பாகும். பொருளாதாரரீதியாக இருந்த பிரச்சினைகள் படிப்படியாக குறையும். திருமணம் போன்ற சுபகாரியங்களில் இருந்த தடைகள் விலகி அனைத்தும் தடபுடலாக நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். புத்திர பாக்கியம் உண்டாகக்கூடிய அமைப்பு கொடுக்கும். உங்களுக்கு இருந்துவந்த வம்பு வழக்குகளிலும் நல்லதொரு தீர்வு உண்டாகும். குடும்பத்திலுள்ளவர்களின் ஆரோக்கியமும் சிறப்பாக இருக்கும். தொழில், வியாபாரத்திலிருந்த மறைமுக எதிர்ப்புகள் விலகும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்க்கும் இடமாற்றங்களைப் பெற்று குடும்பத்தோடு சேருவார்கள். ஆண்டின் முற்பாதியில் எதிலும் சற்று சிந்தித்துச் செயற்பட்டால் பிற்பாதியில் முன்னேற்றங்களை அடையமுடியும்.

### உடல் ஆரோக்கியம்

உடல் ஆரோக்கியத்தில் ஆண்டின் தொடக்கத்தில் சில பாதிப்புகள் ஏற்பட்டாலும் ஓகஸ்ட் மாதத்துக்குப் பிறகு ஓரளவுக்கு மேன்மைகள் உண்டாகும். எடுக்கும் காரியங்களில் சுறுசுறுப்பாக ஈடுபடமுடியும். குடும்பத்தில் உள்ளவர்களால் சிறுசிறு மருத்துவச் செலவுகள் ஏற்பட்டாலும் எதையும் சமாளித்து முன்னேறுவீர்கள்.

### குடும்பம், பொருளாதார நிலை

குடும்பத்தில் ஆண்டின் முற்பாதியில் தேவையற்ற மனக்கவலைகள் ஏற்பட்டாலும், ஓகஸ்ட் மாதத்துக்குப் பிறகு மகிழ்ச்சியும் சுபிட்சமும் அதிகரிக்கும். தடைப்பட்ட சுபகாரியங்கள் கைகூடும். பணவரவுகள் தாராளமாக அமைந்து கடன்கள் அனைத்தும் குறையும். உற்றார்-உறவினர்களிடையே நிலவிய கருத்துவேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை அதிகரிக்கும்.

### உத்தியோகம்

ஆண்டின் முற்பாதியில் எதிலும் தடை தாமதங்களையும் வீண் பழிச் சொற்களையும் சந்தித்தாலும், ஓகஸ்ட் மாதத்துக்குப் பிறகு அனைத்து பிரச்சினைகளும் பனி போல் விலகி எதிர்பார்க்கும் உயர்வுகள் கிடைக்கப்பெறும். சிலர் வேண்டிய இடமாற்றங்களைப் பெற்று குடும்பத்தோடு சேருவார்கள். உத்தியோகரீதியாக சிலருக்கு அலைச்சல்கள் சற்று அதிகரிக்கக்கூடும்.

### தொழில், வியாபாரம்

தொழில், வியாபாரத்தில் ஆண்டின் முற்பாதியில் நிறைய போட்டி பொறாமைகளும் மறைமுக எதிர்ப்புகளும் நிலவினாலும் ஓகஸ்ட் மாதம் ஏற்படவுள்ள குரு மாற்றத்தின்மூலம் மறுமலர்ச்சி உண்டாகும். புதிய வாய்ப்புகள் தேடிவரும். வேலையாள்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். நவீன கருவிகள் வாங்கும் எண்ணம் நிறைவேறும். அரசு வழியில் எதிர்பார்க்கும் உதவிகள் கிட்டும். தேவையற்ற அலைச்சல்களும் அதிகமாக இருக்கும்.

### கொடுக்கல்- வாங்கல்

ஒப்பந்தம், கமிஷன், ஏஜென்சி போன்ற துறைகளில் உள்ளவர்கள் ஆண்டின் முற்பாதியில் சில பிரச்சினைகளை, பணவரவில் தடைகளை சந்தித்தாலும் ஓகஸ்ட் மாதம் முதல் தாராள தனவரவுகள், கொடுக்கல் வாங்கலில் சரள நிலை உண்டாகும். கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்ற முடியும். உங்களுக்கு இருந்துவந்த வம்பு வழக்குகள் தீரும்

### அரசியல்

இந்த ஆண்டின் முற்பாதிவரை நீங்கள் எதிலும் சிந்தித்துச் செயற்படுவதும், மேலிடத்தில் உள்ளவர்களை அனுசரித்து நடப்பதும் நல்லது. மக்களின் ஆதரவைப்பெற கொஞ்சம் அதிக முயற்சிகளை மேற்கொள்வது மிகவும் உத்தமம். ஓகஸ்ட் மாதம் முதல் உங்களுக்கு இருக்கும் பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகிட்டும்.

### கலைஞர்கள்

இந்த ஆண்டின் முற்பாதியில் புதிய வாய்ப்புகளில் தடை, தேவையற்ற பிரச்சினைகளில் சிக்கி பத்திரிகைமூலம் அவமானங்கள் உண்டாகக்கூடிய நிலை ஏற்பட்டாலும் ஓகஸ்ட் மாதம் முதல் உங்களுக்கிருந்த பிரச்சினைகள் படிப்படியாக விலகி முன்னேற்றம் உண்டாகும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இசை, நடனத்துறைகளில் உள்ளவர்களுக்கும் மேன்மையான பயன்கள் உண்டாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்புலவர்
அம்பலவாணர் இராஜரட்ணம்



# அறிவியலும் அழிவியலும்

ஆதியில் மனித அறிவு குன்றியிருந்த காலத்தில் மனிதன் பல பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அவன் தன் உயிரைத் தக்க வைக்க இயற்கையுடன் போராட வேண்டியிருந்தது. பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்த அவன் தன் முயற்சியாலும் சிந்திக்கும் ஆற்றலாலும் அந்தக் கஷ்டங்களைத் தாங்கி மேலான நிலையை அடைந்து சந்தோசமாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்து வந்தான்.

அந்தக் காலகட்டத்தில் சராசரி மனிதன் தினசரி செய்த வேலைகளையும் அதனால் அவன் பெற்ற நன்மைகளையும் சற்றுக் கவனிப்போம். தினமும் அதிகாலை நித்திரைவிட்டெழுந்து தன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வேப்பங் குச்சியாலோ அல்லது ஆலங்குச்சியாலோ பல்துலக்குவான். இவையிரண்டும் பல்லிலுள்ள அழுக்குகளை நீக்குவது மாத்திரம் அல்ல. பல்லில் ஏற்படும் கிருமிகளையும் அழித்துவிடவல்லன.

அதன்பின்பு குளிர்ந்த நீர் கொண்ட கிணற்றுநீரை துலா மூலமோ, கப்பி மூலமோ அள்ளிக்குளிப்பான். உடலுக்கு மஞ்சள், தேசிக்காய்ச் சாறு பூசி மீண்டும் குளிப்பான். இவைகள் உடலின் மேல் உள்ள கிருமிகள் யாவற்றையும் கொல்லவல்லன. பின்பு தன் தாயோ அல்லது மனைவியோ அல்லது சகோதரமோ கொடுக்கும் முதல்நாள் சமைத்து நீரூற்றப்பட்ட பழஞ்சோற்றுடன் பனாட்டும் சேர்த்து உண்டுவிட்டு ஏர், மண்வெட்டி போன்றவைகளைத் தோளில் சுமந்த வண்ணம் எருதுகளையும் விரட்டிக்கொண்டு சென்று வயலை அடைந்து மண்வெட்டியால் பாத்திகளுக்கு வரம்பு அமைத்து ஏர் பூட்டி உழுவான். இயற்கைப் பசளைகளான எருவின் சாணத்தையும் ஆட்டுப் பிழுக்கைகளையும் உக்கிய இலைகுழைகளையும் பசளையாகப் போட்டு நெற்பயிர்களையுமோ சாமி, தினை, குரக்கன் போன்ற பயிர்களையோ வளர்த்தெடுப்பான். அத்தோடு தோட்டத்தில் மரக்கறி வகைகளையும் விளைவித்துக்கொள்வான். மதிய வேளையில் தாயோ அல்லது மனைவியோ அல்லது சகோதரியோ கொண்டுவரும் உணவை உண்டு மாலை வேளையில் மறுநாளுக்குத் தேவையான மரக்கறி வகைகளோடு வீடு திரும்புவான். மாடுகளைப் பட்டியில் கட்டிவிட்டு இறைவணக்கம் செய்து இரவில் கூழ், கஞ்சி போன்ற நன்கு செமிக்கக்கூடிய உணவு வகைகளை உண்டு நேரகாலத்தோடு உறக்கத்துக்குச் செல்வான். தினமும் செய்யும் வேலைகள் யாவும் அவனுக்கு உடற்பயிற்சியாக அமையும். அறுவடையின் பின் தன் மாடுகளைக் கொண்டே சூடுமிதித்து நெல் மணிகளைக் மூடைகளாகக் கட்டி தனது வண்டியிலே வீடு கொணர்ந்து சேர்ப்பான். வைக்கோல்கள் கற்றைகளாகக் கட்டப்பட்டு வயலின் ஒரு மூலையில் பட்டடையாகப் பழுதாகாமல் பேணப்படும் இவைகளை எருதுகளுக்கு உணவாகத் தினமும் இடுவான்.

இதுபோலவே அவனது மனைவியும் வீடு கொணர்ந்த நெல்மணிகளை அவித்தோ அல்லது பச்சையாகவோ காயவைத்து உரலில் இட்டுக் குற்றிப் புடைத்து அரிசியாக்குவாள். ஒரு பகுதியை இடித்து மாவாக்குவாள் அல்லது கல் திரிகையால் அரைத்து மாவாக்குவாள். கறி உறைப்பாக இருக்க காய்ந்த மிளகாய், மல்லி, சீரகம் போன்ற வகைகளை உடனுக்குடன் அம்மியில் அரைத்து கறி சமைப்பாள். இந்த வேலைகள் அவளது உடலுக்கு சிறந்த உடற்பயிற்சியாக அமையும். சுத்தமானதும் போசாக்கு மிக்கதுமான உணவையே யாவரும் உண்டு. சுகேதிகளாக வாழ்ந்தார்கள். அவர்களை நோய் நொடிகள் எட்டியும் பார்க்கமாட்டாது. எண்பது, தொண்ணூறு வயதிலும் சுகதேகிகளாக வாழ்ந்தார்கள்.

அந்தக் காலத்தில் சுதேச வைத்தியர்கள் கை நாடிகள் மூலம் நோய்களை இனங்கண்டு மூலிகைகள், வேர்கள், பட்டைகள் மூலமாக வைத்தியம் செய்து குணப்படுத்தினார்கள். அப்போதெல்லாம் நோய்களும் குறைவு. உயிர்கொல்லி நோய்களும் மிக மிக அரிதாகக் காணப்பட்டன. மனிதன் சுகதேகியாக நீண்ட ஆயுளுடன் சந்தோசமாக வாழ்ந்தான்.

அந்தக் காலக் குடிசைகள் பெரும்பாலும் பதிவாகவே இருந்தன. தடிகளினால் கட்டப்பட்டு களிமண்ணினாலும் சுண்ணக்கல், முருகைக்கல் போன்றவைகளை உபயோகித்து சுவர்கள் எழுப்புவார்கள். தரை மாட்டுச் சாணத்தினால் மெழுகப்பட்டிருக்கும். கூரைகள், பனை ஓலைகளாலோ, தென்னை ஓலைகளினாலோ அல்லது வைக்கோலினாலோ வேயப்பட்டிருக்கும். வெப்ப காலத்தில் வீட்டுக்குள்ளே குளிர்ச்சியையும் மாரி காலத்தில் வெப்பத்தையும் கொடுத்து சமநிலைப் படுத்தும். வீட்டுக்குள்ளே செல்பவர்கள் குனிந்தே சென்று பின் குனிந்தே வெளிவருவார்கள். இந்த நிகழ்வானது வீட்டுக்கு சிரம் தாழ்த்தி வணங்கி உள்ளே செல்வது போலமையும். அது மாத்திரமல்ல உடலுக்கு நல்ல பயிற்சியாகவும் அமையும்.

ஆண்கள் புதன், சனி போன்ற நாள்களிலும் பெண்கள் செவ்வாய், வெள்ளி நாள்களிலும் நல்லெண்ணெய்யை உடல் முழுவதும் பூசி ஒரு சில மணித்தியாலங்களின் பின்பே தலைக்கு சிகைக்காய் வெந்தயம் அரைத்துப் பூசி உடலுக்கு தேசிக்காய், மஞ்சள் பூசி குளிர்ந்த நீரில் குளிப்பார்கள். இதனால் உடல் வெப்பம் குறைந்து வெப்ப நோய்களான சின்னமுத்து, கூகைக்கட்டு, கொப்புளிப்பான் அம்மை போன்ற நோய்கள் எட்டியும் பார்க்க மாட்டா. தலைமயிர் கருமையாகவும், உதிராமலும் இருக்கும்.

> வெப்ப காலத்தில் வீட்டுக்குள்ளே குளிர்ச்சியையும் மாரி காலத்தில் வெப்பத்தையும் கொடுத்து சமநிலைப்படுத்தும். வீட்டுக்குள்ளே செல்பவர்கள் குனிந்தே சென்று பின் குனிந்தே வெளிவருவார்கள். இந்த நிகழ்வானது வீட்டுக்கு சிரம் தாழ்த்தி வணங்கி உள்ளே செல்வது போலமையும். அது மாத்திரமல்ல உடலுக்கு நல்ல பயிற்சியாகவும் அமையும்.

பாடசாலைகள் ஊர் மனைகளுக்குள்ளேயே இருந்தன. பிள்ளைகள் கால்நடையாகவோ, மாட்டுவண்டி அல்லது குதிரை வண்டி மூலமோ பாடசாலைக்குச் செல்வார்கள். ஆசிரியர் வந்ததும் எழுந்து நின்று வணங்கி அவர் சொல்லிக் கொடுக்கும் பாடங்களைக் கவனமாகக் கேட்பார்கள். விளையாடுவதற்கு பொது விளையாட்டு மைதானங்களும் இருந்தன. கிளித்தட்டு, கிட்டிஅடி, எல்லே போன்ற விளையாட்டுக்கள் விளையாடுவர்கள். பனையோலையாலோ, புல்லினாலோ இழைக்கப்பட்ட பாயிலே துயில் கொள்வார்கள்.

உணவு வகைகளை வாழை இலையிலோ, தாமரை இலையிலோ படைத்து உண்பார்கள். கூடுதலாகப் பனம் பண்டங்களான புளுக்கொடியல், ஒடியல், கருப்பட்டி போன்றவைகளையும் எள்ளு, கொள்ளு, சாமி, தினை, குரக்கன் போன்ற தானியங்களையும் உண்பார்கள். அந்தக் காலத்தில் இயற்கைப் பசளையில் வளர்ந்த மரங்களில் இருந்து கிடைக்கும் பழங்கள் ருசி உள்ளவைகளாகவும் ஊட்டச்சத்து மிகுந்தவைகளாகவும் பூச்சிகள் அரிக்காதவைகளாகவும் இருந்தன. அந்தப் பழங்களை முற்றியவுடன் பிடுங்கி உமி, வைக்கோல் போன்றவைகளுக்குள் இட்டுப் பழுக்க வைத்தனர். அவை சுவை மிக்கதாகவும் போசணை மிக்கதாகவும் இருந்தன.

பொழுது போக்குக்காகவும் அறிவு வளர்ச்சிக்காகவும் சமய, சமூக, இலக்கிய நாடகங்கள் கிராமங்கள் தோறும் நடைபெறும். அதில் ஆண்களே பெண்வேடமும் அல்லது பெண்களே ஆண்வேடமும் போட்டு நடித்து தங்கள் கற்பைக் காத்துக்கொள்வார்கள். கலாசாரம் சீர்கெடாமல் இருந்தது. நாடகங்களைப் பார்த்து மக்கள் களிப்படைவார்களேயொழிய மனதில் பதட்டமும் அச்சமும் கொள்ள மாட்டார்கள்.

தூர இடங்களுக்கு கல்யாண நிகழ்வு நிமித்தமாகவோ அல்லது இறப்பு நிகழ்வு நிமித்தமாகவோ பயணம் செய்வதற்கு மாட்டுவண்டியோ, குதிரை வண்டியையோ பயன்படுத்தப்படும் கடற்பயணங்கள் யாவும் கட்டுமரம், தோணி, பாய்க்கப்பல் மூலமாகவே நடைபெற்றன. குடும்பமாகக் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு சென்று இடைவழியில் உண்டு இளைப்பாறி சந்தோசமாகப் பயணம் செய்தார்கள். *(தொடரும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இஸ்தான்புல்லில் காயோஸ் நகரில் கடும் பனிப்பொழிவு இடம்பெற்றுள்ளது. இதனால் அங்கு வசிக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று 315
போக்குவரத்துகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இந்த வாரம் தொடர்ச்சியாக பனிப்பொழிவு இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்

# உலகின் பாதிப் பணம் 62 செல்வந்தர்களிடம்

லண்டன், ஜன.20

உலகில் 62 செல்வந்தர்கள் உலக சனத்தொகையின் பாதிச் செல்வத்தைக் கொண்டுள்ளனர் என புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாரிட்டி ஒக்பாமினால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் வறுமைப்பட்ட மக்கள் மேலும் ஏழ்மை நிலையை அடைந்த அதேவேளை ஒன்றரை ரில்லியனுக்கும் அதிகமான வருமானத்தை 62 செல்வந்தர்களும் ஈட்டியுள்ளனர்.

அதாவது, 2010 ஆம் ஆண்டில் இருந்து 3.6 பில்லியன் மக்களில் 41 சதவீதம் பேர் ரிறில்லியன்பொலரினால் வீழ்ச்சியடைந்துள்ளனர். இந்தவீழ்ச்சி இடம்பெற்ற அதே சந்தர்ப்பத்தில் 62 பேரின் பணம் 1.76 ரிறில்லியனால் உயர்ந்துள்ளது.




கடந்த 12 மாதங்களில் செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையிலான வித்தியாசம் அதிகரித்துள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு இதேமாதிரியான கணக்கெடுப்பில் 388 பேர் உலக சனத்தொகையின் பாதியளவுக்கு செல்வத்தைக் கொண்டுள்ளனர் என அறியப்பட்டது. 2011 ஆம் ஆண்டு 177 பேராக எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்தது. 2014 இல் 80 பேரும், 2015 இல் 62 பேரும் என வீழ்ச்சியடைந்துள்ளது. உலகில்தலைசிறந்தபொருளாதார மன்ற வருடாந்த ஒன்று கூடலுக்கான நாள் நெருங்கும் வேளையில் இந்த ஆய்வு வெளியிடப்பட்டுள்ளது. உலக வரி ஏய்ப்பு இவ்வாறான வீழ்ச்சியைத்தடுக்கும், சமத்துவமின்மைக்கு ஒரு முடிவைக் கொண்டுவரும் என ஒக்ஸ்பாம் நிறுவன தலைமை அதிகாரி தெரிவித்தார். மேலும் உலக சனத்தொகையில் சிறிய குழுவினரிடம் இவ்வாறான தொகு செல்வம் இருப்பது ஏற்புடையது அல்ல- என்றார். (த-ரி4)

# ரோபோக்கள் அறிமுகத்தால் வேலைவாய்ப்பு குறைகிறது

வொஷிங்டன், ஜன.20

ரோபோக்களின் அறிமுகத்தால் இன்னும் 5 ஆண்டுகளில் 5.1 மில்லியன் வேலைவாய்ப்புகளை இழக்கவேண்டிய சூழல் இடம்பெறும் என டவோஸ் சஞ்சிகையில் ஆய்வு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டளவில் 15 முன்னணி நாடுகளில் இந்த மாற்றம் சாத்தியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சுவிட்சர்லாந்தில் இடம்பெறவுள்ள உலகப் பொருளாதார பொது மன்றத்தில்வேலையின்மை தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது. 7.1 மில்லியன் வேலைவாய்ப்புகள் பறிபோயுள்ள நிலையில், புதிதாக 2 மில்லியன் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பிரதானமாக 15 நாடுகள் உலகின் தொழிலாளர் தேவையை 65 சதவீதத்தால் பூர்த்திசெய்கின்றன. தானியங்கி ரோபோக்கள் மூலம் மனிதத் தேவைகள் பலவற்றைப் பூர்த்தி செய்ய முடியும்.

சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் தகவலின் படி 2020 ஆம் ஆண்டில் உலக அளவில் 11 மில்லியன் வேலைவாய்ப்புகளை இழக்க நேரிடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய கண்டுபிடிப்புகள் மூலம் அலுவலக முகாமைத்துவம் தொடர்பான திட்டமிடலில் மூன்றில் இரண்டு பகுதி வீழ்ச்சி அடைந்துள்ளது. இந்த வேலை இழப்பு நெருக்கடியில் அதிகமாகப் பெண்கள் பாதிக்கப்படுவர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலிவடைந்
# சீனப் பொரு

*முதலீட்டாளர்க*

பீஜிங், ஜன.20
சீனாவின் பொரு
கடந்த ஆண்டுடன்
சிறிய வீழ்ச்சி ஏற்பட
இது உலக முதலீட்
கவனத்தை ஈர்த்துள்
ஆண்டுகளில் இல்
சீனப் பொருளாதா
வீழ்ச்சி ஏற்பட்டுள்ள
2015 ஆம் ஆண்
வளர்ச்சி 6.9 சதவீத
இதற்கு முந்தைய
சதவீதம் பொருள
ஏற்பட்டுள்ளது.
பொருளாதாரத்தி
இடத்தில் உள்ள
பொருளாதார வ
நிலையில்தான் உள்
புதிய வேலைவாய்ப்
கப்படுகின்றன என
- கெகுவேஅங் தொ
கடந்த இரண்டு வரு
பொருளாதாரம் நலி
இதனைச் சரி செய்ய
சீனா ஈடுபட்டுள்ளது
அதிகரிப்பதன் மூல
வளர்ச்சியை அடை
இலக்குடன் செயற்
வின் பொருளாதார
அரசு வெளியிடும்
கரமானவை அல்ல
தெரிவித்தனர். சீன அ
படும் தகவலைவிட
உள்ளதாக மேலும் அ
தனர். சமீப
தாரத்தை ஏப்பு நே
வெளியிட்ட வளர்ச்
குறைவாக உள்ளத
டப்பட்டுள்ளது.



315 விமானங்களின்
டுள்ளது. (த-ரி4)

டந்துவரும்
ாரு●ாதாரம்
*ளர்கள் கவலை*

ாருளாதர வளர்ச்சி
டுடன் ஒப்பிடுகையில்
ற்பட்டுள்ளது.
லீட்டாளர்களின் அதிக
த்துள்ளது. கடந்த 25
இல்லாத அளவுக்கு
ளாதார வளர்ச்சியில்
டுள்ளது.
ஆண்டு பொருளாதார
தவீதம் ஏற்பட்டுள்ளது.
தைய வருடம் 7.3
ாருளாதார வளர்ச்சி
து. சீனா உலகப்
ரத்தில் இரண்டாம்
ள்ளது. சீனாவின்
வளர்ச்சி குன்றிய
உள்ளது. ஆனாலும்
வாய்ப்புகள் உருவாக்
என சீனப் பிரதமர் லி
தெரிவித்தார்.
வருடங்களாக சீனப்
நலிவடைந்துள்ளது.
செய்யும் முயற்சிகளில்
ள்ளது. உற்பத்தியை
மூலம் நிலையான
அடைய முடியும் என்ற
செயற்படுகிறது. சீனா
ாதார வளர்ச்சி குறித்து
டும் தகவல்கள் நம்ப
அல்ல என அவதானிகள்
சீன அரசால் வெளியிடப்
லவிட மிகவும் நலிவாக
லும் அவர்கள் தெரிவித்
ணப் பொருளா
குகையில் அரசு
வளர்ச்சி வீதத்தைவிட
உள்ளதாகச் சுட்டிக்காட்
து. (த-ரி4)

# ஏமனில் தாக்குதல்
# 35 பேர் உயிரிழப்பு
## ஒரு செய்தியாளரும் சாவு

சனா, ஜன.20

ஏமனில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றதாக்குதலில் 35 பேர் உயிரிழந்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏமனின் தலைநகர் சனாவில் பொலிஸாரைக்குறிவைத்துஇந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. ஏமனில் உள்ள சிறுபான்மையினரான ஹவுதியினர், பெரும்பான்மையினருக்கு எதிராகக் குறிப்பாக ஜனாதிபதி அப்டுராபு மன்சோறுக்கு எதிராக, சவூதி அரேபிய பின்னணியுடன் போராட்டங்களை நடத்தினர். கடந்த வருடம் மார்ச் மாதம் ஹவுதிகளுக்கு ஆதரவாக சவுதி அரேபியா ஏவுகணைத் தாக்குதல் நிகழ்த்தியிருந்தது. அந்த வன்முறைச் செயற்பாட்டில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.



சர்வதேச ஊடக நிறுவனங்களுக்கான செய்தியாளராகப் பணிபுரிந்த மொஜாளி எனும் செய்தியாளர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்தார். அவர் ஏவுகணைத் தாக்குதலில் காயமடைந்ததால் உயிரிழந்துள்ளார் என அதிகாரப் பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் இருந்து வொய்ஸ் ஒப் அமெரிக்காவுக்கு செய்தியாளராகப் பணிபுரிந்து வந்துள்ளார் என குறித்த செய்தி நிறுவனம்தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் இடம்பெறும் சம்பவங்களையும் உண்மை நிலைப்பாட்டையும் அவர் எமக்குத் தெரிவிப்பவர் என செய்தி நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்தார். மேலும் போர்ச் சூழலில் செய்திகளைச் சேகரிப்பது மிகவும் சவாலானதொன்று. மொஜாளி சிறந்த செய்தியாளர் மட்டுமல்ல. அவர் எமக்கு ஓர் எடுத்துக்காட்டு. தைரியமான ஒருவரை இழந்ததற்காக மனம் வருந்துகிறோம் என தெரிவித்தார்.

> ஏமனில் உள்ள சிறுபான்மையினரான ஹவுதியினர், பெரும்பான்மையினருக்கு எதிராகக் குறிப்பாக ஜனாதிபதி அப்டுராபு மன்சோறுக்கு எதிராக, சவூதி அரேபிய பின்னணியுடன் போராட்டங்களை நடத்தினர்.

இதைத்தவிர கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏமன் நகரில் தலைமைப் பாதுகாப்புச் செயலகத்தைக் குறிவைத்து இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் குறைந்தது 11 பேர் கொல்லப்பட்டதுடன், 16 பேர் காயமடைந்துள்ளனர் எனப் பாதுகாப்பு செயலாளர் குறிப்பிட்டார். தலைமைப் பாதுகாப்பு அதிகாரி லால் யியே காயங்களுடன் உயிர் தப்பினார், ஆனால் அவரது மெய் பாதுகாவலர்கள் இருவர் கொல்லப்பட்டதுடன், 6 பேர் காயமடைந்துள்ளனர். (த-ரி4)



## உலகின் அதிக வயதான முதியவர் உயிரிழந்தார்

டோக்கியோ, ஜன.20


உலகிலேயே அதிக வயதான முதியவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். ஜப்பானின் நயோகா நகரில் யசுரறோ கொய்டி எனும் முதியவர் தனது 112 ஆவது வயதில் மாரடைப்பால் உயிரிழந்தார் என நேற்று முன்தினம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

1903 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி பிறந்த கொய்டி கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் கின்னஸ் உலக சாதனைப் பதிவில் இடம் பிடித்தார். இவரது சாதனைப்பதிவில், மகிழ்ச்சியாக வாழ்க்கையை கழிப்பதே உயிர்வாழ்த் தகுந்த அடிப்படைவிடயம் என குறிப்பிடப்பட்டிருந்தது. (த-ரி4)

## பிரான்ஸ் தீவிரவாத தாக்குதலில் தொடர்புள்ள முக்கிய நபர் கைது

பாரிஸ், ஜன.20

பிரான்ஸில் நிகழ்த்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய பெல்ஜியத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.




பிரான்ஸில் கடந்த ஆண்டு இறுதியில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 130 பேர் உயிரிழந்தனர் . ஏராளமானோர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்ட சாலா அப்தெஸ்லம் என்பவரைப் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர். இந்த நிலையில் இந்தத் தீவிரவாதத் தாக்குதலுடன் நேரடித் தொடர்புள்ள கெலில் அட்டர் என்ப கைது செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த இவர் ஐ.எஸ். அமைப்பில் சேர்வதற்கு முன் அல் நஸ்ரா முன்னணியில் பணியாற்றி வந்ததாகக் கூறப்படுகிறது. ஆப்பிரி நாடுகளில் ஒன்றான மொரொக்கோவின் காசபிளான்கா பகுதியில் வை அவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரிடம் பொலிஸார் தீ விசாரணை நடத்தி வருகின்றனர். (த-ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வலிகளைப் பதிவாக்கும் கவிதைப் போராளி



## கவிஞர் மன்னார் ந. பிரதீப்புடன் ஒரு சந்திப்பு

**சி.ப. வேந்தன்**

ஒரு படைப்பாளிக்கான அறிமுகம் அவனுடைய படைப்புக்களாலேயே கிடைப்பதுதான் அவனுக்கான உயர்ந்தபட்ச விருதாக இருக்கமுடியும். காலத்தின் விம்பமாக படைப்பாளிகளைக் கருதினாலும் நிஜத்தின் விம்பமாக இருப்பவர்கள் சிலரே, அந்த வரிசையில் எந்தவித தயக்கமுமின்றி ஞானச் செருக்குடன் நிதர்சனங்களைக் கடைபரப்புகிறான் இந்தக் கவிஞன். தனது முதலாவது கவிதைப்படைப்பான 'அகரச்சிதறல்கள்' எனும் தொகுப்பில் தான் யாரெனும் சுயப்பார்வையை 'நேர்காணல்' எனும் கவிதையில் இப்படிப் பேசுகிறான். 'யார் நீ? முகவரியோடு சொன்னால் முன்னாள் போராளி. இப்போது பரிதாபத்துக்குரிய பயங்கரவாதி. இப்படியே நீண்டுசெல்லும் கவிதையில் கர்வம் தெரிகின்றது. காட்டிக்கொடுக்காதவன் வரிசையில் நானும் ஒருவன். விதைக்கப்பட்ட சமூகத்தின் விடுதலை என தன்னை உணர்ந்து கொள்ளும் அவனது கவிதைகள் எங்கும் இனத்துக்கானதும் சுயத்துக்கானதுமான சுதந்திரக்குரலே ஓங்கி ஒலிக்கிறது அவன் பற்றியும் கவிதை பற்றியும் உதனுக்காக உரையாடினேன்.

இப்ப மன்னாரில் இருக்கிறேன். என்னுடைய சொந்த இடம் யாழ்ப்பாணம் அரியாலை. 95ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்குப் பிறகு வன்னிக்குப் போனனாங்கள், பிறகு 97 ஆம் ஆண்டு மன்னாருக்குப் போனோம். அப்பா, அம்மா, அண்ணா இரண்டு தங்கச்சி ஒரு சின்னக் குடும்பம். அண்ணா இயக்கத்துக்குப் போய் 2007ஆம் ஆண்டு வீரச்சாவடைஞ்சிட்டார். நானும் 2006ஆம் ஆண்டு இயக்கத்துக்குப் போய் கடைசில 2009 இல் பிடிபட்டு சிறையில் புனர்வாழ்வெல்லாம் முடித்து இப்ப வந்து வீட்டுக்காரடோட இருக்கிறன் எனக் கூறியவரிடம், எப்போதிருந்து உங்களுடைய கைகளுக்குள் கவிதை அகப்பட்டுக்கொண்டது என்று கேட்டதற்கு அவசரமாக இடைமறித்து 'ஐயையோ கவிதை என்ற கையுக்க அகப்படேல்ல நான்தான் கவிதையின்ர கையுக்குள்ள அகப்பட்டுட்டன் எனச்சிரித்துக்கொண்டே தொடர்ந்தவர்.

வீட்டில நிறைய புத்தகங்கள் இருக்கும் அதில கவிதைப்புத்தகங்களும் இருந்தது. நான் நிறைய வாசிக்கிறனான் அதோட அண்ணாவும் கவிதை எழுதுவார். நான் பள்ளிக்கூடத்தில 10 ஆம் ஆண்டில படிக்கேக்கயே கவிதை எண்ட பேரில ஏதாவது கிறுக்கிறது ஆரும் வடிவான பெட்டையளுக்கு அவையைப்பற்றி எழுதிப்போட்டு அவைக்கு எறியுறது. இப்பிடி எறிஞ்சு ஒருநாள் அப்பா பிடிச்சு அடிச்சதோட அதுக்குப் பிறகு ஒண்டும் எழுதாம விட்டுட்டன். பிறகு அப்பிடியே அந்த ஏதாவது எழுதுறது எண்ட பழக்கம் இல்லாமப்போட்டுது. பிறகு இயக்கத்துக்குப் போயும் எழுதவும் இல்லை அதப்பற்றி நினைக்கவும் இல்லை. பிறகு இந்தப்பிரச்சினையள் எல்லாம் நடந்து முடிஞ்சு நான் சிறையில் இருக்கேக்க தான் எழுத வெளிக்கிட்டது; அங்க என் தனிமை, விரக்தி, துன்பம், பழிவாங்கல் இப்பிடி எல்லாம் நிறையவே இருந்தன அதவிடத் தோல்வி, அதவிட ஏற்றுக்கொள்ளமுடியாத பெரிய இழப்பு இப்பிடி எல்லாம் மனசுக்க கிடந்து அழுத்தி அழுத்தி அதின்ர வெளிப்பாடு கவிதையா வரவெளிக்கிட்டுது.

சொல்லப்போனா நான் கவிஞன் ஆனதில் கடந்துபோன அரசுகளும் ஒருவகைக்காரணம் தான் என்றுவிட்டு மீண்டும் சிரிக்கிறார்.

அப்ப கம்பியறைகள் தான் உங்கட கவிதைகளின் கருவறைகள் எண்டு சொல்லலாமா எனக்கேட்டேன் (நானும் கவித்துவமாயப் பேசுவதாய் நினைப்பு)

'ஓமோம் உள்ள இருக்கேக்கதான் நான் நிறையக் கவிதைகள் எழுதினனான். அங்க நேரமும் இருக்கும் கவிதைக்கான பாடுபொருளும் கிடைக்கும். ஆனா கவிதை எழுதத்தொடங்கும் வரைக்கும் எனக்கு இதை வெளியில கொண்டு போய்ச் சேர்க்கோணும் என்று எண்ணமில்லை பிறகு தான் அதின்ர பெறுமதி தெரிஞ்சது. எனக்குப்பிடிச்சதப் பேச எனக்கு உரிமை இருக்கு அதால அதைப் பேசினன். அதாலை பிரச்சினை வந்தாலும் எதிர்கொள்ளத் தயாராக இருந்தனான். எனும் போது அவரது பேச்சில் படைப்பாளியின் கர்வத்தோடு புரட்சிக்காரனின் கர்வமும் தெரிந்தது.

கவிதைகள் (ஒட்டுமொத்த இலக்கியங்களும்) கடந்த தலைமுறைகளின் வாழ்வியலை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு கடத்தும் மிக முக்கியமான ஊடகங்களில ஒன்று. அந்தவரிசையில இன்றைய கவிதைகள் நாளைய தலைமுறைக்கு கொண்டுசேர்க்கக்கூடியதான பாடுபொருளை கையிலெடுக்கிறதா எனக் கேட்டேன்.

'ஓ.. இப்ப ஓரளவு படைப்பாளிகள் அந்த நோக்கத்திலயும் படைப்புக்களக் கொண்டுவருகினம் கூடுதலா இல்லை என்று சொன்னாலும் இல்லாமல்லில்லை எண்டு சொல்ல ஏலாது. ஆனாலும் ஒப்பீட்டளவில மிகமிகக்குறைவு. போர் நடக்கேக்க போர் பற்றியும் போரின்ர அழிவு பற்றியும் நிறையப்பேசப்பட்டது. ஆனா அது முடிஞ்ச பிறகு அது தந்திட்டுப்போன வலிகளை எவரும் பேச முன்வரேல்ல. ஆனா அதுவும் எங்கட வாழ்வியல்தானே அதையும் பேச வேணும் தானே எனக்கொதித்தவர்,

அடுத்த தலைமுறைக்கான இன்றைய சேதிய சரியான முறையில சொல்ல வேணும். எங்கட வாழ்க்கைமுறையில இருக்கிற நல்லது கெட்டது பண்பாடு என்றதுகள சொல்ல இலக்கியங்களைப் பயன்படுத்த வேணும் அதுதான் காலங்காலமாக எங்கட அடையாளங்களச் சொல்லும். தமிழ் எண்டதையும் தமிழன் எண்டதையும் எங்களுக்கான பெறுமதி என்ன எண்டதையும் இலக்கியங்கள் சொல்லவேணும். இப்ப இருக்கிற இளந்தலை முறைக்கே இங்க என்ன நடந்தது எப்பிடி நடந்தது எண்டதுகள் தெரியாது. அத தெரியப்படுத்தவேணும். இதைச்சொன்னா எங்களுக்கு ஆபத்தெண்டு நினைக்கினம் ஆனா சொல்லாம விடுறதுதான் அடுத்த தலைமுறைக்கான ஆபத்தெண்டு எவரும் நினைக்கேல்ல. எங்களப்பற்றி எங்களுக்குத் தெரியாதென்பது இன்றைய கேவலமாயும் நாளைய ஆபத்தாகவும் இருக்கும். அப்ப இதுகளையும் நிறையப் படைப்பாளிகள் கொண்டுவரவேணும். ஏன்னால முடிஞ்சவரைக்கும் நான் அத செய்துகொண்டுவாறன் ஒரு படைப்பாளியா அது என்ற கடமையா நான் உணர்கிறன் என்று சொல்லும் அவரிடம்,

இன்றைய தலைமுறைக் கவிதைகளை எப்பிடி எதிர்கொள்வது? கவிஞனா உங்கட பார்வையில் எப்பிடி இருக்கு எனக்கேட்டேன்.

'ஓ நல்லபடியா வரவேற்குது. அதில ஆரோக்கியமும் தெரியுது. அந்தக்காலத்தில மக்களைச்சென்றடையிற ஊடகமா இலக்கியம் கலை இரண்டும் தான் இருந்ததெண்டு சொல்லலாம் ஆனா இப்ப எக்கச்சக்கமான ஊடக வழிமுறைகள் வந்திட்டுது அப்ப அதன்மூலம்தான் நாங்க நகர முடியும். இப்ப இருக்கிற இளைஞன் ஒருவனுக்கு பந்திபந்தியா கவிதை எழுதி அதில ஏகப்பட்ட நல்ல விசயம் சொல்லி அவனை நல்வழிப்படுத்த ஏலாது. ஏனெண்டா அத கேக்கவோ பாக்கவோ அவனுக்கு நேரமில்லை. அதால அவன்ர வழியில அவன் என்ன விரும்புறானோ அதன்மூலமா அவனுக்கு நிறைய விசயத்தைக் கொண்டு போகலாம். எப்பிடியாவது நல்லவை சென்றுசேர்ந்தால் சரி அவ்வளவு தான். அதில கவிதைக்கான வெளி எங்க இருக்கெண்டு கண்டுபிடிச்சு கொண்டுபோய்ச் சேர்க்கிறதிலதான் வெற்றி அடங்கியிருக்கு. இதை விட எங்கள் படைப்பு எங்கட தனித்துவத்துக்கு அப்பால ஏதோ ஒரு விதத்தில கூடுதல் வித்தியாசம் காட்டவேண்டிக் கிடக்கு. ஏனெண்டா எங்கட ஆக்களுக்கான ஒரு பழக்கம் எண்டும் சொல்லலாம் அதாவது இசைவாக்கம் மாதிரி இந்தியப் படைப்புக்களுக்கூடாகத்தான் கூடுதலாக எங்கட ரசனைத்திறன் வளர்ந்திருக்கு இல்லாட்டி மேம்பட்டிருக்கெண்டு சொல்லலாம். அதால எங்கட பாடுபொருள் சூழலில் வித்தியாசம் இருந்தாலும் அதவிட ஏதாவதொரு வித்தியாசத்தைக் காட்டவேண்டியிருக்கு. அது சராசரி ரசிகனாக இருந்தாலும் சரி, அறிவார்ந்த ரசிகனாகயிருந்தாலும் சரி இந்த வித்தியாசத்தைக் காட்டவேண்டியிருக்குது. சமூக மாற்றத்தோடயும் போட்டிபோட வேண்டியிருக்குது.

வேறு என்ன மாதிரியான முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறீங்கள் என்றதற்கு.

இப்ப பாட்டு இறுவட்டொண்டு செய்யிற முயற்சியில இறங்கி வேல நடந்துகொண்டிருக்கு; முதலீட்டுப்பிரச்சினையால முடங்கிப் போய்க்கிடக்கு. செய்ய வேணும் இப்ப அடுத்த படைப்பா 'இரவல் தேசம்' என்ற கவிதைத் தொகுப்பு வெளிவர இருக்கு என்கிறார். கவிதை வெளியில் நிஜங்களோடு மாத்திரமே பயணித்துக் கொண்டிருக்கும் இந்த இளம் படைப்பாளி.

வெறும் கற்பனை உலகை சிருஷ்டித்துக் கொண்டு கண்மூடித்தனமாகக் கவிதை எழுதுவதில் உடன் பாடு கொண்டிராமல் தனது கண்களை முழுவதுமாக திறந்துஉலகைஉணர்ந்து நிஜங்களோடு சேர்த்து கவிதையின் கைகளையும் பற்றி பயணித்துக் கொண்டிருப்பவனின் பாதங்களிலும் சிறகு முளைக்கத் தொடங்கியிருக்கிறது உயரப் பறந்து உண்மைகள் தேட.

> “போர் நடக்கேக்க போர் பற்றியும் போரின்ர அழிவு பற்றியும் நிறையப்பேசப் பட்டது. ஆனா அது முடிஞ்ச பிறகு அது தந்திட்டுப்போன வலிகளை எவரும் பேச முன்வரேல்ல ஆனால் அதுவும் எங்கட வாழ்வியல் தானே அதையும் பேச வேணும் தானே.”




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியம் என்றால் எது?

## இலக்கியத்தில் நகைச்சுவையின் பங்கு யாது?

தேவி பரமலிங்கம்



சங்ககால இலக்கியங்களில் நகைச்சுவை மிகுதியாகப் புகுத்தப்படவில்லை என்பது தெளிவு அளவுப் பிரமாணமாக மனிதன் வாழ்க்கையில் அனுபவிக்கும் நிலைமைகள் எந்தெந்தளவு சூழ்கின்றதோ அவ்வளவுப் பிரமாணத்தில் நகைச்சுவையும் இலக்கியத்தில் சான்றோரால் சேர்க்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

இலக்கியம் என்றால் என்ன? இலக்கியத்தில் நகைச்சுவையின் பங்கு என்ன? இந்த இரு கேள்விகளையும் முன்னிலைப்படுத்தி கீழே வளரும் கட்டுரை சில கருத்துப் பகிர்வுகளை முன்வைக்க எழுதப்படுகிறது.

இலக்கியம்என்பது எது? இலக்கியத்தில் சேர்க்கப்படும் நகைச்சுவை எந்தளவு அமைய வேண்டும்? என்னும் இரு வினாக்களுக்கும் இந்த விடயங்களைத் தன்து படைப்புக்களில் புகுத்த முனையும் படைப்பாளி அறிந்திருக்க வேண்டியது அத்தியாவசியம் ஆகும். இந்த இரண்டிலுமே தெளிவு பெறாமல் படைக்கப்படும் ஆக்கங்களே இலக்கியச் சந்தையைக் குப்பைக் காடாக்கி விடும் அபாயம் தோன்றி உள்ளது. சில வருடகாலமாக இந்தத் தலைப்பை வைத்து எத்தனை எத்தனையோ வகையாக அதன் பொருளை அணுகி ஆராய்ந்து கருத்துக்களை அவ்வப்போது பத்திரிகைகள், உரைகள் ஊடாகவும் தெரிவித்து வந்துள்ளனர்.

ஒரு சிலருக்கு இந்தத் தலைப்பு பழகிவிட்ட ஒன்றாகத் தோன்றினாலும் கட்டுரையில் நுகரப்போகும் விடயம் புதிதாகவே இருக்கும். இலக்கியம் என்றால் வாழ்க்கை என்றும், வாழ்க்கையின் அளவுகோல் என்றும், காலக்கண்ணாடி என்றும் இன்னும் சிலர் உள்ளதை உள்ளபடி உரைப்பது இலக்கியம் என்றும் தமது பார்வைகளை வெளியிட்டு உள்ளனர்.

அந்தக் கருத்துக்கள் முன்னமே இலக்கியம் பற்றி வெளிவந்துள்ளதால் கூறப்போகும் விடயம் எவ்வளவு ஒத்து வருகிறது என்பதை பொறுமையாக இருந்தே அறிய வேண்டும்.

இலக்கியத்தின் தன்மையைக் கூறியோர் இலக்கியம் என்ன? எவ்விதம் இலக்கியம் ஆகிறது? இலக்கியம் என வழங்கப்படுவதேன்? இலக்கியம் எப்படித் தோன்ற வேண்டும்? என்பனவற்றை அணுகி விலாவாரியாக ஆராய்ந்து சொல்லாமல் சுருங்க இலக்கி யம் எனப் புகன்று போயினர். அதனை நிலைக்களமாக வைத்தே கட்டுரை வளர்கிறது.

### உருவமும் உள்ளடக்கமும்

இலக்கியம் படைக்க சிருஷ்டியாளன் முற்படுகையில் சொல்லவரும் நிகழ்ச்சியையோ, சம்பவத்தையோ, கருவையோ, செய்தியையோ அல்லது வாழ்வுப் பகுதியையோ சூழலையோ இலக்கு வைத்து சொல்லப்போகும் விடயத்தையோ அழகாகவும், தெளிவாகவும் சொல்கையில்தான் அது இலக்கியம் என்னும் தரத்தை அடைகிறது.

அந்த நிலையில் தடுமாறுகையில் உருவமா உள்ளடக்கமா என்ற பிரச்சினை எழுகிறது. இந்தப் பிரச்சினைக்கு அப்பாற்பட்டதே இலக்கியம். உருவம் உள்ளடக்கம் வேறுபடாமல் ஒன்றிணைந்தே இலக்கியம் ஆகின்றது என்னும் தெளிவு பெறவேண்டும்.

இலக்கியத்துக்கு முக்கியம் உருவமா? உள்ளடக்கமா? என்னும் வாதப் பிரதிவாதங்கள் இலக்கியக்காரர்களிடையே தலைதூக்கி சாய்ந்ததையும் இத்தனை கெதியில் எவரும் மறந்திருக்க மாட்டார்கள். உருவமா உள்ளடக்கமா என்ற சர்ச்சையை விட்டு இலக்கியத் தரத்துக்கு ஒரு படைப்பு உயர வேண்டுமானால் எது முக்கியம் என்பதை ஆராயலாம்.

இரண்டு அம்சங்களும் இணையாது விட்டால் ஓர் ஆக்கம் இலக்கியத் தரத்தை அடைவது எங்ஙனம்? இலக்கியம் என்றால் சிருஷ்டியாளன் சொல்லவரும் கருவை அதற்கேயான இலக்கண சுத்தியோடும், கலை அழகோடும் திறனாக உதிரிப்பாகங்கள் என்னும் மொழி, நடை, தெளிவு, விறுவிறுப்பு இன்னோரன்ன உதவிகளைக் கோர்த்துக் கதையை நகர்த்திச் செல்லும் நேர்த்தியுடன் முழுமை பெறுதலே நியதி.

### இலக்கு வைத்து இயம்புதல்

இந்தக் கருத்து நிலையில் பார்த்தால் மேலே குறிப்பிட்ட அம்சங்களில் ஏதாவது ஒன்று ஆக் கத்தில் குறையாகத் தென்படின் அது இலக்கியத் தரத்தை அமையத் தகுதியில்லை என்பது தெளிவு. பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை எடுத்துக் கொண்டால் அந்தக் காப்பிய நூலில் இலக்கிட்டுச் சொல்லப்படும் கருப்பொருள் மேற்சொன்ன அம்சங்களோடு அமைந்தது மட்டுமல்ல சிறப்புக்குக் காரணம்.

அரசியல் தூரநோக்கு பொருள் வள பார்வை, வாழ்வியல் நியமம் போன்ற ஆக்க உத்திகளையும் காப்பியப் புலவரான இளங்கோ அடிகளார் சிறப்பு அணிகளாகக்கொண்டதும்தான் எனக்கொள்ள வேண்டும். இலக்கியம் என்னும் சொல்லைப் பிரித்து பொருள் கொள்ள முடியாதென்பர். ஆயினும் இலக்கியம் என்னும் சொல் தோன்றக் காரண காரியங்கள் இல்லாதிருக்க முடியாது.

அந்தச் சொல் அடித்தளத்தில் இருந்து ஒன்றாகி ஒருமை அடைந்திருக்க வேண்டும். ஆதலால் இலக்கியம் என்னும் சொல்லைப் பிரித்துப் பார்த்து பொருள் அறிய வேண்டிய கட்டாயம். எழுதுவதைத் தவிர்க்கவும் இயலாது. சொல்லைப் பிரித்தால் இலக்குஇயம் இந்த இரண்டு சொற்களும் வருதல் தெரியும். இரு சொற்களும் ஒருமையாகி பிரிக்கமாட்டாத விதியின் கீழ் உருவான சொற்களில் இலக்கியம் என்றானது.

இலக்கு என்னும் சொல் முழுமையாகப் பெறுவது போன்று இயம் என்ற சொல் இயம்பு எனப் பொருள் கொள் எப்பட்டுள்ளது. ஆக இலக்கு இயம் என்னுமிரு சொற்கள் பிணைந்து இலக்கியம் ஆனதென்பதை தெளிந்து கொள்ளவும் முடியும்.

> ஒரு சாராரையோ, சமூகத்தையோ எள்ளி நகையாட ஆயுதமாகப் பாவித்து வருபவர்களே நகைச்சுவையின் புனிதமான பணியைத் தூர விட்டு நகைச்சுவை என்னும் பாங்கில் ஒரு சாராரை அழவும் வைக்கின்றனர். அவற்றை எப்படி நகைச்சுவையாக ஏற்பது?

### தரக்குறைவை அளவிடல்

இரு சொற்கள் ஒன்றிணைந்து ஒரே சொல்லாக உருவாகையில் முன்பின் ஓரிரு எழுத்துக்கள் குறைவதைத் தவிர்க்க இயலாது. அந்த அடிப்படையிலே இயம்பு, இயம்புதல் ஏதாவது ஒரு சொல் எழுத்துக் குறைவில் இயம் என்றாகி உள்ளது. ஆகவே இலக்கு என்னும் சொல்லில் சுட்டிய சம்பவத்தை இயம்பு என்கையில் இலக்கியம்பிறந்தது எனக்கொள்ளவும். ஆகவே இலக்கியம் என்னும் சொல்லின் பொருளை விரிவாகப் பெறமுடிகிறதல்லவா?

விரிவாகப் பெற்றுக்கொண்ட தெளிவுடன் இலக்கியத்துக்கு அமைய வேண்டிய அணிகலன்கள் யாவை என்பதைத் தொனிப்பொருளாக உணர்வூட்டும் எனவும் கருதலாம். அத்தகு அணிகலன் களில் ஒன்றேனும் ஆக்கத்தில் விடுபட்டால் அந்த ஆக்கம் தரக்குறைவாகும்.

இந்தக் கணிப்பீட்டின்படியே ஒரு விடயம் இலக்கியத் தரத்துடன் உள்ளதா? இல்லையா என்பன ஆராயப்படுகிறது. இந்தக் கால விடையதானங்களை ஆராயின் அதிவேகத்தில் இலக்கியம் படைப்பதாக எதையெதை எல்லாமோ கிறுக்கி வைத்துள்ளதை பார்க்கக் காணலாம்.

### நகைச்சுவையின் பங்கென்ன?

சங்ககால இலக்கியங்களில் நகைச்சுவை மிகுதியாகப் புகுத்தப்படவில்லை என்பது தெளிவு அளவுப் பிரமாணமாக மனிதன் வாழ்க்கையில் அனுபவிக்கும் நிலைமைகள் எந்தெந்தளவு சூழ்கின்றதோ அவ்வளவுப் பிரமாணத்தில் நகைச்சுவையும் இலக்கியத்தில் சான்றோரால் சேர்க்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

இன்றோ நிலைமையே வேறு. தனிநகைச்சுவையாகவே இலக்கியம் படைக்க முற்பட்டு வருகின்றனர். அதன் விளைவு ஒரு பகுதியினரையோ, அன்றி தனிப்பட்ட நபரையோ இன்னும் விளங்கச் சொல்வதாயின் ஒருவரை ஏறி மிதித்தே மற்றோரைச் சிரிக்க வைக்க முற்படுகின்றனர்.

நகைச்சுவையின் தன்மை எவரையும் புண்படுத்தாமல் சிரிக்க வைப்பதுதான். அதை விடுத்துக் கிண்டல் என்று இன்னொருவரைக் சீண்டி விட்டு அவரது வேதனையைப் பார்த்து ஏனையோர் நகைப்பதை நகைச்சுவை என ஏற்க முடியாது. ஆனால் இன்று நகைச்சுவை படைப்பவர் இலக்கே அதுவாக அமைவதை சமீப காலங்களில் வெளியாகிக் கொண்டிருக்கும் நகைச்சுவைகள் வெளிச்சப்படுத்தி வருகின்றன.

ஒரு சாராரையோ, சமூகத்தையோ எள்ளிநகையாட ஆயுதமாகப் பாவித்து வருபவர்களே நகைச்சுவையின் புனிதமான பணியைத் தூர விட்டு நகைச்சுவை என்னும் பாங்கில் ஒரு சாராரை அழவும் வைக்கின்றனர். அவற்றை எப்படி நகைச்சுவையாக ஏற்பது?

### மட்டரக நகைச்சுவை!

நானிங்கே வலியுறுத்தும் அளவில் நகைச்சுவை இலக்கியத்துக்குப் போதும், ஆயினும் ரசிகர்களை முழுமையாகத் திருப்திப்படுத்தாது என்பதை ஏற்றுக் கொள்ளலாம். மட்டரக நகைச்சுவைகள் மலிந்துள்ளதால் தரமான சுத்தமான நகைச்சுவை எனக்கூறப்படும் ஆக்கம் இன்றைய ரசிகர்களை எட்டிவிடப் போவதில்லை.

எனில் அது ரசிகர்களின் தவறல்ல. காலப்போக்கில் மிக மலிந்துபோன நகைச்சுவைகளே இலக்கியச் சந்தையில் கிடைக்கப்பெற்றதால் வாங்கி நுகர்ந்ததன் விளைவுதான். எனவே அத்தகைய மட்டரகப் பதார்த்தங்களை சந்தையில் விற்க அனுமதித்தோரை நொந்துகொள்வதா? விளைவுகளைப் புரியாமல் வாங்கி விழுங்கியவர்களை நோவதா?

எனவே மட்டரக இலக்கியங்களை அதிகம் அனுபவித்ததாலே ரசிக மட்டத்திலும் மட்டரகமானோர் பெருக வாய்ப்பானது என்பது தெளிவு. அத்தகைய

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













இள்வாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் பொங்கல் தினத்தன்று பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகள், பட்டம் விடும் போட்டிகள், கலைநிகழ்வுகள் என கோலாகலமான பொங்கல் விழா நடைபெற்றது.

அன்றையதினம் காலை தொடக்கம் பி.ப. 2 மணிவரை கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் அருகே பெரியளவிலான பட்டம்விடும் போட்டியும், பிற்பகல் 2.30 மணிமுதல் இளவாலை வாலிபர் திடலில் சறுக்கு மரம் ஏறுதல், கயிறுழுத்தல் தலையணை சண்டை, கிடுகு பின்னுதல் சிறுவர்களுக்கான நிகழ்வுகள் மற்றும் சாக்கு ஓட்டம் முதலான பாரம்பரிய நிகழ்வுகள் என்பவற்றுடன் இளவாலைக் கிராமத்தைச் சேர்ந்த பலரின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. இதில் மேலும் விசேட நிகழ்வாக மாவையூர் சின்னத்தம்பி குழுவினரின் சீனடி சிலம்படி நிகழ்வு இடம்பெற்றது. ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். இந்த பொங்கல் விழாவுக்கு வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.



# இலக்கியம் என்றால் என்ன?

(19ஆம் பக்கம் பார்க்க)

ரசிகர்களை வளர்த்த குற்றம் குப்பைப் படைப்புக்களையே சாரும். கீழ்மட்ட ரசிகர்களாலேயே மட்டரக இலக்கியங்கள் பிறந்தன எனக்கொள்வது தவறு.

**நகைச்சுவையில் கறை**

நம்மிடையே தற்காலங்களில் படைக்கப்படுகின்ற நகைச்சுவை இலக்கிய வடிவங்களான கதை, கட்டுரை, கவிதை, போன்றவற்றையும் நாடகம், சினிமா, நடைச் சித்திரங்கள் என்பவற்றை எடுத்துக் கொண்டால் நகைச் சுவைக்குக் கையாளப்படுவது கறிக்கடை மதுக்கடைப் பேச்சுக்களாகவே இருக்கின்றன.

சமீபத்தில் பார்த்த முழுநீள நகைச்சுவை நாடகமொன்றில் தந்தை, மகன் இருவரும் சேர்ந்து மது அருந்தி விட்டு ஒருவர் மாறி ஒருவரை மச்சான் மச்சான் உறவு முறையைப் பாவித்து உரையாடிக் கொள்வதாகச் சிருஷ்டித்து ரசிகர்களைச் சிரிக்க வைக்கின்றனர். பார்வையாளர் அதைப் பார்த்து ரசித்து விழுந்து, விழுந்து சிரித்தனர். சிரிக்கவைப்பதையே குறிக்கோளாகக் கொண்டு இயங்குபவர்கள் எதைச் சொல்லியேனும் சிரிக்கவைத்துவிட்டால் தம் முயற்சி வெற்றிபெற்றிடும் ஒருவழிப் போக்கிலே ஆக்கத்தில் உள்ள கறையைக்கூட அறிய முடியாமலே போகவும் நேரிடுகிறது.

மேற்கூறப்பட்ட ஒரு சம்பவமே நகைச்சுவை புனிதமான இடத்தால் பிடிக்கவில்லை என்பதை நிதர்சனம் ஆக்குகிறது அல்லவா? நகைச்சுவை புனிதமான இடத்தை அடித்தளமாக வைத்து பிறக்காதெனக் கூறமுடியுமா?

**தரமான நகைச்சுவை**

மேற்கண்ட மாதிரியை கையாண்டு நகைச்சுவையை ஏற்படுத்த அநேக நாடகங்கள், சினிமாக்கள், கதை, கவிதை, கட்டுரை போன்றவற்றிலும் பின்பற்றிக் கொண்டு வருவன கண்கூடு. நுகர்வோரிலும் கீழ்த்தர நகைச்சுவையை வெறுத்து ஒதுக்குவோரும் இருக்கின்றனர். ஆயினும் எண்ணிக்கையில் கூடுதலாக இல்லை.

நவீன நகைச்சுவை எழுத்தாளர்கள், இலக்காக்கும் கருவிகளாக தையல் பாடசாலை போகும் தையலர், பீடி நிறுவனம் செல்லும் குமரிகள், காரியாலய வேலை பார்க்கும் எழில் மங்கையர்களே அமைகின் றனர். சீண்டிவிட்டு அவர்களின் வேதனையைக் கிளறி வேடிக்கை ஆக்கிப் பார்ப்பதுடன் தாம் பின்னால் அனுபவிக்கப் போகும் துன்பங்களைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத ஜென்மங்களாக வாழ்ந்து போகின்றனர். நகைச்சுவை எங்கு பிறக்க வேண்டும்? எத்தகைய சூழலில் நகைச்சுவை பிறக்க முடியும். என்னும் புரிந்துணர்வுகளுடன் பிறக்கும் நகைச் சுவைகளே அளவுப்பிரமாணத்தோடு பிறக்கும் இயல்பான நகைச் சுவைகள். முன்னோர் படைத்த இலக்கியங்களுக்கு நிகராக இலக்கியம் படைக்கும் ஆற்றல் எமது கையில் இருந்து ஊறும் பேனாக் களுக்குக் கிடையாதா? செய்பவற்றை நன்றாகச் செய்வதற்கு ஆவது எமது எழுது பொருள்களுக்குக் கிடைக்கும் பெருமை என்னும் வரப்பிரசாதமாகக் கருதும் காலம் கனியட்டும்.

**நகைச்சுவையில் இலக்கியமா?**

ஆராய்ந்து அறிந்துள்ள மட்டில் இலக்கியத்தில் நகைச்சுவையின் பங்கு எந்தளவு என்பது தெளிவாகப் புரிந்திருக்கும். நகைச்சுவைக்கு இலக்கியத்தில் பங்கு இருக்கலாம். இலக்கியத்தில் நகைச்சுவையினது இடம் எது?

இந்த வினாவுக்கு விடை தேடுகையில் இந்தக்கால நகைச்சுவைப் படைப்புக்கள் வரையறைகளை விட்டு விலகிச் செல்வதானது தண்டவாளத்தை விட்டுவிலகி ஓடும் ரயிலுக்கும் நேரும் நிலை யைக் குறியீடாகக் கொள்ள வேண்டும்.

இலக்கியத்தில் நகைச்சுவையின் பங்கு எவ்வளவாக இருக்க முடியும் என்பதை வரையிட்டுச் சொல்வதானால் தனிமனித வாழ்வில் எந்தளவாக உள்ளதோ அந்தளவுதான். அந்தளவு பங்கையே இலக்கியத்தில் நகைச்சுவைக்கு வழங்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.என்.எஸ் திருச்செல்வம் (ஜே.பி)

# ஈழத்தின் முதல் பெண் சரித்திர நாவலாசிரியை

## திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார்

ஈழத்தின் முதற் பெண் சரித்திர நாவலாசிரியையும், ஏழாந் தலைமுறைப் படைப்பாளியுமான அமரர் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் அமரத்துவம் அடைந்து கடந்த16 ஆம் திகதியுடன் ஈராண்டுகளாகின்றன. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

இலக்கியம் படைத்துப் புகழ் பெற்ற அமரர் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் வடமராட்சி மண்ணின் கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களை மையமாகக் கொண்டு தனது பல படைப்புக்களை ஈழத்து இலக்கிய உலகுக்கு அளித்துள்ளார். "அடிமையின் காதலி" என்ற சரித்தர நாவல் மூலம் ஈழத்தின் முதற் பெண் சரித்திர நாவலாசிரியை என்ற பெருமையைப் பெற்றவர். இவர் அமரத்துவம் அடைந்து கடந்த 16 ஆம் திகதியுடன் ஈராண்டுகளாகிய போதிலும் அவரது படைப்புக்கள் பற்றி இன்றும் பாராட்டிப் பேசப்பட்டு வருகிறது.

ஈழத்தின் பிரபல எழுத்தாளர்கள் குறிப்பாகப் பெண் எழுத்தாளர்களில் தனியான முத்திரை பதித்துள்ளவர் மறைந்த திக்கம் சிவயோகமலர் ஆவார். இவர்வடமராட்சிப் பகுதியில் உள்ள அல்வாய் மேற்கு திக்கம் என்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர்.

உலகளாவிய பெயரும், புகழும் பெற்று தான் பிறந்த மண்ணுக்குப் பெருமை தேடித் தந்த சிவயோகமலர் ஜெயக்குமார் 1950 ஆம் ஆண்டு திக்கத்தைச் சேர்ந்த சின்னத்தம்பியார் கணேசுக்கும், சின்னம்மாவுக்கும் சிரேஷ்ட புதல்வியாகப் பிறந்தார். திரவி என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட இவர் திக்கம் மெதடிஸ்த மிசன் பாடசாலையிலும் பின்னர் 6 ஆம் வகுப்பில் இருந்து பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் உயர்தரம் முதலாம் வருடம் வரை கல்வி பயின்றார். பின்னர் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் படிக்கும் காலத்தில் இலக்கிய நிகழ்வுகள், இலக்கியப் போட்டிகள் பலவற்றிலும் பங்கு கொண்டு பல பரிசில்களை ஈட்டி தான் படித்த கல்லூரிகளுக்கு பெருமை தேடிக் கொடுத்தார்.

பின்பு பல்கலைக்கழகத்தில் இணைந்து கலைப்பட்டதாரி ஆனார். இவர் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது அரசியல் விஞ்ஞான பாடத்தில் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்று தனது மாணவப் பருவத்திலேயே சாதனையாளராக உருவானார் என்றால் மிகையாகாது. ஆசிரியத் தொழிலில் பிரவேசித்த இவர்பின்னர் தேர்தல் திணைக்களம், யாழ்.தேசிய வீடமைப்புத் திணைக்களம் ஆகியவற்றில் கடமையாற்றி அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

1980 ஆம் ஆண்டிலிருந்து இவரது சிறுகதைகள், குறுநாவல்கள், தொடர் கதைகள், ஈழத்துப் பிரபல தினசரிகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவரத் தொடங்கின. இவரது இலக்கியப் படைப்புக்கள் வீரகேசரி, தினக்குரல், தினகரன், சுடர்ஒளி, ஈழநாடு, தினபதி, சிந்தாமணி, சிரித்திரன், முரசொலி, ஈழமுரசு, தினமுரசு, லண்டன் தமிழுலகம், கற்பகம், அருள் ஊற்று ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமாகின. இவர் அமரத்துவம் அடைந்த பின்னரும் 2014 மார்ச் மாதத்திலிருந்து அமரர் எழுதிய காத்திருக்கப் போகிறாள் எனும் தொடர்கதை ஒளிஅரசி மாத சஞ்சிகையில் பிரசுரமாகி வந்தது குறிப்பிடத்தக்கது.

அரச சேவையில் கணக்காளராகவும், உள்ளகக் கணக்காய்வாளராகவும் கடமையாற்றிய வடமராட்சி, கரணவாய் தெற்கைச் சேர்ந்த இவரது கணவர் எஸ்.ஜே.ஜெயக்குமார் நாடறிந்த சிரேஷ்ட ஊடகவியலாளருமாவார். பிரபல ஊடகவியலாளர் ஒருவரைக் கணவராகப் பெற்ற பிரபல எழுத்தாளர் சிவயோகமலர் தனது குடும்ப வாழ்க்கையில் இலக்கியத் தம்பதிகளாக விளங்கியதில் வியப்பேதும் இல்லை.

சரித்திர நாவல் ஒன்றை எழுத வேண்டுமென்ற ஆர்வம் அவரது மனதில் நீண்ட காலமாக இருந்தமையால் நான்கு ஆண்டு கால முயற்சியில் அடிமையின் காதலி என்ற சரித்திர நாவலை எழுதி முடித்தார். இந்தச் சரித்திர நாவல் தினகரன் வார மஞ்சரியில் 1999 ஆம் ஆண்டு 21 அத்தியாயங்களாகத் தொடர்ந்து வெளிவந்தது. இந்தச் சரித்திர நாவல் என்றுமில்லாத அளவுக்கு இவருக்குப் பாராட்டுக்களைக் குவித்தது.

இந்தச் சரித்திர நாவலே இவருக்கு ஈழத்தின் முதலாவது பெண் சரித்திர நாவலாசிரியை என்ற பெருமையை ஈட்டிக் கொடுத்தது.

1998 ஆம் ஆண்டு வீரகேசரியில் வெளியான இவரது பாவத்தின் சுவடுகள் சிறுகதை, கலாசார சமய அலுவல்கள் அமைச்சால் சிறந்த சிறுகதையாகத் தெரிவு செய்யப்பட்டு அப்போதைய கலாசார சமய அலுவல்கள் பிரதி அமைச்சர் பேராசிரியர் ஏ.வி.சுரவீரவினால் சிறந்த சிறுகதை எழுத்தாளர் விருதும் பணப்பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கலாநிதி க.குணராசா (செங்கையாழியன்) எழுதிய ஈழத்துச் சிறுகதை வரலாறு எனும் ஆய்வு நூலில் ஈழத்தின் தரமான பெண் எழுத்தாளர்களில் ஒருவரான இவரது சிறுகதைகள் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அளவு முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது.

மல்லிகை மாத சஞ்சிகை,1999 ஆம் ஆண்டு ஜனவரி மாத இதழில் (34 ஆவது ஆண்டு மலர்) அட்டைப் படத்தில் இவரது படத்தைப் பிரசுரித்துக் கௌரவித்துள்ளது. மல்லிகை 43 ஆவது ஆண்டு மலரில் (ஜனவரி 2008) ஈழநாடு இதழில் புனைகதைப் பங்களிப்பு எனும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையில் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமாரை ஏழாந்தலைமுறைப் படைப்பாளியாகக் குறிப்பிட்டு இவரின் நல்ல சிறுகதைகளாக அவள் அகதியில்லை, மயங்குகிறாள் ஒரு மாது, மலர் தாவும் வண்டுகள் வெளி வந்துள்ளன என விதந்துரைக்கப்பட்டுள்ளன.

1997 ஆம் ஆண்டு பாரிசில் உள்ள தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பிரெஞ்சுக் கிளையினர் நடத்திய பாவலர் தெ.து. துரையப்பாபிள்ளை நினைவு அகில உலக சிறுகதைப் போட்டியில் இவரது பிறந்த மண் சிறுகதை முதல் பரிசைப் பெற்றுக் கொண்டது.

மோல்டே தமிழ் கலை, கலாசார மன்றம் பத்தாவது வருட நிறைவை ஒட்டி உலகளாவிய ரீதியில் நடத்திய நாடக எழுத்துப் போட்டியில் இவரது புலம்பெயரும் பாசங்கள் நாடகப் பிரதி முதற் பரிசைப் பெற்றது.

தினகரன் பத்திரிகையும் துரைவி நிறுவனமும் இணைந்து நடத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய சாமேளம் சிறுகதை பரிசைப் பெற்றுக்கொண்டது. இந்தச் சிறுகதை பரிசு பெற்ற சிறுகதைகள் 1998 எனும் நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற ஒரே பெண் எழுத்தாளர் என்ற பெருமையைப் பெற்றார்.

சிரித்திரன் சஞ்சிகை 1990 ஆம் ஆண்டு நடத்திய சித்திரச் சிறுகதைப் போட்டியில் இவரின் வானம் பொய்க்கவில்லை சிறுகதை முதற் பரிசைப் பெற்றது. யாழ். இலக்கிய வட்டமும் முரசொலிப் பத்திரிகையும் இணைந்து நடத்திய நாவல் போட்டியில் கல்லுக்குள் ஈரம் எனும் இவரது குறுநாவல் பரிசு பெற்றது.

யாழ்.இலக்கிய வட்டமும் முரசொலிப் பத்திரிகையும் இணைந்து நடத்திய குழந்தைப் பாடல் தொகுப்புப் போட்டியில் இவரது தேட்டம் குழந்தைக் கவிதைகள் தொகுப்பு பரிசு பெற்றது. வடமராட்சி மண்ணின் கலாசார பண்பாட்டு விழுமியங்களை மையமாகக் கொண்டு தனது பல படைப்புக்களை அமரர் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் எழுதியுள்ளார்.



> 1980 ஆம் ஆண்டிலிருந்து இவரது சிறுகதைகள், குறுநாவல்கள், தொடர் கதைகள், ஈழத்துப் பிரபல தினசரிகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவரத் தொடங்கின. இவரது இலக்கியப் படைப்புக்கள் வீரகேசரி, தினக்குரல், தினகரன், சுடர்ஒளி, ஈழநாடு, தினபதி, சிந்தாமணி, சிரித்திரன், முரசொலி, ஈழமுரசு, தினமுரசு, லண்டன் தமிழுலகம், கற்பகம், அருள் ஊற்று ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமாகின.

இவரது சிறுகதைகள், நாவல்களில் இந்த வடமராட்சிப் பாரம்பரியமும், சமூக விழுமியங்களும் பரந்து காணப்படுகின்றன. வடமராட்சியில் வழங்கும் மொழி நிலை பேச்சு வழக்குகள் இவரது படைப்புக்களிலே பிரதி பலிப்பது சிறப்பம்சமாகும். வடமராட்சியின் இலக்கியப் பாரம் பரியத்தில் திக்கம் சிவயோகமலர் பெண் எழுத்தாளர் என்ற வகையிலும் ஈழத்தின் முதலாவது பெண் வரலாற்று நாவல் ஆசிரியை என்ற வகையிலும் ஒரு மையப் புள்ளியாகக் கொண்டு பார்க்கலாம்.

சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறை சமூகவிஞ்ஞான மொழிகள் பீடத்தால் இவரின் சிறுகதைகள், நாவல்கள், தொடர் கதைகள் இலக்கியப் படைப்புக்கள் ஆய்வு செய்யப்பட்டு திக்கம் சிவயோகமலரின் இலக்கிய முயற்சிகள் பற்றிய ஆய்வு எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இவர் இறக்கும் வரை ஈழத்து இலக்கிய உலகில் சுடர் விட்டுப் பிரகாசித்தார். றுக்மாங்கதன் எனும் பெயர் கொண்ட ஏகபுதல்வனின் தாயான இவர் தனது குடும்பத்துக்கும் ஈழத்து இலக்கிய உலகுக்கும் புகழ் சேர்த்து தனது 64 ஆம் வயதில் மறைந்தது இலக்கிய உலகுக்கு துரதிர்ஷ்டமே எனலாம்.

உலகளாவிய ரீதியில் தனது எழுத்தாற்றலால் வடமராட்சி மண்ணுக்குப் பெருமையும், புகழும் சேர்த்த திக்கம் திருமதி சிவயோகமலர் ஜெயக்குமார் இலக்கிய உலகில் பல சாதனைகளைப் புரிந்து தனக்கென ஒரு தனியாப் புகழ் பெறும் இடத்தைப் பிடித்திருக்கிறார். அவரது நினைவுகளும் இலக்கியப் படைப்புக்களும் காலத்தால் அழியாச் சுவடுகளாக என்றும் தடம் பதிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவியைக் கூட யோசித்தே செய்ய வேண்டும்

ஒரு பாலைவனத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஈச்சை மரங்கள். மற்றபடி கண்ணுக் கெட்டியவரை மணல் மணல், மணல்தான். ஈச்சை மரம் தவிர அங்கு வேறு செடி கொடிகளே இல்லை.
ஒரு ஈச்சை மரத்தடியில் நோயாளி போல ஒருவன் உட்கார்ந்திருந்தான். தூரத்தில் யாரோ ஒருவர் ஒட்டகத்தில் அமர்ந்து வந்ததைக் கண்ட இவன் கண்களியே நம்பிக்கை ஒளி வீசியது.
ஒட்டகம் அருகில் வந்தது. ஒரு வயதான ஒட்டகத்தின் மேல் ஒரு நடுத்தர வயது வியாபாரி அமர்ந்திருந்தான். வயதான ஒட்டகம் தள்ளாடித் தள்ளாடி ஈச்சை மர நிழல் வந்ததும் நின்றது. ஒட்டகம் சிறிது ஓய்வெடுக்கட்டும் என்று வியாபாரி கீழே குதித்தார்.
நோயாளி போன்று அமர்ந்திருந்தவன் தட்டுத்தடுமாறி எழுந்து வியாபாரியிடம் பணிவுடன், "ஐயா நான் உடல்நல



மற்றவன். அருகிலுள்ள நகரத்துக்குச் சென்று மருத்துவரிடம், மருத்துவம் செய்து கொள்ள வேண்டும். தாங்கள் அன்பு மிகக் கொண்டு தங்கள் ஒட்டகத்தில் என்னையும் ஏற்றிச் செல்லுங்களய்யா" என்றான்.
வியாபாரி இரக்கமுள்ளவர். நோயாளியைப் பார்த்து, "ஐயா உங்கள் நிலை கண்டு நான் மிகவும் துன்பம் கொள்ளுகிறேன். என் நெஞ்சத்தில் உங்களைக் காணும்போது இரக்கம் சுரக்கிறது. ஆனால் என் ஒட்டகத்தைப் பாருங்கள் முதுமையான ஒட்டகம். என்னை மட்டுமே நகரத்து வாசல் வரை சுமந்து செல்லுமா என்பதே ஐயமாக இருக்கிறது" என்று அன்புருகக் கூறினார் வியாபாரி.
"ஐயா அப்படிச் சொல்லாதீர்கள். நீங்கள் என்னை இங்குவிட்டுச்சென் றால் சற்று நேரத்தில் வீசும் மணல் காற்றும் வெப்பமும் என்னைச் சாகடித்து விடும். ஆகவே கொஞ்சம் இரக்கம் காட்டுங்கள். உதவி செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும்போது உதவி செய்யாதவனை இறைவன் கூட மன்னிப்பதில்லை" என்றான்.
வியாபாரி சிறிது யோசித்தார். "சரி ஒட்டகத்தில் ஏறிக் கொள்ளுங்கள். ஒட்டகம் முடிந்தவரை நம் இருவரையும் சுமந்து செல்லட்டும். ஒட்டகம் விழுந்துவிட்டால் நான் கைத்தாங்கலாக உங்களை அழைத்துச் செல்லுகிறேன்" என்றார் வியாபாரி.
நோயாளி ஒட்டகத்தின் மீது ஏறுவதற்கு உதவி செய்தார் வியாபாரி. பிறகு அவரும் முன்பக்கமாக ஏறி அமர்ந்தார். ஒட்டகம்சுமக்க முடியாமல் இருவரையும் சுமந்து சென்றது.
வியாபாரியின் பின்னால் அமர்ந்திருந்த நோயாளி தன் மடியிலிருந்த ஒரு கத்தியை எடுத்தான் சற்றும் இரக்கமில்லாமல் வியாபாரியின் முதுகில் ஓங்கிக் குத்தினான்.
வியாபாரி அலறியவாறு இரத்தம் சொட்டக் கீழே சாய்ந்தான்.
"ஏனய்யா என்னைக் கத்தியால் குத்தினீர்கள்? உங்களுக்குநான் என்ன கெடுதல் செய்தேன்?" என்றார் வியாபாரி.
"நீங்கள் தானே சொன்னீர்கள். இருவரைச் சுமந்து கொண்டு இந்த ஒட்டகம் நகரத்தின் வாசல் வரை செல்லாது என்று! நானோ அவசரமாகச் செல்லவேண்டும். எனது நண்பர்கள் ஒரு இடத்தில் கொள்ளை அடிக்கப்போகிறார்கள். சரியான நேரத்தில் நான் செல்லவில்லை என்றால் கொள்ளை அடிக்கப்படும் பொருள்களில் எனக்குப் பங்கு கிடையாது"என்றவாறு புறப்பட முயன்றான்.
வியாபாரி வேதனையுடன்கூறினான். "ஐயா நான் சற்று நேரத்தில் சாகப் போகிறேன்.சாகப்போகும் எனக்கு ஒரு ஆசை. தயவு செய்து அதையாவது நிறைவேற்றுவதாகச் சொல்லுங்கள். நிம்மதியாகச் சாகிறேன்" என்றான் வியாபாரி.
'சரி சரி சீக்கிரம் சொல்லித் தொலை; எனக்கு நேரமாகிறது" என்றான் திருடன்.
"நீர் நகரத்துக்குச் சென்றதும் இங்கு என்ன ஏமாற்றி கத்தியால் குத்திக்கொன்றதை எவரிடமும் சொல்லாதீர்" என்று திணறியபடி கூறினான்.
திருடன் வாய்விட்டுச் சிரித்தான். நீயோ சாகப் போகிறாய். செத்தவனைப் பற்றி நான் என் நண்பர்களிடம் கூறு வதில் என்னதவறு? என்றான்.
வியாபாரி ஊசலாடிக் கொண்டிருக்கும் உயிரைக் கையில் பிடித்தபடி. "ஐயா, உதவி செய்தவனைக் கொன்று விட்டதாக நீங்கள் சொல்லுவதை உலகத்தினர் தெரிந்து கொண்டால், பிற்காலத்தில் யாரும் எப்பேர்ப்பட்டவருக்கும் உதவி செய்ய மாட்டார்கள். உதவி செய்யும் மனப்பான்மையே அழிந்துவிடும்" என்றவாறு உயிரை விட்டார் வியாபாரி.
"ஏமாளிகள் இருக்கும் வரை என்னைப் போன்ற எத்தர்கள் ஏமாற்றிக்கொண்டுதான் இருப்பார்கள்" என்றவாறு ஒட்டகத்தை "விரைந்து செல்" என விரட்டினான் திருடன்.
பாத்திரமறிந்து பிச்சையிட வேண்டும் என்ற மூதுரை மெய்யாகி விட்டது.

## கடல்களும் அவற்றின் பரப்பளவும் (சதுர கிலோமீற்றர்)

1. தென் சீனக் கடல் - 29,64,615
2. கரீபியன் கடல் - 25,15,926.
3. மத்திய தரைக் கடல்- 25,09,969.
4. பேரிங் கடல் - 22,61,070.
5. மெக்சிகோ வளைகுடா- 15,07,639.
6. ஜப்பான் வளைகுடா - 10,12,949.
7. ஒக்கோட்ஸ்க் கடல் - 13,92,125.
8. ஹட்சன் வளைகுடா - 7,30,121.
9. அந்தமான் கடல் - 5,64,879.
10. கருங்கடல் - 5,07,899.
11. செங்கடல் - 4,52,991.
12. வடகடல் -4,27,091.
13. பால்டிக் கடல் - 3,82,025.
14. கிழக்கு சீனக்கடல் - 12,52,180.
15. கலிஃபோர்னியா வளைகுடா- 1,61,897.
16. அரபிக் கடல் - 2,25,480.
17. ஐரிஸ் கடல் - 8,650.
18. செயிண்ட் லாரன்ஸ் வளைகுடா- 2,28,475

## சாய்ந்தாடம்மா

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாயக்கிளியே சாய்ந்தாடு
மயிலே குயிலே சாய்ந்தாடு
மாடப்புறாவே சாய்ந்தாடு
சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
மானே மரகதமே சாய்ந்தாடு
மணிக்குயிலே சாய்ந்தாடு
சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
கட்டிக்கரும்பே சாய்ந்தாடு
காய்ச்சிய பாலே சாய்ந்தாடு
சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
குட்டி நிலவே சாய்ந்தாடு
குத்து விளக்கே சாய்ந்தாடு
சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு



## வரலாற்றில் இன்றைய தினம்

1265 - அரச கட்டளையின்றி இங்கிலாந்து நாடாளுமன்றம் முதல் தடவையாகக் கூடியது.
1870 - 177 பேருடன் 'சிற்றி ஒப் பொஸ்டன்" படகு கடலில் மாயம்.
1887 - பேர்ள் துறைமுக கடற்படைத் தளத்தின் குத்தகைக்கு அமெரிக்க செனட் அங்கீகாரம்.
1892 - கூடைப்பந்தாட்டம் முதன் முதலாக விளையாடப்பட்டது.
1914 - இந்திய பெண் சத்தியாக்கிரக முதலாவது அணியினர் தென் ஆபிரிக்க பீற்றமாற்ஷ்பேக் சிறையிலிருந்து 3மாத மறியலின் பின் விடுதலை.
1925 - சோவியத் ரஷ்யாவும் ஜப்பானும் மீள உறவு ஏற்படுத்திக் கொள்ளும் கலந்துரையாடலுக்கு ஒப்பமிட்டன.
1929 - முதலாவது பேசும் விவரணத் திரைபடம் வெளிப்புறப்படப் பிடிப்பாக படம் பிடிக்கப்பட்டது.
1942 - பர்மாவினுள் ஜப்பான் பிரவேசித்தது.
1944 - றோயல் விமானப் படை 2, 300 தொன் நிறையுடைய குண்டுகளை பேர்லினில் போட்டது.
1945 - பிராங்லின் டி றூஸ் வெல்ற் அமெரிக்காவின் ஜனாதிபதியாக நான்காவது தடவையும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.
1953 -நியூயோர்க் நகரிலிருந்து முதல் தடவையாக கடனாவுக்கு தொலைக்காட்சி ஒளிப்பரப்பட்டது.
1955 - அணு சக்தியினால் ஆன முதலாவது நீர்மூழ்கிக் கப்பல் 'யு.எஸ்.எஸ்.நோற்றிலஸ் வெள்ளோட்டம்.
1994 - புலிகளிடம் ஆயுதம் இருக்கும் வரை அவசரகாலச் சட்டம் இருக்குமென நாடாளுமன்றில் அமைச்சர் விமல் விரவன்ச தெரிவிப்பு.
1994 - புலிகளுடன் பேச அரசு விருப்பம். இதுவே அவர்களுக்கு இறுதி வாய்ப்பு என நாடாளுமன்றில் பிரதமர் ரணில் தெரிவிப்பு.
1995 - பாப்பரசர் இலங்கை வருகை. பிற்பகல் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கினார். விமான நிலையத்தில் செங்கம்பள வரவேற்பு.
1995 - பாப்பரசரால் முழந்தாளிட முடியவில்லை. பாத்திரத்தில் எடுத்த மண்ணை முத்தமிட்டார்.
2004 - ஜே.வி.பி. சு.க. கூட்டு. ரில்வின் சில்வா. மைத்திரிபால சிறிசேன ஒப்பம்.
2006 - மனித உரிமை ஆணைக்குழுவில் கல்வித்துறை சம்பந்தப்பட்ட முறைப்பாடுகளே அதிகம் எனத் தெரிவிப்பு.
2006-பின்லேடன் சமாதான அழைப்பு. அதனை அமெரிக்கா நிராகரிப்பு.
2007 - கதிரவெளியும் படைத்தரப்பு வசம் என படைத்தரப்பு அறிவிப்பு.
2008 - புகைபிடிப்பதைத் தூண்டுவது சினிமாதான் என சிறுவர்கள் ஆய்வில் தகவல்.
2008 - கலாநிதி புஷ்பரட்ணம் பேராசிரியராகப் பதவி உயர்வு.
2009 - வன்னியில் ஏறிகணை மழை. 17 பேர் உடல் சிதறி சாவு. 51 பேர் காயம். சுதந்திரபுரத்தில் மட்டும் 13 பேர் கொலையுண்டனர்.
2013 - அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா இரண்டாவது தடவையாகவும் பதவியேற்பு.
2013 - செஞ்சோலை சிறுவர் இல்லம் கே.பியால் திறந்து வைப்பு.

## வர்ணம் தீட்டலாம் வாங்க!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மேன்மைகொள் சைவநீதி இறுவட்டு வெளியீடும் ஆன்மிகச் செயலமர்வும்

பா.தனபாலன்

விஞ்ஞான விருத்தியும் பொருளாதார சமூக மாற்றங்களும் விரைவாக நிகழ்ந்து கொண்டிருப்பதால் ஏற்படும் சவால்களைத் தீர்க்க ஆன்மிகமே இன்றைய மாணவர்களுக்கும் மக்களுக்கும் கைகொடுப்பதாகவுள்ளது. நாட்டிலேற்படும் வன்முறைகளைத் தீர்க்கும் மகாசக்தி ஆன்மிகத்திடமே உள்ளது என்ற வகையில் தேசிய கல்வி நிறுவகத்தில் கடந்த சனிக்கிழமை மேன்மை கொள் சைவநீதி என்ற இறுவட்டு வெளியிடப்பட்டது.

**சமய விழுமியம்**

மனித வாழ்வில் எமது நாட்டில் சமயம் வகிக்கின்ற முக்கியத்துவம் உணரப்படாமையினாலேயே. சமய பாடம் பாடசாலை முறைமையில் இலங்கையில் கற்பிக்கப்படுகிறது. சமய பாடத்தினூடாக மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு மட்டுமன்றி சமய விழுமிய அடிப்படையில் வையத்துள் வாழ்வாங்கு வாழும் திறன்களை விருத்தி செய்யக்கூடிய ஒழுக்கம், பண்பாடு முதலான ஆளுமைப்பண்புகளும், ஆன்மிகப் பண்புகளும்விருத்திசெய்யப்படும். இதற்கானவழிமுறைகளை நவீன தொழில் நுட்பங்களினூடாக மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வழங்கும் செய்முறைகள் விருத்தி செய்ய்ப்பட வேண்டும் என தேசியக் கல்வி நிறுவன சமயப் பிரிவைச் சேர்ந்த பொ.ஜெயரூபன் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்;

இவ்வகையிலேயே இறைசிந்தனை, சமய நம்பிக்கை சமய ஒழுகலாறுகளும், சமய விழுமியங்களும் தத்துவங்களும் சமயமும் சமூக நடைமுறைகளும், சமயங்களின் சமரசம் முதலான விடயங்களும் இன்று முதன்மை பெறுகின்றன. இவற்றை மையமாகக் கொண்டு திருமுறைகளை முறையாக ஒருங்கிணைத்து இடை நிலைக் கல்வி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உதவக்கூடிய வகையில் இந்த இறுவட்டு உருவாக்கப்பட்டது என எடுத்துரைத்தார். இந்த இறுவட்டுடன் திருமுறைப்பாடல்கள் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையானவை தொகுக்கப்பட்ட நூல் தொகுதிகளும் வெளிவருகின்றமை சிறப்பானதாகும் என எடுத்துரைத்தார்.

**விழுமியங்களின் சிதைவு**

இன்று மனித விழுமியங்கள் சிதைவுற்று வருகின்றன. குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் பெற்றோர்களை ஆசிரியர்களை மதிக்காமை, மூத்தோர்களை கவனிக்காமை, அவர்கள் சொற்கேளாமை, வன்முறைகளில் நாட்டம், குழு மோதல்கள் பாடசாலைகளிடையே சண்டைகள், காயப்படுத்தல்கள், சமயநெறி முறைகளைப் பின்பற்றாமை, வாரத்தில் ஒரு நாளாவது குடுப்பத்தினருடனோ, தனியாகவோ கோயிலுக்குச் செல்லாமை, போதைப்பொருள் பாவனை என விழுமியங்களின் சிதைவு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

இதற்குக் காரணங்கள் பெற்றோர்களின் முன்மாதிரியான நடத்தை இன்மை, ஆசிரியர்களின் பொருத்தமற்ற செயற்பாடுகள், சமூக வன்முறைகள், அநீதிகள், மூத்தோரின் முன்மாதிரியற்றஒழுக்க விழுமியங்கள் அற்ற செயற்பாடுகள், ஆலயங்கள், சமயகுருமார், தலைவர்களின் அர்ப்பணிப்பற்றசெயற்பாடுகள் என்பவையாக நீண்டுசெல்கின்றன. இவற்றுள் இன்று இன்ரநெற், திரைப் படங்கள், தொலைக்காட்சிகளில் இடம்பெறும் வன்முறைகள், மனிதத்துவ விழுமியங்களுக்குப் பொருத்தமற்ற செயற்பாடுகள் முன்மாதிரியாகக் காட்டப்படுகின்றன. இவற்றிலிருந்து விடுபடுவதற்கு சமய விழுமிய வழிபாட்டுச் செயற்பாடுகளே இன்று அவசியமாகவுள்ளன.

**மனிதத்துவ நோன்பு**

இன்று உலகளாவிய ரீதியில் மனிதத்துவ மாண்புறு செயற்பாடுகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. கல்வியின் மூலமும், சமய ஒழுகலாறு மூலமுமே மனிதத்துவத்தை மாண்புறச் செய்ய முடியும். மனித வாழ்க்கையை மேம்படுத்தவும், அர்த்தமுள்ளதாக்கவும் சமயமும், கல்வியுமே இரண்டு கண்களாகும். இவற்றின் மூலம் இன்றைய பாடசாலை மாணவர்களையும் இளைஞர்களையும் நல்வழிப்படுத்த முடியும். இதற்கு இன்று ஊடகங்களின் பங்கே முதன்மையாகவுள்ளது என இறுவட்டு வெளியீட்டைத் தொடர்ந்து ஆரம்பமான









இறுவட்டை அருட்தந்தை அன்றியஸ் பெர்னாண்டோ வெளியிட்டு வைக்க கோப்பாய் சிவம் முதற் பிரதியைப் பெறுகிறார். செயலமர்வை ஆரம்பித்து உரையாற்றுகிறார் தேசியக் கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகம். மேடையில் பிரதிப்பணிப்பாளர் நாயகம். (சமயம் விழுமியங்கள் கலாநிதி மாம்புல் சுமனரத தேரர், நிபுணத்துவ ஆலோசகர் பா.தனபாலன், தேசியக் கல்வி நிறுவக பொ.ஜெயரூபன்.

ஆன்மிக செயலமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார் தேசியக் கல்வி நிறுவனப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் குணபால நாணயக்கார.

> “இன்று உலகளாவிய ரீதியில் மனிதத்துவ மாண்புறு செயற்பாடுகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. கல்வியின் மூலமும், சமய ஒழுகலாறு மூலமுமே மனிதத்துவத்தை மாண்புறச் செய்ய முடியும்.”

தொடர்ந்து உரையாற்றிய பணிப்பாளர் நாயகம் எமது நாட்டிலுள்ள அனைத்து மாகாணங்களில் இருந்தும் வந்துள்ள சமயப் பெரியார்கள், ஆசிரியர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இன்று ஒன்றுகூடி இந்தச் செயலமர்வில் பங்கு கொள்கின்றீர்கள். இந்தப் பங்குபற்றல் மிகப் பெரிய விழுமிய மாற்றத்தை எமது பாடசாலை மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும். எமது நாட்டின் பன்மைக் கலாசாரத்தினூடு, பல மதங்களின் ஒருங்கிணைவால் மிகப்பெரிய சாதனைகளை எம்மால் ஏற்படுத்த முடியும். மிகப்பெரு விழுமியமான மனிதத்துவ மாண்புகளை வளர்க்கக்கூடிய திட்டங்களை நாம் புதிதாக உருவாக்க வேண்டும். அதற்கான தொடக்க நாளாக இந்த நாள் அமைய வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார். எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்கள் க.பொ.த.உயர்தரத்திலும், பல்கலைக்கழகங்களிலும் கட்டாயம் சமய விழுமியப் பாடத்தைக் கற்கும் ஒரு செயற்றிட்டத்தை நீங்கள் தயாரித்து அளிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதற்கிணங்க பங்குபற்றியவர்கள் குழுவாக இணைந்து பாடசாலை மாணவர்களினதும், இளைஞர், யுவதிகளினதும் சமய விழுமியப் பண்புகளை எவ்வாறு மேலோங்கச் செய்யலாம் என்ற வகையில் சமர்ப்பிப்புக்களை மேற்கொண்டனர்.

குழுவாக சமர்ப்பிப்புக்களை மேற்கொண்டோர் சமய பாடத்தினூடாகப் பின்வரும் தேர்ச்சிகள் அடையப்பட வேண்டும் என எடுத்தியம்பினர்.

1. கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடித்துவழிப்படுத்தல்.
2. பக்திப் பாசுரங்களைப் பண்ணோடு பக்தியோடு கூட்டாகவும் தனியாகவும் பாடுதல்.
3. இறைபக்தி உணர்வு குறித்த விளக்கங்களை சமய இலக்கியங்களினூடாக உணர்தல்.
4. இறை நம்பிக்கையும் அன்புமே பக்தியின் அடிப்படை என்பதைப் புரிதல்.
5. சமய விழுமியங்களை வழிபாட்டு முறைகளைப் பேணிப் போற்றுதல்.
6. சமயப் பெரியார்களை அறிந்து அவர்களைத் தமது வழிகாட்டியாகக் கொள்ளல்.
7. சமயதத்துவ இயல்புகளை அறிவார்ந்து கற்றல்.
8. சமய வாழ்வில் சமூகப் பணிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஈடுபடுதல்.
9. வாழ்வில் சமய சடங்குளின் பொருளறிந்து பின் பற்றுதல்.
10. ஏனைய சமயங்களை மதித்துச் செயற்படுதல்.

இவற்றை அடைவதற்கு சமய பாடமானது வாழ்வியலுடன் உயிர்ப்பான தொடர்புடையது என்ற வகையில், பாடசாலையில் கற்றல்கற்பித்தல் செயன்முறைகள் விரிவுபடுத்தப்பட வேண்டும். தினசரி பிரார்த்தனை, ஆசிரியர்கள் நற்சிந்தனை கூறல், பாடசாலைக்கு அருகிலுள்ள ஆலய தரிசனம், சமய தீட்சை பெறல், சமய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க வைத்தல், விழாக்களைக் கொண்டாடுதல், மாணவர்களைக் கூட்டாக ஒன்றிணைத்து சமய மன்றங்களை உருவாக்கி பொது மக்கள் சேவைகளை வழங்குதல், தாய்தந்தைகுருவை விசேட நாள்களில் வணங்குதல், சமய மாற்றங்களைத் தடுத்தல், என்ற வகையில் நடைமுறைக்கு சாத்தியமான வகையில் ஒவ்வொரு குழுக்களும் சிறந்த ஆலோசனைகளை முன்வைத்தனர்.

இந்த ஆலோசனைகள் அறிக்கைகளாக்கப்பட்டு சமய விழுமியக் கல்வி ஆய்வுப் பிரிவினருக்கும், கல்வியமைச்சு, தேசியக் கல்வி நிறுவகம், தேசியக் கல்வி ஆணைக் குழு, மாகாண சமய விழுமியப் பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மேலும், கல்விக் கொள்கை வகுக்கும் கல்வியமைச்சு, தேசியக் கல்வி நிறுவக கல்விச் சபைகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டன. பாடசாலை மாணவர்களும், இளைஞர்களுமே நாளைய தலைவர்கள். நாட்டின் நற்பிரசைகள் இவர்களைச் சரியாக வழிநடத்த வேண்டியது எமது அனைவரினதும் முதற் கடமையாகும். சமய விழுமியச் செயன்முறைகளினூடாக அனை வரும் ஒருங்கிணைந்து இவர்களை நல்வழிப்படுத்த முன்வருவோம்.

**கட்டுரையாளர் (நிபுணத்துவ ஆலோசகர்)**
**சமய விழுமியப் பிரிவு, கல்வியமைச்சு பத்திரமுல்ல.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









தமிழினியன்

புதிய பொலிகண்டி கலை இலக்கிய மன்றத்தின் ஒழுங்கு படுத்துதலில் முல்லைதிவ்யனின் 'தாய்' சிறகதை தொகுதிநூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிகண்டி மக்கள் படிப்பக முன்பள்ளி முன்றிலில் சிவபாலசிங்கம் தலைமையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருத்தினராக பருத்தித்துறை பிரதேச செயலரும், கவிஞருமான த.ஜெயசீலனும் கலந்து சிறப்பித்தார். நூலுக்கான மதிப்பீட்டு உரையை சு.த சிந்துதாசனும் யோ.புரட்சியும் வழங்கினர். வெளியீட்டு உரையை நிகழ்வின் பிரதம விருத்தினரான பருத்தித்துறை பிரதேச செயலரும், கவிஞருமான வழ்த்துரையை எழுத்தாளர் சமரபாகு சி.உதயகுமாரும். கலாபூசணம் அனந்தராஜாவும் வழங்கினர். இதனைத் தொடர்ந்து நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. தாய் சிறுகதைத் தொகுதி நூலின் முதற் பிரதியை பருத்தித்தறை பிரதேச செயலர் வெளியிட்டுவைக்க நூலசிரியரின் தயார் ஆனந்த மயில்- நகுலேஸ்வரி பெற்றுக்கொண்டார்.

# மெண்டலின் சிவகுமாரின் லயராக சமர்ப்பணம்

ஆரணி
மானிப்பாய்

மெண்டலின் சிவகுமாரின் லலிததேஷ்திரா நிறுவனத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்பட்ட லயராக சமர்ப்பணம் தொடர்பான பார்வை இது.

லலித லலிததேஷ்திரா எனும் நிறுவனம் மெண்டலின் சிவகுமார் மற்றும் அவர் தம் பாரியார் சுகன்யா இணைந்து தம் நலன் கருதாத இசைச் சேவையை பறைசாற்றுமுகமாக உருவாக்கப்பட்டதும், சிவகுமாரின் தாயார் நினைவாக அமைக்கப்பட்டதுமாகும்.

பல நிகழ்வுகளை அரங்கேற்றி வரும் லலிததேஷ்திராவின் இரண்டாம் ஆண்டு நிறைவு நிகழ்வுகளை ஒட்டிய 'கடதரங்' கடந்த 7ஆம் திகதி அன்றைய மாலைப் பொழுதில் செல்வமஹால் மண்டபத்தில் இனிதே ஆரம்பமாகியது.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து, சிறப்புரையை மிக அழகாக திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன் அம்மா எமக்காக அளித்திருந்தார். தொடர்நது இந்தியாவிலிருந்து முதன்முதலாக இலங்கைக்கு வருகை தந்த உ.வே.சாமிநாத ஐயரின் வழியில் தோன்றிய எமக்கெல்லாம் பரிச்சயமான விக்குவின் மாணவியும், இசை உலகின் முதல் கட வித்துவாம்சினியுமாகிய ஸ்ரீமதி சுகன்யா ராம்கோபால் மேடைக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். இவரோடு பக்கவாத்திய கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

மனதை உருக்கும் வகையில் அமைந்திருந்த விக்கு விநாயகரானின் சதுர்கடலய சமர்ப்பணம் கண்ணை விட்டகலாத நிலையில் 'கடதரங்' எனும் நிகழ்வை எமக்களித்த அனைவருக்கும் நன்றிகள்.

ஒரு நிகழ்வை விமர்சிக்கும் அளவுக்கு தகுதியில்லையாயினும் மிகச் சிறப்பாக ரசிக்கத் தெரிந்தவள். மண்டபம் நிறைகூட்டத்தோடு மல்லாரியுடன் இனிதே நிகழ்வு அரங்கை அதிரத் தொடங் கியது. இவ்வாறாக ஒவ்வொரு உருப்படியும் அவர் கொடுத்த விளக்கங்களும் எம்மையெல்லாம் வேறொரு உலகுக்கு அழைத்துச் சென்று விட்டது.

மாணவர்களிடம் இசையை வளரச் செய்யும் நோக்கோடும், இசையைப் பாதுகாத்து வளர்த்தெடுக்கும் நோக்கோடும் இவ்வாறான நிகழ்வுகளை இலவசமாக அரங்கேற்றி விடுவது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்லாது விளம்பரங்கள், அழைப்பிதழ்கள் மூலமாக வெளிப்படுத்தி அனைவரது வரவை எதிர்பார்ப்பது அவர்களது பெருமையே சாரும்.

இருப்பினும் கலைஞர்கள், கலை கற்கும் மாணவர்கள் வரவ மிகக் குறைவாகவே இருந்தது. எம்மை நாம் வளர்க்க முன்வர வேண்டும். இவ்வாறான நிகழ்வுகளில் பங்கேற்க வேண்டும் என்பது எனது சிறிய ஆதங்கம்.

பக்க வாத்தியக் கலைஞர்களுக்கும் மிகப்பெரிய சபாஷ்! அவர்களின் அர்ப்பணிப்புக்கு அளவேயில்லை. தமிழகத்திலிருந்து இசையை வளர்க்க பெரும்பாடுபட்டு வருகின்றார்கள். நீ.இராம கிருஷ்ணன். (மிருதங்கக் கலைஞர்) வெள்ளத்தினால் சில நாள்கள் பம்பாயில் தங்கி இலங்கை வந்திருக்கிறார். குறிப்பாக அவரது உரை இசை எம்மை வாழவைக்கும். ஆனால் நம்மவரோ பின் தங்கி நிற்கிறார்கள். நாம்தான் இசையை வளர்க்க வேண்டும். மீண்டும் இன்னோர் நிகழ்வை எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## செய்முறை:

சோயாவை நன்கு ஊற வைக்கவும். 3 மணி நேரம் கழித்து சோயாவை அரைத்து, பால் எடுக்கவும். தேங்காயை துருவி பால் எடுத்து வைத்துக்கொள்ளவும். இரண்டையும் கலந்து வைக்கவும். ஒரு தாச்சியில் நெய் விட்டு, முந்திரி, திராட்சையை வறுத்து வைத்துக் கொள்ளவும். அதே தாச்சியில் அவலையும் வறுத்து வைத்துக் கொள்ளவும். பாலில் அவலைச் சேர்த்து வேக வைத்து, சர்க்கரை, ஏலக்காய் தூள் சேர்த்து நன்கு வெந்தவுடன் முந்திரி, திராட்சையினால் அலங்கரித்துப் பரிமாறவும்.

**தேவையானவை:**
சோயா - கால் கப்
தேங்காய் (துருவியது) கால் கப்
அவல் - 3 கரண்டி
சீனி - 6 கரண்டி
நெய் - அரைக்கரண்டி
முந்திரி - 4
திராட்சை - 4
ஏலக்காய் தூள் - அரைக்கரண்டி

## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 60 | 100 | 60–80 | 60 | 40 | 40 |
| கத்தரி | 140 | 120 | 140 | 150 | 120 | 120 | 100 | 80 |
| கரட் | 200 | 200 | 180–350 | 180 | 300 | 320 | 180 | 360 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 60 | 30 | 35 |
| பயிற்றை | 220 | 160 | 150 | 160 | 160 | 140 | 100 | 140 |
| பாகல் | 150 | 160 | 150 | 160 | 160 | 160 | 150 | 150 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 60–80 | 120 | 60 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 80 | 80–90 | 90 | 70 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 150 | 120–160 | 140 | 110 | 100 |
| பூசணி | 60 | 50 | 60 | 60 | 50–60 | 60 | 40 | 40 |
| தக்காளி | 80 | 80 | 70 | 80 | 60–70 | 60 | 55 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 60 | 30 | 50 | 40 |
| கீரை | 40 | 30 | 40 | 20 | 20–30 | 40 | 35 | 35 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 50 | 20–30 | 30 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 350 | 350 | 350 | 300–320 | 600 | 270 | 450 |
| புடோல் | 120 | 120 | 80 | 80 | 80–100 | 120 | 70 | 80 |
| கோவா | 120 | 160 | 120 | 120 | 100–120 | 160 | 80 | 100 |
| வெண்டி | 180 | 120 | 120 | 120 | 120 | 120 | 90 | 120 |
| போஞ்சி | 200 | 200 | 180 | 280 | 200 | 260 | – | 200 |
| லீக்ஸ் | 140 | 160 | 120 | 120 | 120 | 120 | 130 | 130 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40–50 | 40–45 | 40 | 30–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 | 70 | 70–80 | 60 | 50 | 180 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 100 | 100–120 | 40 | 60 | 50 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 250 | 280 | 300 | 230 | 280–300 | 400 | 230 | 300 |
| இராசவள்ளி | 150 | 150 | 160 | 100 | 140–160 | 120 | 110 | 100 |

## ஆடைகளின் பாதுகாப்பு

1. துணிகளுக்கு நீலம் போடும் சமயம் சிறு முடிச்சுகளில் நீலத்தைக் கட்டி நீரில் கலந்தால் நீலம் தண்ணீரில் பரவும்.
2. வெள்ளை நிற சட்டைகளை, நீல நிற ரியூஸ் பேப்பரில் அல்லது நீலத் துணியில் சுற்றி வைத்தால் பழுப்பு நிறம் ஏறாமலிருக்கும்.
3. பட்டுப் புடைவைகளை துவைக்கும்போது பொடித்த பூந்திக் கொட்டைகளை உபயோகிக்கலாம். இறுதியில் மண்ணெண்ணெய் கலந்த நீரில் அலசி எடுத்தால் சாயம் போகாமலும் பூச்சி வெட்டாமலுமிருக்கும்.
4. தேநீர் கரையைப் போக்க சீனியை உபயோகிக்கலாம். வெள்ளைத் துணிகளில் உள்ள கரையைப் போக்க தண்ணீரில் ப்ளீச்சிங் பவுடரைக் கரைத்து உபயோகிக்கலாம்.
5. எண்ணெய் கறையைப் போக்க துணியின் மேலும் கீழும் ப்ளாடிங் பேப்பரை வைத்து அயர்ன் பண்ண வேண்டும்.
6. ஸ்வெட்டர் போன்றவைகளை பேப்பரில் மடித்து வைத்தால் பூச்சி வெட்டாது.
7. பழைய துணிகளையும் நன்கு சலவை செய்து, மடிப்புக் கலையாமல் அலுமாரிகளில் அடுக்கி வையுங்கள். அல்லது பழைய சூட்கேஸ், பிரயாணப் பைகளில் சேமித்து வைக்கவும்.

## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800-1000 | 700 | 600 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 400 | 400 | 400 | 300 | 400 |
| கணவாய் | 600 | 600 | 500 | 400 | 600 | 650 | 550 |
| பாரை | 450 | 600 | 400 | 600 | 600 | 500 | 500 |
| சுறா | 300 | 600 | 600 | 800 | 700 | 600 | 300 |
| சீலா | 250 | 400 | 400 | 500 | 450 | 400 | 400 |
| விளை | 500 | 500 | 400 | 600 | 500 | 400 | 400 |
| முரல் | 250 | 400 | 300 | 400 | 350 | 300 | 350 |
| கும்பிளா | 300 | 350 | 300 | 500 | 400 | 350 | 300 |
| கிழாக்கன் | 400 | 800 | – | – | 400 | – | 800 |
| ஒரா | 300 | 400 | 250 | – | 250 | 400 | 400 |
| திரளி | 200 | 350 | 200 | 300 | 120 | – | 250 |
| நகரை | 150 | 250 | 200 | 250 | 350 | – | 250 |
| சூடை | 130 | 150 | 100 | 200 | 200 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 250 | 100 | 200 | 200 | 200 | 200 |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 300 | – | 350 |
| மதனம் | 250 | 200 | 180 | 300 | 250 | 200 | 200 |
| கொய் | 100 | 150 | 500 | 100 | 100 | 100 | 150 |
| பாலை | 100 | 150 | 250 | 400 | 400 | 500 | 200 |
| வாழை | 150 | 150 | 200 | 300 | 300 | 300 | 150 |






ஆடம்பரமான பழங்கால தோடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மிகவும் பகட்டான இவற்றை அணியும் போது கழுத்தில் அணி கலங்கள் அணியவேண்டிய அவசியம் இல்லை. கனதியாகவும், வேலைப்பாடுகள் அதிகமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவற்றின் விலை 1,500 முதல் 2,500 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது.

### நாளை

தை-07
வியாழக்கிழமை 21.01.2016
திதி: துவாதசி மு.ப.10.04
நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.இ.09.07
ராகுகாலம்: 02.05-03.35 வரை
சுபநேரம்: 08.05-09.35 வரை
பிரதோச விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றுக்கொடுங்கள் கற்றுக்கொள்ளுங்கள்

யாழில் ஒருநாள்,
ஒரு கோடீஸ்வரர் தன்னிடம் கோடிக் கணக்கில் பணம் உள்ளது. எனவே தேவை உள்ள மக்களே திரண்டு முற்றவெளிக்கு வாருங்கள் என அறிவித்தார்.
மக்களும் இலட்சக்கணக்கில் திரண்டனர். அப்போது அங்கே வருகை தந்த அந்த கோடீஸ்வரர் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். என்னிடம் எல்லோருக்கும் கொடுக்கும் அளவுக்குப் பணம் உள்ளது. ஆகவே எவரும் அடித்துக்கொள்ளாமல் வரிசையாக நில்லுங்கள் என்றார்.
உடனே அனைவரும் வரிசையாக நின்றனர். வரிசை காங்கேசன்துறை வரை நீண்டது.
அப்போது மீண்டும் ஒரு அறிவிப்பை வெளியிட்டார் அந்தக் கோடீஸ்வரர்.
அதாவது முதலில் நிற்பவருக்கு ஒரு ரூபாவும், இரண்டாவதாக நிற்பவருக்கு இரண்டு ரூபாவும், ஆயிரமாவதாக நிற்பவருக்கு ஆயிரம் ரூபாவும், லட்சமாவதாக நிற்பவருக்கு லட்சம் ரூபாயும் என நிபந்தனை போட்டு விட்டு ஒவ்வொருவராக வாருங்கள் என அழைத்தார்.
முதலில் நின்றவர் "இங்கு என்ன நடக்கிறது" அவசரமாக வெளியே செல்ல வேண்டும் என்று ஒதுங்கி விட்டார்.
இரண்டாவதாக நின்றவர் உணவருந்தச் செல்வதாகக் கூறி விலகிச் சென்றார்.
மூன்றாவதாக நின்றவரும் நசிக்கிடாமல் விலகிச் சென்றார்.
இப்படியே, முதலில் ஒதுங்கிய மூன்று பேரும் நாம் பஸ் பிடித்து காங்கேசன்துறை சென்று அங்கே கடைசியாக இணைந்து கொள்வோம் என்று பேசிக்கொண்டனர்.



இப்படியே அனைவரும் செயற்பட்டு ஈற்றில் உதவிகளைப்பெற எவரும் வரவில்லை. மனித ஆசைஎப்பொழுதுமே பேராசை தான்.
இதைவிடுத்து கிடைப்பதை மதிக்கக் கற்றுக் கொடுங்கள், கற்றுக் கொள்ளுங்கள்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | | | | 1 | 3 |
| 5 | | | 3 | | | | 7 | 2 |
| 3 | | | | 1 | | | | |
| | | | 9 | | | | | 6 |
| 1 | 6 | 3 | 4 | 7 | 2 | 8 | 5 | 9 |
| 2 | | | | | 6 | | | 7 |
| | | | | 8 | | | | |
| 6 | 3 | | | | 9 | | | 5 |
| 9 | 5 | | | | | 7 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 5 | 3 | 6 | 7 | 4 | 2 | 9 |
| 7 | 2 | 6 | 9 | 8 | 4 | 1 | 3 | 5 |
| 3 | 9 | 4 | 1 | 2 | 5 | 7 | 8 | 6 |
| 6 | 7 | 1 | 8 | 5 | 2 | 9 | 4 | 3 |
| 4 | 5 | 9 | 7 | 3 | 1 | 2 | 6 | 8 |
| 2 | 3 | 8 | 4 | 9 | 6 | 5 | 7 | 1 |
| 9 | 6 | 2 | 5 | 7 | 3 | 8 | 1 | 4 |
| 5 | 4 | 3 | 2 | 1 | 8 | 6 | 9 | 7 |
| 1 | 8 | 7 | 6 | 4 | 9 | 3 | 5 | 2 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிக்கோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** நண்பர்கள் எதிர்பார்ப்புடன் அணுகுவர். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் செலவு ஏற்படும். உணவு விடயத்தில் எச்சரிக்கை தேவை.

**இடபம்:** கடந்த கால உழைப்புக்குரிய பயன் தேடி வரும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். வருமானம் அதிகரிக்கும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காகச் சேமிப்பைப் பயன்படுத்துவர். வாகனப் பயணத்தில் மிதவேகம் தேவை.

**கடகம்:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். உறவினர்களால் உதவி கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**சிங்கம்:** சமூகத்தில் மதிப்பு உயரும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியில் அக்கறை கொள்வீர்கள். பணவரவு அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்புறுவார்கள்.

**கன்னி:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சராசரி பணவரவு கிடைக்கும். எதிர்பார்த்த சுபசெய்தி வர தாமதமாகும். பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு மகிழ்வீர்கள்.

**துலாம்:** சமயோசிதமாக செயற்படுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவில், சிக்கனத்தைக் கடைபிடிப்பர். உணவு விடயத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**தனுசு:** பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்களுக்கு, தாய் வீட்டினரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.

**மகரம்:** மனதில் இருந்த குழப்பம் விலகும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம், இலாபத்தைப் பெருக்குவீர்கள். உணவு ஒவ்வாமை ஏற்படலாம். மாணவர்கள் படிப்பில் அக்கறை கொள்வது நல்லது

**கும்பம்:** சிறிய பணி கூட கடினமாக தோன்றும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். வெளியூர் பயணத் திட்டத்தில், திடீர் மாறுதல் ஏற்படும். தெய்வ வழிபாடு மனம் அமைதிக்கு வழிவகுக்கும்.

**மீனம்:** எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் படிப்படியாக [illegible] மகிழ்ச்சி உண்டாகும்.

## ஐ.நா.

நேற்றைய தினம், நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன் போதே மேற்படி விடயத்தை அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.
இந்தச் சந்திப்பின் போது உத்தேச அரசியல் யாப்பு மற்றும் நல்லிணக்கம் உள்ளடங்கலான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. பொறுப்புக் கூறல் தொடர்பில் கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன் இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதிலிருந்து விலக முடியாது. அந்தப் பிரேரணையிலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அப்படியே நடைமுறைப் படுத்தப்படவேண்டும்.
தேசிய பிரச்சினைக்கான தீர்வு புதிய அரசமைப்பில் உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர், அந்தத் தீர்வானது அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளப் படக் கூடியதாக அமையவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.
தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதில் தாம் அக்கறையுடன் இருப்பதாகக் கூறிய தூதுவர், தென்னாபிரிக்க அரசானது இந்த விடயம் தொடர்பில் எந்த வேளையிலும் தனது ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளதாக தெரிவித்தார் .
நல்லிணக்கம் தொடர்பில் தென்னாபிரிக்காவின் அனுபவங்கள் இலங்கைக்கு அவசியமானது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இங்கு தெரிவித்தார். (த-5)

## மேலும் 14

வரி மாதம் 4 ஆம் திகதிகளில் கைது செய்யப்பட்ட இவர்கள் மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.
இவர்கள் நேற்றுச் செவ்வாய்க் கிழமை மன்னார் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.
விளக்கமறியலில் உள்ள 18 தமிழக மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பணிப்புரைக்கு அமைய நேற்று முன்தினம் 4 மீனவர்களும் ஏனைய 14 தமிழக மீனவர்கள் நேற்றும் மன்னார் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டனர்.

(த-56)

## மன்னார்

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், கடந்த 3 வருடங்களின் பின்னர் நேற்றுச் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இணைத் தலைவர்களான அமைச்சர் ரிசாத் பதியுதீன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.
இதன்போது, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் இணைத் தலைவர்களில் ஒருவரான வடக்கு மாகாண முதலமைச்சர் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கான திகதியை கொடுத்திருந்தபோதும், அவர் வருகை தரவில்லை எனக் கூறப்பட்டது.
எனினும் ஏனைய மூன்று இணைத் தலைவர்களாலும், குறித்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாவட்ட அபிவிருத்தி சார்ந்த பல விடயங்கள் தொடர்பில், மக்கள் நலன் சார்ந்ததாக நகர்த்திச் செல்லப்பட்டன.
இதன்போது உள்ளூராட்சி சார்ந்த அபிவிருத்தித்திட்டங்கள் குறித்துப் பேசும்போது, அதற்குப் பொறுப்பாக உள்ள முதலமைச்சரோ, அவருடைய செயலாளர்களோ வருகை தராததால் அந்த விடயம் விரிவாக ஆராயப்படாமல் முடிவுற்றது.
நேற்றையதினம் முதலமைச்சர் வருவதாகக் கூறியபோதும் திடீரென வருகை தரமுடியாது என மாவட்ட செயலருக்கு அறிவித்திருந்தார். எனினும் மக்கள் நலன் சார்ந்த முக்கிய விடயமான உள்ளூராட்சி சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவேண்டிய முதலமைச்சர் காலை வாரி விட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
இதேவேளை, கடந்த வெள்ளிக் கிழமை வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்ட போது, இணைத் தலைவர்களுக்கு நேரம் இல்லை எனத் தெரிவித்துக் குறித்த கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை நடத்துவது என அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-வ-21)

## 30 ஆண்டுகளின்

வரவுள்ளது. இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான இந்தக் கப்பல் நாளை கொழும்புத் துறைமுகத்துக்கு வருவதற்கு முன்னராக, தற்போது அங்கு தரித்து நிற்கும் சீனாவின் மூன்று போர்க் கப்பல்களும் புறப்பட்டுச் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
1985 ஆம் ஆண்டு அமெரிக்காவின் விமானம் தாங்கிப் போர்க் கப்பல் ஒன்று இலங்கைக்கு வந்திருந்தது. அதன் பின்னர், தற்போது இந்திய கடற்படையின் விமானம் தாங்கிக் கப்பல் இலங்கைக்கு வரவுள்ளது. 'ஐ.என்.எஸ். விக்கிரமாதித்யா' என்று பெயரிடப்பட்ட ரஷ்ய தயாரிப்புக் கப்பலே இலங்கைக்கு நாளை வரவுள்ளது.
இந்தக் கப்பலுக்குப் பிரமாண்ட வரவேற்பளிக்க இலங்கைக் கடற்படை தீர்மானித்துள்ளது. 44 ஆயிரத்து 500 தொன் எடையுள்ள இந்தப் போர்க் கப்பலில், 30 மிக்-29 போர் விமானங்களும், ஆறு காமோவ் உலங்கு வானூர்திகளும் தரித்து நிற்கும் வசதிகள் உள்ளன. 110 அதிகாரிகளும், ஆயிரத்து 500 மாலுமிகளும் இதில் பணியாற்றுகின்றனர்.
கொழும்புத்துறைமுகத்தில் தற்போது தரித்து நிற்கும், சீனாவின் மூன்று போர்க் கப்பல்கள் நாளை வியாழக்கிழமை புறப்பட்டுச் செல்லவுள்ள நிலையிலேயே, இந்தியாவின் மிகப்பெரிய போர்க் கப்பலான 'விக்கிரமாதித்யா' கொழும்பு வரவுள்ளது.
இது இந்திய - இலங்கை பாதுகாப்பு உறவுகளில் முக்கிய திருப்பம் என்று கூறப்படுகிறது. (த-5)

## ராணுவம்

டிருந்தனர்.
குறித்த சந்திப்பில் ஒவ்வொரு மாவட்டத்திலும் படையினர் வசம் உள்ள காணிகளால் மீளக்குடியமர முடியாமல் உள்ள விவரங்களை மாவட்ட ரீதியில் ஜனாதிபதி கேட்டறிந்து கொண்டார்.
இதனைத் தொடர்ந்து இன்று புதன்கிழமையிலிருந்து ஒரு மாத காலப் பகுதிக்குள் 5 மாவட்டத்துக்கும் நேரில் சென்று குறித்த பிரதேசங்களை நேரில் பார்வையிட்டு இதனுடன் தொடர்புடைய தரப்புக்களுடன் சந்திப்பை மேற்கொள்ளும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், அதன் இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என ஜனாதிபதி உத்தரவிட்டதாகக் கூறப்பட்டது.
அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் அறிக்கையின் பிரகாரம் மீள் குடியேற்றம் விரைவு படுத்தப்படும் என ஜனாதிபதி தெரிவித்ததாகக் கூட்டத்தில் பங்கு கொண்ட மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

(த-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்கோள் விழாவும்,பொங்கல் விழாவும்

யாழ்ப்பாணம்,ஜன.20
நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால் கோள் விழா மற்றும் பொங்கல் விழா நிகழ்வுகள் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியில்நடைபெறவுள் ளன.

தரம் இரண்டு பொறுப்பாசிரியை செல்வி நி.சாமளா மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், விருந்தி னராக திருமதி மைதிலி தேவராசா கலந்து கொள்வார். (ஐ-ரி5)

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



கடந்த 22.12.2015இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**கந்தசாமி சாம்பசிவம்**

(வல்லை முத்துமாரி அம்மன் ஆலய முன்னாள் தர்மகர்த்தா சபை உறுப்பினர்)

தோற்றம்
27.01.1927

மறைவு
22.12.2015

அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வுகள் நாளை (21.01.2016) வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு வல்வெட்டித்துறை ஊறணி தீர்த்தக் கடற்கரை மண்டபத்தில் நடை பெறும். அத்துடன் அவரின் ஆத்மசாந்திப் பூசைகள் அவரது ஊரிக்காட்டு இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


மேலும் அவரின் மரணச் செய்திகேட்டு தொலைபேசி மூலமும், முகநூல் மூலமும் தொடர்பு கொண்டு துக்கம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் நேரில் கலந்துகொண்ட சகலருக்கும் நன்றி கூறிக்கொள்கின்றோம்.

பிள்ளைகள்– மகன் – சா.மகேந்திரதாஸ்
மகன் – சா.பரந்தாமன்
மருமக்கள் – ஜமுனா, லெஷ்மி
பேரப்பிள்ளைகள் –தயானந்தன் லக்ஷ்மி, லக்ஷ்மன் அம்ருத்தா, ஹரீஸ், சிவானி .
பூட்டப்பிள்ளைகள் – சகானா.

ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.
077 810 6857

குடும்பத்தினர்

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



மண் மகிழ
17.05.1950

கண் நெகிழ
03.02.2012

**அமரர் கந்தப்பு செல்வராசா**

(முன்னாள் காசாளர்- கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம்)

திதி:- ஏகாதசி

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் அப்பாவே!
உங்கள் நினைவுகளில்
மிதக்கின்றோம் அப்பா!

இடைக்குறிச்சி,
வரணி.

(67770)(12.15)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## 43 ஆவது அகவை நிறைவை நினைவு கூர்ந்த அஞ்சலி



**சந்தியாப்பிள்ளை மேரிசெலஸ்ரீன்**

மலர்வு
20.01.1973

உதிர்வு
08.04.2013

**எங்கள் இதய தெய்வமே அப்பா !!!**

அன்பின் திருவுருவாய்
அகத்தின் ஒளிவிளக்காய்
மங்காத பாசத்தோடு
எம்மைப் பேணி வளர்த்த
அப்பாவே!
முகம்தேடி ஆசைமொழி கூறி நல்வழிகாட்டி
வளமாக நாங்கள் வாழ வழிவகுத்த
அப்பாவே!
நாளும் பொழுதும் நினைந்து நினைந்து
அனலிடை மெழுகாய் வெதும்பி
உருகுகின்றோம்
நாங்கள் எல்லாம் ஒன்றாய் இருக்கையிலே
நீங்கள் மட்டும் எம்மைவிட்டு எங்கு
சென்றீர்கள்! அப்பா அப்பா அப்பா
என்று அழுது புலம்பி நின்று
உங்கள் 43 ஆவது அகவை நிறைவை
நினைவு கூர்ந்து
ஆன்மா சாந்திபெற
அஞ்சலி செய்கின்றோம்.

இல.129, நாவலர்வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
ஐயா, அம்மா,
சகோதரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி நாகி நாகன்



கைதடி வடக்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகி நாகன் நேற்று (19.01.2016) செவ்வாய்க்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகனின் அன்பு மனைவியும் சடையன் குஞ்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சங்கரன், சீதேவி, சின்னத்தம்பி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் வாமதேவன்(ராசு - பிரான்ஸ்), யோகேஸ்வரன் (சேகர் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்லப்பா பூரணம் , சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), நவரத்தினம் (சுவிஸ்) மற்றும் காலஞ்சென்ற பொன்னுத்துரை அவர்களின் சிறிய தாயாரும் மீரா (பிரான்ஸ்), லீலாவதி (பிரான்ஸ்) காலஞ்சென்றவர்களான இரத்தினம், சரஸ்வதி மற்றும் ஞானதேவி (பிரான்ஸ்), ராதிகா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மதியழகன் - லனிதா, கோபிஸ்ரீதக்சி, ஜெசி-சோபனா, ராஜ் - செல்வி, நிசா, தர்சன், சிந்துசன், ஜெரோ, சிந்துசா, வியூரன், கயூரன்-தர்மி, சகானா ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.30 மணிக்கு கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.
021 223 1554
தகவல்:
குடும்பத்தினர்.

---

### போர்க்குற்ற

பொறிமுறையாக இருக்காது என்று திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அவை உள்ளகப் பொறிமுறையாகவே இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பரிந்துரைக்கு அமைய, இறுதிப் போரின் போது மனித உரிமைகள் மீறப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை விசாரிக்க, உள்நாட்டு விசாரணைப்பொறிமுறையை உருவாக்குவதற் கான நான்கு விதமான நீதித் துறைக் கட்டமைப்புக்களை அரசு ஆராய்ந்து வருகிறது.

இது தொடர்பான இறுதி முடிவு பெப்ரவரி மாதத்துக்கு முன்னர், அமைச் சரவையில் சமர்ப்பிக்கப்படும். தெரிவுசெய்யப்படும் உள் நாட்டுப் பொறிமுறையானது நாடாளுமன்ற அங்கீகாரத் துக்காக மார்ச் மாதம் முன்வைக்கப்படும். இதனால், ஐ.நா மனித உரிமைகள் சபையின் ஜுன் மாத அமர்வில் வாய்மொழி அறிக்கையைச் சமர்ப்பிக்க போதிய அவகாசம் கிடைக்கும். எத்தகைய வடிவில் அமைத்தாலும், உண்மையைக் கண்டறிதல் - பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் வழங்கல் - மீண்டும் குற்றங்கள் நடக்காதிருப்பதை உறுதிசெய்தல் என்பனவே பொறிமுறையின் பொறுப்பாக இருக்கும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை தொடர்பான இலங்கையின் எதிர்வினைகளைச் சர்வதேச சமூகம் அவதானித்துக்கொண்டிருப்பதால் நாம் விரைந்து செயற்படவேண்டும்.

இந்தப் பின்னணியில் தான், கடந்த வாரம் கொழும்பு வந்த பிரிட்டன் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஹியூகோ ஸுவைர், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஜுன் மாதம் இலங்கை சமர்ப்பிக்கும் வாய்மொழி அறிக்கை வெறும் பூசிமெழுகலாக இருக்க முடியாது என்று தெரிவித்திருந்தார், என்றும் ராஜபக்ச கூறினார்.

(த-5)

---

## மரண அறிவித்தல்

### சுப்ரமணியம் குலதாசன்

(ஓய்வுபெற்ற முகாமையாளர் - இலங்கை வங்கி, கொழும்பு)



பருத்தித்துறையினைப் பிறப்பிடமாகவும் கொழும்பினை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்ரமணியம் குலதாசன் கடந்த 17.01.2016 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் (நில அளவையாளர்) குலமணி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான வங்காளி பொன்னுத்துரை (AI) - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் சுசீலாவின் (Baby) அன்புக்கணவரும் சிவதாசன் (ஆசிரியர்), காலஞ் சென்ற Dr.அருள்தாசன் மற்றும் Dr.ஜெகதாசன், சிவநாயகி, அருள்நாயகி, ஜெகநாயகி ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர், காலஞ்சென்ற பாலசிங்கம் (Engi) மற்றும் Dr.சிவகுமார், திலகவதி, சிவாம்பிகை, ஸ்ரீஸ் கந்தராஜா (லண்டன்), ரவீந்திரராஜா (கனடா), சகுந்தலா, நிர்மலா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்ற நாகரட்ணம் (Research Ass), விமலநாதன் (அமெரிக்கா), சாந்தினி (கொழும்பு), சந்திரா (கனடா) ஆகியோரின் சகலனும் நவரோஜ்(லண்டன்), சகானா(லண்டன் ), பிரவீனா (கணக்காளர்), பிரியந்தி (ஆசிரியை), பிரதீபா (சட்டத்தரணி), தினேஸ் (கனடா), கஸ்தூரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சினி (லண்டன்), அனபாயன் (லண்டன்), சஞ்சயன் (லண்டன்), நிரூபா (ஆசிரியர்), பிருந்தா (DS Office) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ப்ரிட்னியின்(அமெரிக்கா) அன்புப் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.01.2016) திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T1G2, சொய்சாபுர,
மொறட்டுவ, கொழும்பு.
077 9112 836
தகவல்:
சுசீலா (Baby)
(மனைவி)

---

## மரண அறிவித்தல்

### திருமதி மேரிதிரேசா பசுபதி

(ஓய்வுபெற்ற அதிபர்)



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல.17/1, மாட்டின் லேன் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற அதிபர் திருமதி மேரிதிரேசா பசுபதி அவர்கள் 18.01.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (21.01.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ் புனித அடைக்கல அன்னை (O.L.R) ஆலயத்தில் நடைபெற்று பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா (பெரிய கோயில்) சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 4189 469,
077 8172 231
தகவல்:
குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கமுத்து செல்லையா

சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் மாதகல் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டதிருமதி தங்கமுத்து செல்லையா 17.01.2016 ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரி - பொன்னு தம்பதியரின் அன்பு மகளும் கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முத்தையா, செல்லையா, நாகம்மா, வைத்திலிங்கம் மற்றும் சிவத்தினதும் அன்பு சகோதரியும் குணசேகரம் (ஜேர்மனி), தவேந்திரன், ரவிச்சந்திரன் (மெக்கானிக்), லலிதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அனுஷன், துஜீபா, ஜெஷாந், ஜெசிபா, ஆருசன், அக்ஷயன், மிதேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மாதகல் மேற்கு, மாதகல்.
(சி/28735)
தகவல்:
குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் கணபதிப்பிள்ளை

(V.K.கனகபுரம், 3ஆம் பண்ணை)



கிழவி தோட்டம், கரவெட்டி மத்தி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட வல்லிபுரம் கணபதிப்பிள்ளை (V.K) 18.01.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகம்மாவின் அன்புக் கணவரும், வினோதினி (U.K), நவயுகன் (கனடா), செந்தூரன் (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமானந்தம் (U.K), கவிதா (கனடா),பிரவினா (U.K) ஆகி யோரின் அன்பு மாமனாரும், ஆரண்யா, அபிராம், கனிஷா, நித்திலன், திவ்வியன், கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் இரத்தினம், திருச்செல்வம், சிவப்பிரகாசம், பரமேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசிங்கம் (சட்டத்தரணி), நவரத்தினம் (உயர்நிலைப் பட்டயக் கணக்காளர் - சிங்கப்பூர்), சுந்தரவதனா, பாக்கிய லக்ஷ்மி கணேஸ் (இளைப்பாறிய அரசாங்க அதிபர் - யாழ்ப்பாணம்), கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவானந்தம், சந்திரமதி, சிவலிங்கம், நித்தியானந்தன், காலஞ்சென்ற பத்மநிதி மற்றும் செல்வகுமாரி ஆகியோரின் முறைவிவாக வழி மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2016) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கிழவி தோட்டம்,
கரவெட்டி மத்தி கரவெட்டி.
(65903)(11,17,18)
தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:- 077 174 9305, 021 205 6539

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டக்ளஸ் மீதான

டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட 9 பேர் மீது தமிழ்நாடு பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

டக்ளஸ் தேவானந்தா மீதான வழக்கை தனியாகப் பிரித்து விசாரிக்க உத்தரவிடக் கோரி, சென்னை மாவட்ட 4 ஆவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில், தமிழ்நாடு பொலிஸார் சார்பில் கோரப்பட்டது. இதன் பேரில், வழக்கில் தொடர்புடைய சாட்சிகளை நேரில் முன்னிலையாகுமாறு அழைப் பாணை அனுப்ப நீதிபதி சாந்தி உத்தரவிட்டார்.

இந்த நிலையில் வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அரச சட்டவாளர் எம்.பிரபாவதி முன்னிலையாகி, சாட்சிகள் விசாரணையின்போது டக்ளஸ் தேவானந்தா நீதிமன்றத்தில் முன்னிலையாகவேண்டும் அல்லது உயர் நீதிமன்றம் ஏற்கனவே பிறப்பித்த உத்தரவுப்படி, நேரலை காணொலி மூலம் அவரிடம் விசாரிக்கவேண்டும் என்று முன்னரே மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றார்.

அதற்கு நீதிபதி சாந்தி, நேரலை காணொலி வசதியை நீதிமன்றத்தில் செய்து தரக் கோரி சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதிக்கு கடிதம் எழுத வேண்டியுள்ளது. அதன் பின்னர் டக்ளஸ் தேவானந்தா நேரில் முன்னிலையாவது குறித்து முடிவு செய்யப்படும் என்றார்.

இதையடுத்து, பொலிஸ் தரப்புச் சாட்சி குருமூர்த்தி முன்னிலையாகி வாக்கு மூலம் அளித்தார். இதையடுத்து விசார ணையை பெப்ரவரி முதலாம் திகதிக்கு நீதிபதி ஒத்தி வைத்தார். (த-5)

## பல்கலை

கழகங்களுக்குத் தெரிவாகியிருப்பவர் களின் எண்ணிக்கையின்படி இந்த விகிதாசாரம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் படி,யாழ். மாவட்டத்தில் பரீட்சைக்கு 7 ஆயிரத்து 346 விண்ணப்பதாரிகள் தோற்றியிருந்தனர். அவர்களில் 4 ஆயிரத்து 872 பேர் அதாவது 66.33 என்ற விகிதா சார அடிப்படையில் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளனர் என்று பரீட்சைகள் திணைக்களம் கூறியுள்ளது.

இந்த விகிதாசார முறையில், குறைந்த பட்ச விகிதாசாரத்தைப் பொலனறுவை மாவட்டம் பெற்றுள்ளது. அங்கு பரீட்சைக்குத் தோற்றியிருந்த 3 ஆயிரத்து 455 விண்ணப் பதாரிகளில் பல்கலைக்கழகப் பிரவேசத் துக்குத் தகுதி பெற்றுள்ளோரின் எண்ணிக்கை ஆயிரத்து 961 பேராகும். விகிதாசாரம் 56.76 ஆக உள்ளது.

மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திராத பாடசாலை விண்ணப்பதாரிகளில் அதிக தொகையினர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அது 2 ஆயிரத்து 71 ஆகும். இதன் விகிதாசாரம் 7.99 ஆக உள்ளது. இரண்டாம் இடத்தை கம்பஹா மாவட்டம் பெற்றுள்ளது. அந்த மாவட்டத்தில் ஆயிரத்து 771 பேர் மூன்று பாடங் களிலும் சித்தியடைந்திருக்கவில்லை. அதன் விகிதாசாரம் 9.23 என பரீட்சைகள் திணைக்களம் தெரிவிக்கின்றது.

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் முதலாம் இடம் மேல்மாகாணத்துக்கும், பௌதிக விஞ்ஞானம் மற்றும் பொறியியல் என்ற பிரிவுகள் இரண்டில் முதலாம் இடம் வடக்கு மாகாணத்துக்கும், உயிரியல் விஞ்ஞானம் மற்றும் வர்த்தகப் பிரிவுகள் இரண்டில் முதலாம் இடம் சப்ரகமுவ மாகாணத்துக்கும், கலைப்பிரிவில் முதலாம் இடம் ஊவா மாகாணத்துக்கும் கிடைத்துள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (த-4-22)

## உறுப்பினர்

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் எந்தப் பதிலும் வழங்கவில்லை. உலக வங்கியின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டத்துக்கு மாத்திரம், வடக்கு மாகாண சபையின் யாழ்.மாவட்டத்தைப் பிரதிநித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்கு முதலமைச்சரின் அலுவலகத்தினால் அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் – முதலமைச்சர் இடையேயான சந்திப்பு கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்றிருந்தது. இந்தக் கூட்டத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிப்பதற்காக 17 ஆம் திகதி கூட்டத்தை நடத்துவோம் என்று முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் திடீரெனக் கடந்த 17 ஆம் திகதிக் கூட்டத்தை இடைநிறுத்துவதாக முதலமைச்சர் தன்னிச்சையாக அறிவித்திருந்தார். தனிப்பட்ட காரணத்துக்காகக் கூட்டத்தை இடைநிறுத்துவதாக அவர் தனது பிரத்தியேகச் செயலாளர் ஊடாகவே உறுப்பினர்களுக்குத் தகவலை வெளிப் படுத்தியிருந்தார்.

இவ்வாறு இடைநிறுத்தப்பட்ட கூட்டத்தை இன்று மாலை 5 மணிக்கு முன்னர் நடத்தவேண்டும் எனக்கோரி நேற்று முன்தினம், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் – அமைச்சர்கள் இணைந்து முதலமைச்சருக்குக் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தக் கோரிக்கைக்கு முதலமைச்சர் நேற்று இரவு வரை எந்தப் பதிலும் வழங்கவில்லை. ஆனாலும், உலக வங்கியின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டத்தில் பங்குபற்றுமாறு வடக்கு மாகாண சபையின் யாழ்.மாவட்ட உறுப்பினர்களுக்கு, முதலமைச்சரின் அலுவலகத்தினால் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## இலங்கையில்

கனேடியத் தமிழர் பேரவை இந்த ஆண்டு நடத்திய பொங்கல் விழாவில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தனுக்கு 'வாழும் வீரர்' என்ற விருது வழங்கப்பட்டது. இந்த விருதை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இரா. சம்பந்தன் சார்பாகப் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்விலேயே, கனேடிய வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கனேடிய வெளியுறவு அமைச்சர் ஸ்ரபேன் டியோன், இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான, நீதியான தீர்வு காண்பதில் கனடா அக்கறையோடு இருப்பதாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், கடந்த ஒக்ரோபர் முதல் நாள் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவும் இலங்கை அரசும் கூட்டாக முன்மொழிந்த தீர்மானம் நிறைவேற்றப் பட்டதற்கு கனடாவின் பங்களிப்பு முக்கியமாக அமைந்திருந்தது. அதற்காக கனேடிய அரசுக்கு நன்றி சொல்ல தமிழ் தேசியக் கூட்டமைப்புக் கடமைப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இனப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான, நீண்ட காலம் நிலைத்து நிற்கக் கூடிய அரசியல் தீர்வ எட்டலாம் என்ற நம்பிக்கை சம்பந்தன் ஐயாவுக்கு இருக்கிறது. அதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டு வருகிறோம் - என்றார்.

இந்த விழாவுக்குக் கனேடிய வெளியுறவு அமைச்சர் ஸ்ரபேன் டியோன், குடிவரவு மற்றும் குடியுரிமை அமைச்சர் யோன் மக்கலம், ஒன்றாறியோ மாகாண முதலமைச்சர் கத்லீன் வின், ஒன்றாறியோ மாகாண எதிர்க்கட்சித் தலைவர் அன்ரியா கோர்வத், ரொறன்ரோ மாநகர சபை முதல்வர் யோன் ரோறி, மார்க்கம் நகர சபை மேயர் பிராங் ஸ்காப்பித்தி, இஸ்ரோவில் மாநகர முதல்வர், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட மூன்று மட்ட அரசுகளில் உள்ள மக்க ளால் தெரிவு செய்யப்பட்ட 50 மேற்பட்ட பிரதிநிதிகள் நேரில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். (த-5)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
இராசா முருகையா
திதி:- 20.01.2016

தோற்றம்
22 . 05 . 1946

மறைவு
17 . 01 . 2011

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய தெய்வமே! என்றும்
உங்கள் நினைவுகளுடன் வாழ்கின்றோம்.

கந்தரோடை
மேற்கு,
சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# எட்டாம் ஆண்டு நினைவலைகள்





தோற்றம்
23 . 06 . 1949

மறைவு
20 . 01 . 2008

அமரர் அந்தோனிப்பர்னாந்து செபமாலைமுத்து
(பாதுகாப்பு உத்தியோகஸ்தர் யாழ். பல்கலைக்கழகம்)

பப்பா ! எத்தனை ஆண்டுகள் கடந்து
சென்றாலும் உங்கள் பசுமையான
நினைவுகளுடன் நாங்கள்.

இல.15/1, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(87692)(12.15.18)

குடும்பத்தினர்.

நியத்த ஜய
வெற்றி வாரம் : 429
திகதி : 19-01-2016
வர்ணம் : மஞ்சள்
14 41 45 58 P
எதிர்வரும் வெள்ளிக்கிழமை
ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ. 20,896,300/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

இம்முறை
தனயோகம்
உங்களுடையதா?
திகதி 19.01.2016
வெற்றி வாரம் 1931
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள்
02 06 20 25
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 3,264,060/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 அழைப்பு இலக்கம்: 1919

# ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
மரியம்மா ஆசீர்வாதம்

அன்னை மடியில்
02.07.1939

ஆண்டவர் அடியில்
19.01.2015

பாசத்தின் சிகரமாய் பொறுமையின் ஊற்றாய்
வாழ்ந்த எம் தாயே...
உம் இதயக் கமலத்துக்கு எம் கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம் தாயே...
நீர் எம்மையும் இவ்வுலகையும் விட்டு பிரிந்து
ஓராண்டு சென்றாலும் எம் நெஞ்சத்தில் என்றும் நீங்காத
நினைவுகளுடன் வாழ்கின்றாய் தாயே...

உம் ஆன்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இல.2 [illegible]

இவரது பிரிவால் துயருறும் [illegible]

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மனம் மகிழ
1974 . 02 . 23

மதி கலங்க
2015 . 01 . 30

அமரர்
பாலசுப்பிரமணியம் தர்மசீலன் (B.Sc, Dip.in.Edu.)
(ஆசிரியர்- பௌதீகவியல், யா/ அருணோதயாக்கல்லூரி,
வளவாளர் - வலிகாமம் கல்வி வலயம், உதவிப் பரீட்சகர் F.W.C)
(திதி:-சுவர்க்க ஏகாதசி)

பண்பின் சிகரமே பாசத்தின் பிறப்பிடமே
எண்ணற்ற மாணவர் கல்வியிலே உயர்வுபெற
தன்னலமற்ற மாண்புமிகு ஆசானாய்
தரணியிலே தாரகை நடு வெண்தண்மதியாய்த் திகழ்ந்தவரே
கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளத்தால்
கயவரைக்கூட கண்ணீர் மல்கச் செய்தவரே
நோயென்று பாயினிலே நொடிப்பொழுதும் உறங்காத உத்தமரே
சத்திர சிகிச்சையென்னும் உயர் சிகிச்சையின்
சதியினாலே காலனவன் உமதுயிரை
சடுதியிலே கவர்ந்த பேரிடியை
சற்றும் தாங்க முடியாது பெற்ற தாயின்
உயிர் துடியாய்த் துடிக்கிறதே
உற்ற துணையின்றித் தத்தளிக்கும் - உம்
உயிரான மனைவி பிள்ளைகள் கதிகலங்குகின்றனரே
சிறகொடிந்த பறவைபோல் சகோதரி அல்லுற
வழிகாட்டியின்றி வருந்தும் மைத்துனர்கள் மதிமயங்க
ஈராறு மாதங்களென்ன ஈரேழு ஜென்மங்கள்
எடுத்தாலும் பசுமரத்தாணியாய் உம் நினைவு
எம் உள்ளங்களில் நிலைத்து நிற்குமே
எம் குடும்ப விளக்கின் ஆத்மா இறைபாதத்தில்
நிரந்தர அமைதி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

டச்சு வீதி, அளவெட்டி மத்தி.
அளவெட்டி.

(67568)(11.16)

குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய நடுத்தர குடும்பம் ஒன்றுக்கு, யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் வீடு வாடகைக்குத் தேவை.

T.P:
0777 437156

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் விக்டோரியா வீதியில் சுபாஸ்-ஞானம்ஸ் ஹோட்டல் அருகில் 1¾ பரப்பளவில் 3 படுக்கை அறையுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: இரத்தினசிங்கம்
தொலைபேசி இல. 004162974067
மின்னஞ்சல். josephra2008@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேகத்தை இழக்கும் ஆடுகளங்கள் ஆஸியின் லீ கவலை தெரிவிப்பு

இந்தியா - ஆஸ்திரேலியா தொடருக்காக ஆஸியில் அமைக்கப்படும் ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக அமைக்கப்பட்டாலும் பவுன்சர் பந்தை வீசும் அளவுக்கு முரட்டுத் தனமாக இல்லாதமைக்கு ஆஸ்திரேலியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான லீ கவலை தெரிவித்துள்ளார்.

ஐந்துஒருநாள்ஆட்டங்கள் கொண்ட தொடரில் இந்தியா விளையாடி வருகிறது. முதல் ஆட்டம் பேர்த்திலும், 2ஆவது ஆட்டம் பிரிஸ்பெயினிலும் நடைபெறும் வகையில் அட்டவணை தயாரிக்கப்பட்டிருந்தது.

உலகின் அதிகவேக ஆடுகளமாகக் கருதப்படும் வாகா (பேர்த்), அதிக அளவில் திரும்பல் தன்மையுடைய ஆடுகளமான (பிரிஸ்பெயின்) ஆகியவற்றில் முதல் இரண்டு ஆட்டங்களும் நடைபெற்றன. வேகப் பந்து மூலம் இந்தியாவை மிரட்டி மனதளவில்தோற்கடிக்க ஆஸ்திரேலியா திட்டமிட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால், அனைவரும் எதிர்பார்த்ததற்குமாறாகமுற்றிலும் துடுப்பாட்டத்துக்கு சாதகமான வகையில் குறிப்பாக பவுன்சர்களை வீச முடியாத வகையில் இரண்டு ஆடுகளத்தையும் மாற்றிவிட்டனர். இதனால் இந்தியா இரண்டு ஆட்டங்களிலும் 300 ஓட்டங்களைக் கடந்தது.

அதேபோல் ஆஸ்திரேலியா இரண்டு ஆட்டங்களிலும் இலக்கை விரட்டிப் பிடித்தது. வேகப்பந்துக்கு பெயர் போன ஆடுகளம் இந்த அளவிற்கு மந்தமாகிவிட்டதே என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச் சாளர்பிரெட் லீ கண்ணீர் வடிக்காத குறையாக புலம்பியுள்ளார்.



ஆஸியின் ஆடுகளங்கள் தொடர்பாக லீ தெரிவிக்கையில், ஆஸ்திரேலியா ஆடு களங்கள் குறித்து நான் உண்மையிலேயே ஏமாற்றம் அடைகிறேன். நீங்கள் ஒரு வேகப்பந்து வீச்சாளராக இருந்தால் ஆடுகளத்தில் அதிகளவு புற்கள் இருப்பதைத் தான் விரும்புவீர்கள்.

நாம் விரும்புவதெல்லாம் துடுப்பாட்ட வீரர்களுக்கும் பந்துவீச்சாளர் களுக்கும் இடையே கொஞ்சம் போட்டி இருக்க வேண்டும் என்பதுதான்.

ஆஸியின் ஆடுகளங்கள் வேகத் துக்கு சாதகமான பழைய நிலைமைக்கு வரவேண்டும் என்பது தான் எனது விருப்பம்- என்றார். (ம)

## மீண்டும் அணியில் சோன் ரைட் ஆஸியின் ரி—20 அணி அறிவிப்பு

இந்தியாவுக்கு எதிரான ரி-20 தொடரில் விளையாடும் ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. நீண்ட இடைவேளைக்குப் பின்னர் மீண்டும் அணியில் இடம்பிடித்துள்ளார் ரைட். இவர் 161.1 கி.மீற்றர் வேகத்தில் பந்துவீசி உலகளவில் 3ஆவது அதிவேகப் பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றவர். ரைட் கடந்த 2005ஆம் ஆண்டு டெஸ்ட் தொடரில் அறிமுகமானார். 2007 இல் ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்களில் அறிமுகமானார். 3 டெஸ்ட், 35 ஒருநாள் மற்றும் 19 ரி-20 தொடர்களில் மட்டுமே விளையாடியுள்ளார். ஆஸ்திரேலிய அணியில் கடந்த 2011ஆம் ஆண்டு இடம் பிடித்ததற்குப் பின்னர் 5 வருடங்களுக்குப் பின் தற்போது இந்தியாவிற்கு எதிரான தொடரில் இடம் பிடித்துள்ளார். 17 வீரர்கள் கொண்டதாக அணி அறிவிக்கப்பட்டுள்ளது.


ரி-20 தொடருக்கான ஆஸ்திரேலிய அணி:- ஆரோன்பிஞ்ச் (தலைவர்), வோர்னர், சிமித், வற்சன், மக்ஸ்வெல், வேட், பல்க்நெர், கஸ்டிங்ஸ், மார்ஷ், கமரூன், லையன், கிறிஸ்லின், டிராவிஸ், றிச்சாட்சன், அன்ரூ டை, போலந்து, ரைட். (ம)

## இந்தியா - ஆஸ்திரேலியா நான்காவது ஆட்டம் இன்று

இந்தியா - ஆஸ்திரேலியாவுக்கு இடையிலான நான்காவது ஒருநாள் ஆட்டம் இன்று கான்பெரா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதல் மூன்று ஆட்டத்திலும் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா 3:0 என்ற அடிப்படையில்தொடரைக் கைப்பற்றியுள்ளது. இதனால் ஏனைய இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி பெற்றாலும் இந்தியாவால் தொடரைக் கைப்பற்ற முடியாது.

ஆனால் தரப் படுத்தலில் இரண்டாமிடம் என்ற அந்தஸ்தைத் தக்க வைக்க வேண்டுமாயின் இரண்டு ஆட்டங்களில் ஒன்றிலாவது வெல்ல வேண்டிய கட்டாயம் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. (ம)



# சொல்லி அடிக்கும் கோக்லி பெருமை பாராட்டும் அக்ரம்

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. இதுவரை மூன்று ஆட்டங்கள் முடிவடைந்துள்ளன. மூன்றிலும் ஆஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரை 3-0 எனக் கைப்பற்றி முன்னிலையில் உள்ளது.

முதலாவது ஆட்டம் 12ஆம் திகதி பேர்த்தில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் தலைவர் கோக்லி 91 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரரும், இடது கை வேகப்பந்து வீச்சாளருமான வசிம் அக்ரம் வர்ணனையாளராக இருந்தார். அவர் ஆட்டம் முடிந்த பின்னர் விராட் கோக்லியிடம், 91 ஓட்டங்களில் ஆட்டமிழந்துவிட்டீர்கள். உங்களுக்கு சதம் அடிக்கும் அதிர்ஷ்டம் இல்லை என்றார். இதற்கு விராட் கோக்லி வசிம் பாய், நான் சொல்வதை கேளுங்கள் இந்தத் தொடரில் நான் இரண்டு சதங்கள் விளாசுவேன்" என்று வாக்குறுதி கொடுத்தார்.

பிரிஸ்பேனில் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் கோக்லி 59 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மெல்பேர்ணில் நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தில் சதம் அடித்து அக்ரத்திற்கு கொடுத்த வாக்குறுதியில் பாதியை நிறைவேற்றிவிட்டார்.

இன்னும் இரண்டு ஆட்டங்கள் இருப்பதால் அதில் மற்றைய சதத்தையும் அடித்து வாக்குறுதியை கோக்லி நிறைவேற்றிவிடுவார் என்று அக்ரம் நினைவு கூர்ந்துள்ளார். (ம)

## வீனஸ் வில்லியம்ஸ் அதிர்ச்சித் தோல்வி

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் மெல்பேர்ண் நகரில் நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவில் தனது முதல் சுற்றில் வீனஸ் வில்லியம்ஸ் அதிர்ச்சித் தோல்வியடைந்துள்ளார்.

சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் 8ஆம் இடத்திலுள்ள வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ்தனதுமுதல் சுற்றில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஜோகன்னாவை எதிர்கொண்டார். இதில் யாருமே எதிர்பார்க்காத வகையில் வீனஸ் அதிர்ச்சிகரமாகத் தோற்றார். ஜோகன்னா 6:4, 6:2 என்ற நேர்செற் கணக்கில் வீனஸை வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூதாட்டத்தில் ஈடுபட்டவர்களின் விவரங்களை வெளிப்படுத்துங்கள்

## ரென்னிஸ் சம்மேளனத்திடம் வலியுறுத்துகிறார் சுவிற்சர்லாந்தின் முன்னணி வீரரான பெடரர்



சர்வதேச ரென்னிஸ் தொடர் களில் சூதாட்டம் இடம்பெற்றதாக வெளியாகிய செய்தியை அடுத்து, அவ்வாறு சூதாட்டத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் அல்லது சந்தேகிக்கப்படும் வீர, வீராங்கனைகளின் பெயர் விவரங்கள் பகிரங்கப்படுத்தப் பட வேண்டும் என்று சர்வதேச ரென்னிஸ் சம்மேளனத்தை முன்னணி வீரரான பெடரர் வலியுறுத்தியுள்ளார்.

விம்பிள்டன் (இங்கிலாந்து ரென்னிஸ் தொடர்) உட்பட முன் னணி ரென்னிஸ் தொடர்களில் ஆட்ட நிர்ணயச் சூதாட்டம் நடைபெற்றதாகசர்வதேசசெய்திநிறுவனங்கள் சில பரபரப்பான தகவலை வெளியிட்டிருந்தன. கடந்த 10 ஆண்டுகளில் தரப்படுத்தலில் முதல் 50 இடங்களில் உள்ளவர்களில் 16 வீரர், வீராங்கனைகள் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக குறித்த செய்தி நிறுவனங்கள் குறிப்பிட்டிருந்தன. மேலும் விம்பிள்டன் தொடர்களில் 3 ஆட்டங்களில் சூதாட்டம் நடைபெற்றதாகவும், ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் இதுவரை 8 வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டிருந்தன. செய்திகளை நியமாக்கும் வகையில் தற்போதைய ரென்னிஸ் தரப் படுத்தலில் ஆண்கள் பிரிவில் முதலிடத்தில் உள்ளவரான ஜோகோவிக், கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ரஷ்யாவில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் தன்னை பெரும் தொகை பணத்துடன் சூதாட்டத் தரகர்கள்அணுகியதாகவும்,தோல்வியடையுமாறு தன்னைக் கேட்டுக்கொண்டதாகவும் அதற்கு உடன்பட மறுத்து அவர்களை எச்சரிக்கை செய்து அனுப்பியதாகவும் தெரிவித்தார்.

சூதாட்டம் தொடர்பான இந்த குற்றச்சாட்டுக்கள் முன்னணி வீரர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளன. 17 சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களை வென்று சாதனை படைத்தவரும், உலகின் மூன்றாம் நிலை வீரருமான பெடரர் இது குறித்து தெரிவிக்கையில் - சூதாட்டத்தில் ஈடுபட்டதாக சந்தேகப்படும் வீரர்களின் பெயர்விவரத்தைவெளியிடவேண்டும். இதுவே அதற்குச் சரியான நேரம்.

இந்த செய்தி அறிந்த பிறகு ஆட்டத்தில் கவனம் செலுத்த முடியவில்லை. இதுபற்றியே விவாதிக்கப்படுகிறது. சூதாட்டத்தில் ஈடுபட்ட வீரர் யார்? அவருக்கு யார் ஆதரவு? ஒற்றையர் பிரிவு வீரரா? இரட்டையர் பிரிவு வீரரா?, எந்த தொடர்? என்று அனைவரும் விவாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படுவர்களின்பெயர்விவரத்தைவெளியிட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

## ஜொலிஸ்ரார் கிண்ண முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 20

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக் கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆண் களுக்கான ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி மோதிக் கொண்டது.

இதில் சென்ற லைட்ஸ் சொக்ஸ் அணி 74:51 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் புளூஸ் அணி மோதிக் கொண்டது. இதில் கே.ஸி.ஸி.ஸி. அணி 72:54 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## வருடாந்த விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன. 20

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த விளையாட்டு போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் [illegible]ா.நவரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் உறுப்பினர் எஸ். சுகிர்தன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)

## விளையாட்டு அலுவலர்கள் நியமனம்

வலி. வடக்கு, ஜன. 20

வடமாகாணத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக நிலவி வந்த விளையாட்டு அலுவலர்களின் வெற்றிடங்கள் வடமாகாண கல்வி, பண்பாட்டுஅலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் நேற்று நிரப்பப்பட்டுள்ளன.

பரீட்சையைத் தொடர்ந்து இடம்பெற்ற நேர்முகப் பரீட்சைகளின் அடிப்படையில் 28 விளையாட்டு அலுவலர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு குறித்த அமைச்சின் செயலாளர் எஸ்.ரவீந்திரன் தலைமையில் நல்லூர் முத்திரைச்சந்தியில் அமைந்துள்ள கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்றது. (ம-86)

## மத்தியிடம் வீழ்ந்தது பற்றிக்ஸ்; இன்னிங்ஸ் வெற்றியாகவும் பதிவு

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் 19 வயதுப்பரிவு ஆண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டம் ஒன்றில், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை இன்னிங்ஸாலும் 12 ஓட்டங்களாலும் வீழ்த்தியது யாழ். மத்திய கல்லூரி அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணி களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 171 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ரதிஸ்சன் 49 ஓட்டங்களையும் அலன்டின் 36 ஓட்டங்களையும் டானியல் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் ஸ்ரிபன்ராஜ் 4 இலக்குகளையும், தசோபன் 3 இலக்குகளையும், அலன்ராஜ் ஓர் இலக்கையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ். மத்திய கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 320 ஓட்டங்களைப்பெற்றது. அதிகபட்சமாக அலன்ராஜ் 95 ஓட்டங்களையும், கிருபாகரன் 59 ஓட்டங்களையும், ஸ்ரிபன்ராஜ் 59 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 149 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கிய சென்.பற்றிக்ஸ் 137 சகல இலக்குகளையும் பறி கொடுத்தது. முடிவில் இன்னிங்ஸாலும் 12 ஓட்டங்களாலும் மகுடம் சூடியது மத்தி. (ம-23)



## முருகுசா அபார வெற்றி

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் ரென்னிஸ் தொடரில், முருகுசா தனது முதல் ஆட்டத்தில் நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.தரப்படுத்தலில் மூன்றாம் நிலை வீராங்கனையான ஸ்பெயினின் கார்பன் முகுருசா தனது முதல் சுற்றில் எஸ்டோனியாவை சேர்ந்த அனெட்டை சந்தித்தார். முதல் செற்றில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய முருகுசா 6:0 என்ற கணக்கில் கைப்பற்றினார். இரண்டாவது செற் அவருக்கு சிறிது சவாலாக அமைந்தது. இருப்பினும் அந்த செற்றை 6:4 என்ற கணக்கில் வென்று 2:0 என்ற நேர் செற் [illegible] இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். (ம)

## இன்றைய மோதல்கள்

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

யாழ்ப்பாணம், ஜன. 20

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம்வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யுனிபைட் அணியை எதிர்த்து கோல்டன் பிரதேர்ஸ் அணி மோதவுள்ளது.

**றோயல் வி.கழகத் தொடர்**

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இடம் பெறும் ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணியை எதிர்த்து மன்னார் அந்தோனியார் புரம் சென்.அன்ரனிஸ் அணி மோதவுள்ளது.

**ஜொலிஸ்ரார் வி.கழகத் தொடர்**

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் புளூஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

## யங்ஹென்றிஸ் அபாரம்

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாணரீதியாகநடத்தும் கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில்நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில்பாஷையூர்சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை யங் ஹென்றிஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"DELEVERY BOYS" தேவை
உடன் தொடர்பு கொள்க.
077 348 4837

## சிறுநீரகம் தேவை

B Positive குருதி வகையைச் சேர்ந்த ஒருவருக்கு 25-55 வயதுக்குட்பட்ட "B" அல்லது "O" குருதி வகைகளை உடைய வர்களின் சிறுநீரகம் தேவை. சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:-
011 254 6581, 077 320 7727



* (Consultant orthodontist)
* (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் டெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006

றோயல் மெடிக்கல் சென்ரர்
151, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731

## விற்பனைக்கு

தொடர்பு: 076 8025 826

வாழைக்குட்டி விற்பனைக்குண்டு

கதலி, இதரை, கப்பல், மொந்தன் வாழைக்குட்டிகள் விற்பனைக்குண்டு.

## காணி விற்பனைக்கு உண்டு

சாவகச்சேரி, சங்கத்தானை தட்டா தெருவில் உள்ள 7 பரப்பு 11¼ குளி விஸ்தீரணம் கொண்ட காணி உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 324 6448, 075 699 3409

## விடைபெறுகிறார் பெரேரா?

இலங்கை அணியின் சகலதுறை வீரரான திசர பெரேரா சர்வதேச டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. 26 வயதான திசர பெரேரா, தனது ஓய்வு தொடர்பான கடிதத்தை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு அனுப்பியுள்ளார். அவர் 20 ஓட்டங்களையும் 11 இலக்குகளையும் எடுத்துள்ளார். இவரது ஓய்வு தொடர்பான கடிதத்தை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஏற்குமா? ஏற்க மறுக்குமா? என்பதே கேள்வி. (ம)

## புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயாராகும் தரம் 4, 5 மாணவர்களுக்கு!

# புலமைச்சங்கமம்

கணிதம், தமிழ், சுற்றாடல் சார்செயற்பாடுகள், ஆங்கிலம், அழகியல், விளையாட்டு, சிங்களம் ஆகிய பாடங்களின் தொகுப்பு விடைகளுடன்.

தரம் 4 விலை : 350/-
தரம் 5 விலை : 550/-

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

வெளியீடு: யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
10-1/1, ஜிந்துப்பிட்டிய வீதி கொழும்பு 13. தொ. பே : 077 6258778

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த, சதயம் நட்சத்திரம் கும்பராசியில் பிறந்த 4 இல் சூரியன் செவ்வாய், கிரகபாவம் 10 கனடா குடியுரிமை உடைய மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.
(திருமண தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்).

தொடர்பு:-
077 989 8467, 077 529 1230.

## SPOKEN ENGLISH

WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

பாடப்புத்தகங்கள், Video DVD, சான்றிதழ் முற்றிலும் இலவசம்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 23.01.2016 சனிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.பகல் | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

23.01.2016 இற்குமுன் விண்ணப்பித்தல் வேண்டும்! ஒரு பிரிவில் 20 பேர் மட்டுமே!

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

# பிரெஞ்சு மொழி



* பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRANCE EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
* INTERNATIONAL DIPLOMA (DELF A1): இலங்கையில் AF மட்டுமே இப் பரீட்சையை நடாத்துகிறது. இதனைப் பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை. கட்டணம் AF மாணவர்களுக்கு 4000/= ஏனையோருக்கு 10300/= கொஞ்சம் பிரெஞ் படித்தவர்களும் எம்முடன் இணையலாம். மொழி பெயர்ப்புகள்



மாணவர்களுக்கு 40% கழிவு

* இலவசம் படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை.
* யாழ், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.



ஆரம்பம் 31.01.2016 2 p.m உடன் தொலைபேசியில் பதியவும்.
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF [வெள்ளை மாடிக்கட்டடம்]

## வேலைவாய்ப்பு (2016)

முல்லைத்தீவில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள Ds-max நிறுவனத்தில் 04 வகையான பதவி வெற்றிடங்கள் உள்ளன
O/L & A/L, படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்

* அனுபவம் அவசியமற்றது
* தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு.
* சம்பளம் 12,000/= - 15,000/=
* 12 பேர்மட்டும் தேவை.

தொடர்புகளுக்கு: 077 136 3797, 077 5566 226

## பதவி வெற்றிடம்

நான்கு வகையான பதவிகள்
**Golden Group Company** யில் புதிதாக வேலை தேடுபவர்கள் எம்முடன் இணையுங்கள்.

* விநியோகஸ்தர் * மேற்பார்வையாளர்
* உதவி முகாமையாளர் * அலுவலக பெண் (**Administration**)

ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும். தூர இடங்களிலிருந்து வருபவர்களுக்கு தங்குமிடம், உணவு இலவசம்.
தகைமை :- **O/L - A/L, O/L** இல்லாதவர்களுக்கு பயிற்சி அளித்து உள்வாங்கப்படுவர்.
வயதெல்லை: 18-40.
021 300 4664, 077 621 9536
சின்னக்கடை சிறைச்சாலைக்கு அருகில் விஜிதா ஹோட்டேல் முன்லேன்
**No:8th 6th cross street, Jaffna,**




வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம்
பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10, தொ: 011-7607200 மோட்டார் சைக்கிள் காட்சியறை : 195, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய. தொ: 011-7607450
மட்டக்களப்பு கிளை இல 425, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு தொ.பே: 065-7607200 உதிரிப்பாக கிளை : இல : 01 ஜயந்த வீரசேகர மாவத்த கொழும்பு - 10.
தொ: 0117 607 770/0117 607 771

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.